Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 29 செவ்வாய்க்கிழமை (12.05.2015) பக்கங்கள் 20 ஓசை – 224

## தேர்தல் முறை மாற்றம்

# ஆலோசனை சமர்ப்பிக்க காலக்கெடு



கோப்புப் படம்

(கொழும்பு)

அரசியல் அமைப்பு சட்டத் திருத்தத்தின் மூலமாக உருவாக்கப்படவிருக்கும் புதிய தேர்தல் முறைமைக்கான ஆலோசனைகளைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு ஒன்றை அரசு விதித்துள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக அரசியல் கட்சிகள் ஆலோசனைகளை சமர்ப்பிக்க விரும்பினால் இன்று நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக சமர்ப்பிக்கும்படி கேடடுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

தேர்தல் முறை மாற்றம் குறித்து நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் முக்கிய கூட்டமொன்று நடைபெற்றது.

கட்சித் தலைவர்கள் மற்றும் கட்சிப் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் பங்கேற்றிருந்ததாக ஜனாதிபதி செயலகம் தகவல் வெளியிட்டுள்ளது.

தேர்தல் முறைமை மாற்றம் குறித்த அமைச்சரவைப் பத்திரம்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜெயா விடுதலை

மீண்டும் முதல்வராக வாய்ப்பு



(சென்னை)

சொத்துக்குவிப்பு வழக்கில் தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா உட்பட நான்கு பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கு விசாரணை கர்நாடக உயர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், நேற்றுக் காலை தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் ஜெயலலிதா,

19 ஆம் பக்கம் பார்க்க

## வலி. வடக்கில் கண்ணி அகற்றல் மீண்டும் அமுல்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீண்டும் கண்ணி வெடி அகற்றும் செயற்றிட்டம் அமுல் செய்யப்படவுள்ளது.

வலி. வடக்கில் மீள்குடியமர்வுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலிருந்து தொடர்ச்சியாக குண்டுகள், வெடிபொருட்கள் கிணற்குள் இருந்து மீட்கப்பட்டு வருகின்றன.

எனவே விடுவிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள கிணறுகளை மீளச் சோதனை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மீள்குடியமர்வு தொடர்பிலான கலந்துரையாடல்

19 ஆம் பக்கம் பார்க்க

## பெண்ணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மூளாய், கொத்தத்துறைப் பகுதியில் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் இளம் பெண்ணொருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கொத்தத்துறை இந்து மயாணத்திற்கு சுமார் 200 மீற்றர் தொலைவில் மேற்படி சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை தெற்கு இன்பசோலையைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் யோகேஸ்வரி (வசந்தி) என்பவரது சடலமே இவ்வாறு காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (25)

## வடக்கில் மந்த போசாக்கு: சிறுவர்கள் பாதிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் உள்ள சிறுவர்கள் போசாக்கு குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாக, சிறுவர் பாதுகாப்பு அமைப்பு (Save the Children) உலகளாவிய அறிக்கையில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிறுவர்கள் மற்றும் தாய்மாரின் வாழ்க்கைத் தரத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வை உள்ளடக்கிய

19 ஆம் பக்கம் பார்க்க

## சஜின் வாஸ் கைது



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலக வாகனங்களைத் தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் இவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏற்கனவே இந்தக் குற்றச்சாட்டில் அவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினால் விசாரிக்கப்பட்டு

19 ஆம் பக்கம் பார்க்க

கடந்த வெள்ளியன்று யாழ்ப்பாணம் வந்திருந்த பொதுநிர்வாக அமைச்சர் கரு ஜயசூரியவை பலாலி இராணுவ முகாமுக்கு சென்று சந்தித்து மகிழ்ச்சியோடு வழியனுப்பி வைத்த முதலமைச்சர்...

மக்களுக்காக எதையாவது கேட்டாரா?

தமிழரசுக் கட்சி அறிவித்தபடி அகிம்சைப் போரை தொடங்காத 133 வது நாள்



## தெய்வீகப் பேருரை

வட்டுக்கோட்டை - காக்கையம்பதி ஸ்ரீ காளிகாதேவி திருக் கோவில் அலங்கார உற்சவத்தில் 'தேவிபாகவம்' எனும் பொருள் பற்றிச் செல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் தெய்வீகப் பேருரையினை இன்று முதல் பத்து தினங்களுக்கு மாலை 7.00 மணியளவில் நடாத்தவுள்ளார்.

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | செவ்வாய்க்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப்பாடல்கள்) |
| Am 07.00 | காலைக்கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time (Live) |
| Am 09.58 | காலை செய்திகள் |
| Am 10.00 | Hello DD |
| Am 10.30 | தெரிந்தால் சொல்லுங்கள் |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | அதிர்வுகள் |
| PM 12.30 | அதிர்வுகள் |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |


# செம்பியன்பற்று

# புனித பிலிப்புநேரியார் ஆலயத் திருவிழா -2015



17.05.2015 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 26.05.2015 வரை நடைபெறும்

**கொடியேற்றம் - 17.05.2015**
**மாலை 5.00 மணி**

நவநாள் வழிபாடுகள் :- 11.05.25.05 -2015 மாலை :- 5.30 மணி
முதல் நன்மை :- 24.05.2015 - காலை 7.00 மணி
நற்கருணை விழா :- 25.05.2015 - மாலை 5.30 மணி
திருநாள் திருப்பலி :- 26.05.2015 - காலை 7.00 மணி

**குறிப்பு :-**

- 25- 26 ஆம் திகதிகளில் பருத்தித்துறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களிலிருந்து தனியார், அரச பேருந்துகள் ஒழுங்கு செய்யப்படவுள்ளன.
- கடைகள் தேவைப்படுகின்றவர்கள் 14.05.2015 முதல் நிர்வாகத்தை சந்திக்கவும்.

**மாலை 3 மணிக்கு கலைநிகழ்வும் தொடர்ந்து "நெஞ்சக்கனல்" நாட்டுக்கூத்தும் இடம்பெறும்**

புனித பிலிப்புநேரியார் பரிந்துரையில் இறையாசீர் பெற வாரீர்.

பங்குமக்களும் பங்குத்தந்தையும்,
செம்பியன்பற்று.

(R/506)


# தமிழர்களுக்கான அரசியல் தீர்வு கருத்தில் கொள்ளப்படவில்லை

### பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர்



நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம், பத்தொன்பதாவது திருத்தச் சட்டம் எல்லாம் ஏகமனதாக நிறைவேறுகின்றன. ஆனால் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு மட்டும் கருத்தில் கொள்ளப்படவுமில்லை, முன்வைக்கப்படவுமில்லை என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

வடமராட்சி, புலோலி தென்மேற்கு, கந்தமுருகேசனார் மாதிரி முன்பள்ளி வருடாந்த விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணியளவில கந்தமுருகேசனார் சனசமூக நிலையத் தலைவர் பாலகிருஷ்ணன் இரகுநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இப்போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், இன்று உலகம் முழுவதுமே பொருளாதாரத்தை ஈட்டும் வகையிலான கல்வியே அதிகமாக ஊக்குவிக்கப்படுகிறது. ஆனால் வாழ்க்கையைச் சமாளிப்பதற்கான கல்வி ஊக்குவிக்கப்படுவதில்லை. நாட்டில் எத்தனையோ பேர் வாழ்க்கையை தொலைத்து விட்டு வாழ்ந்து வருகின்றனர். பிறந்தது வாழ்வதற்கே. வாழப் பிறந்து வாழ முடியாமல் போய் விடுகிறோம். வாழ்க்கைக்கு உதவாத படிப்பால் என்ன பயன்? என விரக்தியும் உருவாகிறது. எனவே வாழ்க்கைக் கல்வியை அடிப்படையிலேயே கற்றுக் கொடுக்க வேண்டும். படிப்பில் சாதிப்பதோடு வாழ்க்கையில் சாதிப்பவர்களாக மனிதர்கள் மாறவேண்டும். தரமான நீதிக்கதைகள் எடுத்துக் கூறுவதன் மூலமாக மாணவர்கள் இளம் பருவத்திலேயே குற்றச் செயல்களில் ஈடுபடுவதை தவிர்க்க முடியும். குடும்ப உறவுகள் சரிந்தால் சமுதாயம் சரிந்து விடும். உறவு பேணுகின்ற தமிழர் பண்புத் தன்மையைத் தொலைக்காத கல்வியை வழங்க வேண்டியது இந்த அரசின் கடமையாகும்.

கடந்த அரசில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களே இப்போதும் செய்யப்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக அரச திணைக்களங்களில் 180 நாள் பணியாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் திட்டத்தை கடந்த அரசு முன்னெடுத்திருந்தது. அந்நிகழ்வு நேற்று தேசிய கல்வியற் கல்லூரியில் இடம் பெற்றுள்ளது. புதிய அரசாங்கம் நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம், 18,19 என திருத்தச் சட்டம் எல்லாவற்றையும் ஏகமனதாக நிறைவேறுகின்றன. ஆனால் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு மட்டும் கருத்தில் கொள்ளப்படவுமில்லை முன்வைக்கப்படவுமில்லை. இந்த அரசின் தேசிய நிறைவேற்று சபையில் அங்கம் வகிப்பவர்களும் அக்கறை கொள்ளவில்லை.

இங்கு இக்கிராமத்தின் தேவைகள் தொடர்பாக வரவேற்புரையில் முன்பள்ளியின் தலைவர் முருகேசு ஜெகதேவன் குறிப்பிட்டார். முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்நிலையத்தின் வளர்ச்சிக்கென சுமார் மூன்று இலட்சம் ரூபாவிற்கு மேல் வழங்கியுள்ளார்கள். தொடர்ந்தும் எமது சேவைகளை நாம் ஆற்றிக் கொண்டே இருப்போம் என்றார்.

இப்போட்டி நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் கிறேஸ் தேவதயாளினி தேவராஜா, சிறப்பு விருந்தினர்களாக புலோலி அபிவிருத்தி மன்றத் தலைவர் மாசிலாமணி இராஜேஸ்காந்தன், புலோலி அபிவிருத்தி மன்றச் செயலாளர் தம்பையா பாலகிட்டிணபிள்ளை ஆகியோரும் கௌரவ விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பரமேஸ்வரி யோகராசா, பருத்தித்துறை பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் திருமதி சுதாஜினிதேவி சுரேஷ் மற்றும் கிராம அலுவலர் செல்வி விமல்சினி தங்கவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நவீன கடைத் தொகுதி சங்கானையில் அமைக்க ஏற்பாடு

(சங்கானை)

வலி. மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சங்கானை பஸ்தரிப்பு நிலையத்தில் நவீன கடைத் தொகுதி அமைக்கப்படவுள்ளது.

இக்கடைத் தொகுதி அமைவிற்கான பொது மக்கள் அபிப்பிராயம் கடந்த வாரம் சபையில் இடம்பெற்றது.

வலி. மேற்கு பிரதேச சபைத் த்விசாளர் திருமதி நா. ஐங்கரன் தலைமையில் அபிப பிராயக் கூட்டம் இடம்பெற்றது.

இதில் சபையின் கௌரவ உறுப்பினர்கள், சங்கானை வர்த்தக சங்கத்தினர், பட்டின அபிவிருத்தி சபையினர் மற்றும் அலுவலர்கள் பிரசன்னமாகி பல்வேறுபட்ட கருத்துக்களை முன்வைத்தனர்.

விரைவில் சாத்திய வள ஆய்வு அனுப்பி வைக்கப்பட்ட பின்னர் மதிப்பீட்டு, வடிவமைத்தல், வரைபடம் தொடர்பில் தயாரிக்கப்பட்டு நகரத் திட்டமிடலுக்கு ஏற்ற நவீன கடைத் தொகுதி அமையப் பெறும் என சபையின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (92)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நேபாள பத்திரிகைப் பேரவை அங்கத்தவர்கள் மற்றும் யாழ். மாவட்ட ஊடகப் பிரதிநிதிகளுக்கிடையேயான கலந்துரையாடல் நாளை மறுதினம் பிற்பகல் 2.00 மணியளவில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடாத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

## விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வீதியின் குறுக்கே நாய் பாய்ந்ததில் வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்துள்ளார்.

அளவெட்டி தெற்கு அளவெட்டியைச் சேர்ந்த எஸ். பத்மலோஜன் (வயது - 24) என்ற இளைஞனே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 5.45 மணயளவிலேயே இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (இ)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம் பிரதேச செயலக பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் வீதியிலுள்ள அகவொளி குடும்ப வளத்துறை நிலைய மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

சங்கத் தலைவர் வி. ஸ்ரீசக்திவேல் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகனும், சிறப்பு விருந்தினராக யாழ். பிரதேச செயலகக் கணக்காளர் திருமதி த. தவமன்னனும் கலந்து கொண்டனர்.

சனச அபிவிருத்தி வங்கி பான் ஏசியா வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஓய்வூதியர்களுக்குத் தமது வங்கிகளினால் வழங்கப்படும் நலத்திட்டங்கள் பற்றி விரிவாக விளக்கமளித்தனர்.

யாழ். அரச அதிபரும் பிரதேச செயலகக் கணக்காளரும், சங்கத் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரும் உரையாற்றினர்.

அதிகளவு ஓய்வூதியர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். (137)

# மனதில் நிற்கும் முடிவுகளே நல்ல சிறுகதைக்கு அங்கமாகும்

## தமிழ் நேசன் அடிகளார் தெரிவிப்பு



(மன்னார்)

எடுப்பான தொடக்கம், மிடுக்கான ஓட்டம், மனத்தில் நிற்கும் முடிவு ஆகியவை ஒரு நல்ல சிறுகதைக்கு எப்போதும் அங்கங்களாக விளங்குபவை என அருட்திரு.தமிழ்நேசன் அடிகளார் தெரிவித்தார். கடந்த 4 ஆம் திகதி மன்னார் கலையருவி நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற "துறையூரான்" என்ற புனைபெயரைக் கொண்ட எம்.சிவானந்தனின் "குறை ஒன்றும் இல்லை" என்ற சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழாவிற்குத் தலைமைதாங்கி உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்டத்தின் சமூகத்தொடர்பு அருட்பணி மையமான கலையருவியின் இயக்குநரும் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும், மன்னா என்ற கத்தோலிக்க பத்திரிகையின் ஆசிரியருமான அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் அங்கு தொடர்ந்தும் உரையாற்றும் போது கூறியதாவது,

சிறுகதையானது பல வகைகளில் விளக்கப்படுகின்றது. "வாழ்க்கையின் சாளரம்" என்றும், "ஒரு சாவித்துளையின் வாயிலாகப் பரந்த ஓர் அறையைப் பார்ப்பது போன்றது" என்றும், "ஒரு மின்னல் வெட்டுப் போன்றது" என்றும், "ஒரு நூறு மீற்றர் ஓட்டத்தை ஒத்தது" என்றும் சிறுகதையை விளக்குவர். சிறுகதைகள் எப்படி இருக்க வேண்டும் என்று கூறிவரும் மேல்நாட்டு இலக்கியத் திறனாய்வாளர்கள், "சிறுகதைகள் குதிரைப் பந்தயம்போல் தொடக்கமும் முடிவும் சுவைமிக்கனவாக இருத்தல் வேண்டும்" என்றும், "சிறுகதைகள் ஒரு தடவை உட்கார்ந்து வாசிக்கக்கூடிய ஒரு தனி நிகழ்ச்சியாக இருக்க வேண்டும்" என்றும் கூறியுள்ளனர்.

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளராக விளங்கும் சிவானந்தன் சிறந்த ஒரு கல்வியாளர், சமூகப் பகுப்பாய்வாளர், மதங்களைக் கடந்து சிந்திக்கும் மனிதாபிமானவாதி, பகுத்தறிவாளர், யதார்த்தவாதி. இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட இவர் தனது எண்ணங்களை, சிந்தனைகளை சமூகத்திற்கு வழங்க தேர்ந்து கொண்ட ஊடகம் இலக்கியம் ஆகும். "மௌனப் பார்வை" என்ற குறுநாவல் வழியாக ஏற்கனவே இலக்கிய உலகில் தன்னை வெளிப்படுத்திய சிவானந்தன் தற்போது தனது சிறுகதைகள் வழியாக மீண்டும் நம்மோடு பேசுகின்றார். ஈழத்துப் புனைகதை இலக்கியத்தளத்தில் தடம்பதித்துவரும் இவரின் இலக்கியப் பயணம் தொடரட்டும் என்றார்

மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம்.எம். சியான் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். மன்னார் சைவக் கலை இலக்கிய மன்றத்தின் தலை வர் சிவசிறி மஹா தர்மகுமார குருக்கள் ஆசியுரை வழங்கினார். தழல் இலக்கிய வட்ட ஒருங்கிணைப்பாளர் மன்னார் அமுதன் வெளியீட்டுரை நிகழ்த்தினார். நாவலாசிரியர் எஸ். ஏ.உதயா ஆய்வுரை நிகழ்த்தினார். திருகோணமலை யைச் சேர்ந்த நந்தினி சேவியர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பண்டிதர் ம.ந.கடம்பேஸ்வரன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# பூட்டுப் போடப்பட்டது நீர்த் தாங்கிகள்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள நீர்த் தாங்கிகளுக்கு பாதுகாப்புக் கருதி பூட்டுப்போடப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் தவணை இறுதிப் பகுதியில் நீர்த் தாங்கிகளில் நஞ்சிடப்பட்டமையைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இருப்பினும் பாடசாலைக்கு வருகை தரும் மாணவர்கள் வீட்டிலிருந்தே குடிநீரைக் கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் பாடசாலைச் சூழலில் இனந்தெரியாதோரின் நடமாட்டத்தை உரியவர்கள் அவதானிக்க வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (66)

# தரம் 01 இற்கான மாணவர்களை இணைப்பதில் புதிய நடைமுறை

தரம் ஒன்று மாணவர்களை பாடசாலைகளில் இணைத்துக் கொள்வது தொடர்பில் புதிய நடைமுறை ஒன்றை மேற்கொள்ள கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் தரம் ஒன்றுக்கான புதிய மாணவர்களை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி இணைத்துக் கொள்ளப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந் நடைமுறையானது 2017 ஆம் ஆண்டிலிருந்து அமுலுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முன்னர் நடைமுறையிலுள்ள சுற்று நிருபத்தில் சில திருத்தங்களை மேற்கொண்டு நடைமுறைப்படுத்தவும் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

# தொடர்ச்சியான மணல் அகழ்வுக்கு முறையற்ற அனுமதிகளே காரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறுகின்ற தொடர்ச்சியான மணல் அகழ்விற்கு கனியவளத் திணைக்களத்தினர் வழங்கும் முறையற்ற அனுமதிகளே முக்கிய காரணமாக அமைந்துள்ளன.

பூநகரியின் கௌதாரிமுனையிலும் கிளிநொச்சி கரைச்சியின் அக்கராயன் ஆற்றுப்பகுதியிலும், இரணைமடுக்குளத்தின் கீழான பன்னங்கண்டி மற்றும் குடமுருட்டி ஆறு உட்பட வன்னேரிக்குளத்தின் முடக்கனாறு, மண்டக்கல்லாறு உட்பட மாவட்டத்தின் சகல ஆற்றுப்பகுதிகளிலும் தொடர்ச்சியாக நடைபெறுகின்ற மணல் அகழ்விற்கு கனிய வளத்திணைகளத்தின் அனுமதிகள் உள்ளன. கனியவளத்திணைக்களத்தினர் மணல் அகழ்வு நடைபெறுகின்ற பகுதிகளுக்கு நேரில்சென்று சூழல் அவதானிப்புகளை மேற்கொண்டு மணல் அகழ்விற்கான அனுமதிகளை வழங்காமல் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கும் தனியாருக்கும் மணல் அகழ்விற்கான அனுமதி வழங்குவதன் காரணமாகவே மாவட்டத்தில் சட்டவிரோதமான மணல் அகழ்வு நடைபெறுகின்றது.

உதாரணமாக பூநகரி கௌதாரிமுனையிலேயே மணல் அகழ்வு நடைபெறக்கூடாதென பூநகரி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. பூநகரியிலிருந்து மணல் கொண்டுசெல்வதை



பூநகரிப் பொலிஸார் கட்டுப்படுத்துவதெனவும் முடிவெடுக்கப் பட்டது.

ஆனால் இன்றுவரை பூநகரியின் கௌதாரிமுனையில் மணல அகழ்வு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இதன் காரணமாக கௌதாரிமுனையில் கடல்நீர் உப்புகக்கூடிய அபாயநிலை காணப்படுகின்றது. கௌதாரிமுனை போன்றே கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சகல ஆற்றுப்படுக்கைகளிலும் சட்டவிரோத மணல் அகழ்வு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

கனியவளத்திணைக்களம் வழங்குகின்ற முறையற்ற அனுமதிகள் காரணமாகவே மணல் அகழ்வு கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்கின்றது. கிளிநொச்சி மாவட்ட செயலர் தலைமையிலான குழுவொன்று கடந்த வியாழக்கிழமை பூநகரி கௌதாரிமுனைப்பகுதிக்குச் சென்று தொடர்ச்சியாக நடைபெறும் மணல் அகழ்வு தொடர்பாக ஆராய்ந்துள்ளது. பூநகரி கௌதாரிமுனையில் நடைபெறுகின்ற மணல்அகழ்வு உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென்பதே சூழலியல் ஆர்வலர்களின் வேண்டுகோளாகவுள்ளது.(160)

# நொச்சிக்காடு இந்து மயானம் சிரமதானம் மூலம் துப்புரவு

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு நொச்சிக்காடு இந்து மயான அபிவிருத்திச் சபையின் தலைமையில் இந்து மயான சிரமதானப் பணி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இச் சிரமதானப் பணியில் வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி. கிழக்கு பிரதேச இணைப்பாளருமான இராமநாதன் ஐங்கரன், வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் அருளானந்தம் றஜீவன், கிராம உத்தியோகத்தர் எஸ்.செல்வச்சந்திரன், கோப்பாய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தியாகராசா இராசரத்தினம், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகப் பொறுப்பதிகாரி எஸ்.தவராசா, சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (160)

# பேருந்து உரிமையாளர்களுக்கிடையிலான மோதல் தொடர்பில் ஆராய்வு

கிளிநொச்சியில் நீண்டகாலமாக இடம்பெற்று வரும் அரச தனியார் பேருந்து உரிமையாளர்களிற்கிடையிலான மோதல்கள் தொடர்பில் ஆராயும் கூட்டம் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

வடமாகாண போக்குவரத்து அமைச்சர் டெனிஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர், மாவட்ட செயலாளர், பொலிஸ் அதிகாரிகள், அரச தனியார் பேருந்துகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் அரச தனியார் பேருந்துகளிற்கு என ஒருங்கிணைந்த நேர அட்டவணை தயாரித்தல், வடமாகாணத்தில் போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகளிற்கிடையிலான நேர அட்டவணையை தயாரித்தல், கிளிநொச்சிக்கான அரச தனியார் பேருந்துகளை இணைத்து மத்திய பேருந்து நிலையம் ஒன்றினை அமைத்தல், முழங்காவில் பகுதியில் பேருந்து நிலையத்தினை அமைத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

நிறைவில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மாவட்டத்தில் நீண்டகாலமாக நிலவும் அரச தனியார் போக்குவரத்து சேவையினருக்கிடையில நிலவும் சிக்கல் தொடர்பில் சில தீர்மானங்கள் எட்டப்பட்டதாகவும், மத்திய பேருந்து நிலையம் மற்றும் முழங்காவிலில் பேருந்து நிலையம் அமைத்தல் ஆகியவற்றிற்கு தீர்வு காணுதல் உள்ளிட்ட விடயங்கள் பேசப்பட்டு தீர்மானம் எட்டப்பட்டதாகவும் தெரிவித்தார்.

# நூலகம் அமைக்க கோரிக்கை

முல்லைத்தீவு நகரத்தில் பொது நூலகமொன்றினை அமைத்துத் தருமாறு முல்லைத்தீவு நகர அபிவிருத்திக் குழு முல்லைத்தீவு மாவட்ட செயலர் திருமதி.றூபவதி கேதீஸ்வரனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. முல்லைத்தீவு நகரத்தில் சிறந்த நூல் நிலையம் இல்லாததன் காரணமாக மாணவர்கள் கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நகரத்தில் பிரதேச சபை அமைந்துள்ள பகுதியில் நூலகம் அமைக்கக்கூடிய காணியுள்ளது. இக்காணியில் நூலகமொன்றினை சிறந்த முறையில் அமைப்பதன் ஊடாக மாணவர்களும் மக்களும் நல்ல பயனடைந்துகொள்ளமுடியுமெனவும் நகர அபிவிருத்திக் குழு தனது வேண்டுகையில் தெரிவித்துள்ளது. (160)

# யாழ்.தொலைக்காட்சி இயக்குநருக்கு பிடியாணை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தொலைக்காட்சியின் இயக்குநருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று பிடியாணை பிறப்பித்துள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் அன்றைய தினம் மாலை 6.30 மணி வரை வாக்களிக்க முடியும் எனப் பொய்ச் செய்தியை தொடர்ச்சியாக ஒளி பரப்பியிருந்தது.

இந்தச் செய்தியால் பாதிக்கப்பட்ட ஒருவர் நீதிமன்றின் உதவியை நாடியிருந்தார். இதன் வழக்கு விசாரணைக்காக தொலைக்காட்சியின் பணிப்பாளருக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்திருந்தது. ஆனால் அவர் நீதிமன்றுக்கு சமுகமளிக்காதமையை அடுத்து அவருக்கு பிடியாணை பிறப்பித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

நிரந்தர தோல்வி, நிரந்தர துக்கம், நிரந்தர சோகம் என்று எதுவும் கிடையாது. - ஒயிட்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## யார் யாரெல்லாம் தமிழர்கள் இல்லை?

தமிழர்கள் குறிப்பாக வடக்குத் தமிழர்களில் சிலர் தங்களிடமுள்ள பாசிசக் குணாம்சங்களில் சிலவற்றை இன்னும் விட்டொழிக்கத் தயாரில்லை. பன்மைத்துவத்தை மறுதலிக்கும் ஏகப்பிரதிநிதித்துவக் கோட்பாட்டையே தங்கள் மனங்களினுள் வன்முறையாக வளர்த்து வைத்திருக்கிறார்கள்; வளர்த்து வருகிறார்கள்.

தமிழ் மக்களின் கூட்டுரிமைக் கோரிக்கை, கூட்டுப்பிரக்ஞை, தமிழ் மக்களின் கூட்டெண்ணம் என்பது தாங்கள் சொல்வது போலவே இருப்பதாகவும்,

இதற்கு மாறான எண்ணங்களைக் கருத்துக்களைக் கொண்டிருக்கும் தமிழர்கள், தமிழர்கள் என்ற கருதுகோளுக்குள் வரமாட்டார்கள் என்பது போலவும், அவர்கள் தமிழர்களின் எதிரிகள்தான் என்பதாகவும் கட்டமைத்துக் காட்டுவதற்கு முற்படுகிறார்கள்.

மக்கள் என்ற திரள்நிலையிலிருந்து சிலரை விலக்கி வைத்தலும், தமிழர்கள் என்ற ஏக அடையாளத்திலிருந்து அவர்களை அப்புறப்படுத்தி விளிம்புநிலைக்குத் தள்ளுவதும், அதேசமயம் ஒற்றைத் தேசியப் பெருங்கதையாடலுக்குள் சிறுகதையாடல்களை எல்லாம் அமுக்கி விட முற்படுவதும் பாசிசத்தின் குணாம்சங்கள் என நாமறிவோம்.

இதில் வேடிக்கை என்னவென்றால், நம்மத்தியில் இந்த கூட்டுப் பிரக்ஞை, கூட்டுரிமைக் கோரிக்கை என்று கதையாடுகிறவர்கள் எந்த விதத்திலும் பெரும்பான்மைத் தமிழ்மக்களின் ஆதரவைத் தமக்குக் காட்டியவர்களாக இல்லை என்பதுதான்!

பெரும்பான்மைத் தமிழ்மக்களின் ஆதரவைத் தேர்தலில் காட்டியுள்ளவர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை விமர்சிக்கும் தீவிரவாதிகளே, தமிழ்மக்களின் கூட்டெண்ணம் தங்களைப்போல் தீவிரவாத நிலைப்பட்டதாகத்தான் இருக்கிறது என்று சொல்ல முற்படுகிறார்கள்.

இந்தத் தீவிரவாதிகள் எந்தவொரு தேர்தலிலும், தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆதரவு தங்கள் கோட்பாட்டிற்குத்தான் என்று காட்டியதில்லை. கடைசித் தேர்தல் வரைக்குமான பெரும்பான்மைத் தமிழ் மக்களினது ஆதரவு என்பது சம்பந்தன், சுமந்திரன், மாவை, விக்னேஸ்வரன் போன்றோரின் பேச்சுக்களின் மீது நம்பிக்கை கொண்டதாகவே இருக்கிறது.

வடக்கைப் பொறுத்தவரை அதற்கு அடுத்தநிலையில் மக்களின் நம்பிக்கையைப் பெற்றவர்களாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரே இருக்கிறார்கள் என்பது வெளிப்படை.

மக்கள் தங்கள் நம்பிக்கையைக் காட்டியிருக்கும் இந்த இரு தரப்பினரையும் விமர்சிக்கும் அதிதீவிரவாத நிலைப்பாடு கொண்ட சிலரும் சமூகத்தில் இருக்கிறார்கள். அவர்கள் நம் மத்தியில் இருப்பதையும் இயங்குவதையும் யாரும் கேள்விக்குள்ளாக்கியதில்லை.

ஆனால், தமிழ் மக்களின் கூட்டுரிமை கூட்டுப் பிரக்ஞை என்பதற்கெல்லாம் இவர்கள் ஏக சொந்தம் கொண்டாடிப் பேசுவதும், அதற்கு வெளியில் மற்றமைகளை நிறுத்தி அவர்களைத் தமிழர்களின் எதிரிகள் என்பதாகக் கட்டமைக்கும் திமிர்த்தனத்தையும் வன்முறையையும் கேள்விக்குள்ளாக்க வேண்டியிருக்கிறது.

மறுபுறம் இவர்களது கூட்டுப் பிரக்ஞை என்ற கதையாடலும், பெரும்பான்மையினரின் கருத்து என்பதையும் எல்லோரும் ஏற்றுக்கொண்டு விட வேண்டும் என்பது முட்டாள்தனமில்லையா? மக்கள்திரளின் கூட்டெண்ணம் எப்போதும் சரியானதாகவோ முற்போக்கானதாகவோதான் இருக்கும் என்பது உண்மையா?

1930கள் 40களில் ஜெர்மானிய சமூகத்தின் கூட்டுப்பிரக்ஞை என்னவாக வெளியே காட்டப்பட்டது? இன்னொரு சமூகத்தைக் கொலை வெறியாடிய கூட்டுப் பிரக்ஞையல்லவா அது!

சரி, அன்று ஹிட்லரால் பாதிக்கப்பட்ட, இன்று இஸ்ரேலிய சமூகமாக மாறியிருக்கும் அவர்களது, பாலஸ்தீனர்களுக்கெதிரான கூட்டெண்ணம்தான் வரவேற்கத்தக்கதா?

அங்கெல்லாம் போவானேன், இந்த நாட்டில் சிங்கள மக்களது பெரும்பான்மைக் கூட்டெண்ணம் மகிந்த ராஜபக்ஷவுக்குத்தான் இருக்கிறதென்றால், அது நாம் ஏற்றுக்கொள்ளத் தக்கதா?

சிங்களப் பெரும்பான்மைக் கூட்டெண்ணமும் தமிழ்ப் பெரும்பான்மைக் கூட்டெண்ணமும் அதிதேசியக் கருத்தியல் என்கிற பாசிசத்தால் உருவானவை.

அதற்கு வெளியே இருதரப்பிலுமுள்ள நாம் மிகச் சிறுபான்மையினராக இருந்தாலும் அந்த இருதரப்பு இனவாதத்தையும் எதிர்த்தால் தானே நம்மை முற்போக்காளராகச் சொல்ல முடியும்? - *ஆசிரியர்*

# காணி, வாகனங்களின் விலைகளை காட்சிப்படுத்துவது கட்டாயமாகும்

### நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் தெரிவிப்பு

விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள காணி மற்றும் வாகனங்களின் விலைகளைக் காட்சிப்படுத்துவது கட்டாயமாக்கப்படவுள்ளது.

விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள அனைத்து பொருட்களினதும் விலையை காட்சிப்படுத்தல் கட்டாயம் என நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார்.

இதன்படி வாகனங்கள் மற்றும் காணி ஆகியன காட்சிப்படுத்தப்படுவது கட்டாயமாக்கப்படும்.

இது காணி அதிகார சட்டத்தின் 26 ஆவது சரத்தின்படியே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக அதிகார சபைத் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொருட்களின் விலை சரியாக காட்சிப்படுத்தப்படாமையால் நுகர்வோர் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என தொடர்ந்தும் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளையடுத்தே இத்தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

விலைகள் காட்சிப்படுத்தப்படாமையினால் இடைத்தரகர்கள் அதிக இலாபம் சம்பாதிக்கும் நோக்கில் நுகர்வோருக்கு அதிக விலையைக் கூறி நுகர்வோரை சிரமத்திற்கு உள்ளாக்குகின்றனர் என நுகர்வோர் அதிகார சபைத் தலைவர் ரூமி மர்சூக் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தேசியக் கொடிக்கு தரநிர்ணய சட்டம்

இலங்கையின் தேசியக் கொடி குறித்த தர நிர்ணயங்கள் சட்டமாக்க சுதேச விவகார அமைச்சு தீர்மானித்துள்ளது. இலங்கை தரநிர்ணய சபையினால் தேசியக் கொடியின் தரம் பற்றி அளிக்கப்பட்டுள்ள வரையறைகள் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் சட்டமாக்கப்பட உள்ளது.

தேசியக் கொடியின் தர நிர்ணயம் குறித்து வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக அறிவிக்குமாறு அமைச்சு, நுகர்வோர் அதிகார சபைக்கு அறிவித்துள்ளது. தேசியக் கொடியை பிழையாக பயன்படுத்துவது தொடர்பில் சட்டத்தை கடுமையாக்க நடவடிக்கை எடுகக்கப்படவுள்ளது. இறக்குமதி செய்யப்படும் தேசிய கொடியின் தரத்தை பரிசீலனை செய்யுமாறு இலங்கை தர நிர்ணயசபைக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. தேசியக் கொடி பயன்பாடு தொடர்பில் எழுந்து சர்ச்சைகளைத் தொடர்ந்து அமைச்சு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

# நிதிக் குற்றவியல் பிரிவின் நடவடிக்கைகள் வலுவடையும்

### நிதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவின் நடவடிக்கைகள் வலுப்படுத்தப்படும் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தில் உயர் பதவிகளை வகித்து வந்த அரசியல்வாதிகள் மற்றும் உயர் அதிகாரிகள் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவிற்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இவ்வாறு சுமார் 169 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடுகளில் 31 பேருக்கு எதிரான முறைப்பாடுகள் குறித்த அறிக்கைகள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்த போதியளவு ஆளணி பலமில்லை எனவும், மேலும் சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவில் இணைத்துக் கொள்ளப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவினை மூடுவதற்கு சில தரப்பினர் முயன்று வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவிற்கு மேலதிகமாக, புலனாய்வுப் பிரிவு, கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவு மற்றும் லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு ஆகியனவற்றுக்கும் கடந்த கால அரசாங்கத்தின் ஊழல் மோசடிகள் குறித்து முறைப்பாடு செய்யப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

# பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி இணைய மூலமும் விண்ணப்பிக்கலாம்

புதிய கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதி கையேடு வெளியிடப்பட்டுள்ள நிலையில் பல்கலைக்கழக அனுமதிக்காக மாணவர்கள் இணையத்தளத்தில் விண்ணப்பிக்க முடியும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கை ஒன்றிலேயே ஆணைக்குழுவின் தலைவர் மொஹான் டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கடந்த ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில்சித்திபெற்று பல்கலைக்கழக அனுமதி பெற தகுதியுடைய மாணவர்களுக்கான புதிய கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேடு வெளியிடப்பட்டுள்ள நிலையில் பல்கலைக்கழக அனுமதிக்காக மாணவர்கள் இணையத்தளத்தில் விண்ணப்பிக்க முடியும்.

பல்கலைக்கழக அனுமதி தொடர்பிலான விபரங்கள் அடங்கிய கைநூல் வெளியிடப்பட்டுள்ள நிலையில் இதில் உள்ளடக்கப் பட்டுள்ள தகவல்களை நன்கு ஆராய்ந்து விண்ணப்பிக்க வேண்டும்.

இதனிடையே நாடளாவிய ரீதியில் உள்ள பல்கலைக்கழகத்தில் இம்முறை 24,000 இற்கும் மேற்பட்ட மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்க எண்ணியுள்ளோம் எனத் தெரிவித்தார்.

# 27 வருடங்களின் பின் நாணயத்தாளில் ஆங்கிலத்தில் கையொப்பம்

(கொழும்பு)


27 ஆண்டுகளின் பின்னர் நாணய தாளில் ஆங்கில மொழியில் கையொப்பமிடப்பட்டுள்ளது. நாணயத்தாளில் நிதி அமைச்சர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநரின் கையொப்பங்கள் இடப்படுவது வழமையாகும். அந்த வகையில் அண்மையில் அச்சிட்டு வெளியிடப்பட்ட நாணயத்தாளில் மத்திய வங்கியின் ஆளுநரது கையொப்பம் ஆங்கில மொழியில் காணப்படுகின்றது. ஐயாயிரம் ரூபா நாணயத் தாளில் இவ்வாறு கையொப்பமிடப்பட்டுள்ளது.

1988 ஆம் ஆண்டில் மத்திய வங்கியின் ஆளுநராக கடமையாற்றிய நெவில் கருணாரட்ன இதற்கு முன்னர் நாணயத்தாளில் ஆங்கிலத்தில் கையொப்பமிட்டிருந்தார். அண்மையில் அச்சிட்டு வெளியிடப்பட்ட நாணயத்தாளில் நிதி அமைச்சர் என்ற ரீதியில் ரவி கருணாநாயக்க சிங்களத்தில் கையொப்பமிட்டுள்ளார்.

மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் ஆங்கிலத்தில் கையொப்பமிட்டுள்ளார். எனினும், அண்மையில் 2014 ஆம் ஆண்டுக்காக வெளியிடப்பட்ட மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் மகேந்திரனின் கையொப்பம் சிங்களத்தில் காணப்படுகின்றது.

# ஜே.ஆர். 1978 இல் நிறைவேற்று ஜனாதிபதி முறையை எப்படி அறிமுகப்படுத்தினார்

**1972ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்புக்கான ஒரு திருத்தம் முதலில் வரையப்பட்டது. அமைச்சரவையில் அது விவாதிக்கப்பட்டு தேசிய நலனுக்கு அவசரம் தேவையானது என அமைச்சரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது. அரசியலமைப்பு நீதிமன்றம் அதற்கு ஒப்புதல் வழங்கியது. பின்னர் அது தேசிய அரசுப் பேரவையில் 1977 செப்ரெம்பர் 22 இல் இரண்டாவது அரசியலமைப்பு திருத்தமாகச் சமர்ப்பிக்கப்பட்டது. நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதிக்கு மாற்றப்பட்டது. 1978, பெப்ரவரி 4 சுதந்திர தினத்தன்று ஜேஆர் ஜெயவர்தனா இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியாக பதவியேற்றார்.**



## டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையிலிருந்து

**19ஆவது** அரசியலமைப்பு திருத்தம் அளவுக்கு அதிகமான பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதின் விளைவாக, 1978 அரசியலமைப்பினூடாக அறிமுகப் படுத்தப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை முற்றாக இல்லாவிட்டாலும் அதன் அதிகாரங்கள் சிலவற்றை இழந்துள்ளது. இதன் முக்கிய திருப்பமாக கவனம் முழுவதும் இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான ஜேஆர் என பொதுவாக அழைக்கப்படும் ஜூனியஸ் ரிச்சட் ஜெயவர்தனாவிடம் திரும்பியுள்ளது.

பிரித்தானிய வெஸ்ட் மினிஸ்டர் பாணியிலான இலங்கையின் அரசியல் முறையை பிரான்சின் கோலிஸ்ட் அரசியலமைப்பு முறைக்கு நெருக்கமாக ஒத்திருக்கும் வகையில் மாற்றத்தை ஏற்படுத்திய சூத்திரதாரி ஜேஆர் என்பது அனைவரும் அறிந்ததே. ஜனாதிபதிக்கு அதிகாரம் மாற்றப்பட்டதும் அவர் அரசாங்கத்தின் பெயரளவு தலைவர் என்ற நிலையிலிருந்து செயற்றிறன் மிக்க ஒரு தலைவராக உருமாற்றம் பெற்றார். பிரதம மந்திரியின் பதவி மதிப்பை இழந்தது.

1965 - 70 கால கட்டத்தில் டட்லி சேனநாயக்காவின் ஐ.தே.க. அரசாங்கத்தில் ராஜாங்க அமைச்சராக ஜேஆர் பதவி வகித்த காலத்திலேயே விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தில் அவர் இதற்கு வழி திறக்கும் ஒரு உரையை நிகழ்த்தினார், டிசம்பர் 14, 1966ல் ஜேஆர் ஜெயவர்தனா தனது சிறப்பு உரையின் போது ஜனாதிபதித்துவம் பற்றிய தனது கருத்தை அப்போதே கோடிட்டுக் காட்டினார். அமெரிக்கா மற்றும் பிரெஞ் பாணியினை அடிப்படையாகக் கொண்ட ஜனாதிபதி முறைக்கு சாதகமாக அவர் வாதிட்டார்.

“நிறைவேற்று அதிகாரி குறிக்கப்பட்ட சில வருடங்கள் பதவி வகிப்பதற்காக மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுவார் மற்றும் அந்தக் காலகட்டத்தில் இருப்பிலுள்ள நாடாளு மன்றத்தில் அது தங்கியிருக்காது. அத்தகைய ஒரு நிறைவேற்று அதிகாரி ஒரு குறிக்கப்பட்ட எண்ணிக்கையான வருடங்களுக்கு வலிமையான நிறைவேற்று அதிகாரியாக பதவியில் இருப்பார், தேர்வு செய்யப்பட்ட நாடாளுமன்றத்தின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றபடி நடக்கவேண்டும் என்கிற கட்டாயம் இல்லாமல், சரியான ஆனால் அவரது நாடாளுமன்ற கட்சியில் இருந்து கண்டனம் வருமே என எண்ணாமல் செல்வாக்கற்ற முடிவுகளையும் எடுப்பதற்கு அஞ்சவும் மாட்டார்” என அவர் அப்போது தெரிவித்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறை தொடர்பான ஜேஆரின் வாதம் அப்போது அரசியல் நிறுவனங்களில் அதிர்வலைகளை ஏற்படுத்தின. பிரதமர் டட்லி சேனநாயக்கா மற்றும் ராஜாங்க அமைச்சர் ஜேஆர் ஜெயவர்தனா ஆகியோரிடையில் உள்ள உறவு அப்போது சீர்கெட்டு இருந்தது. இந்த யோசனையை டட்லி உறுதியாக எதிர்த்தார். அந்தச் சூழ்நிலையில் அந்தப் பிரேரணையை மேலும் முன்தள்ள அவரால் இயலவில்லை, ஆனால் அவரது கருத்தை அவர் கைவிட்டு விடவில்லை.

அடுத்த வாய்ப்பு ஆறு வருடங்கள் கழித்து திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் போது (1970 - 77) வந்தது. நாடாளுமன்றம் ஒரு புதிய அரசியலமைப்பை வரைவதற்காக ஒரு அரசியல் நிர்ணய சபையாக மாற்றப்பட்டது. ஜேஆர் அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அதேவேளை டட்லி சேனநாயக்கா ஐ.தே.க.வின் தலைவராக இருந்தார். இருவருக்கும் இடையே இருந்த முரண்பாடுகள் அதிகரித்து ஜேஆர் அப்போது கட்சியில் கிட்டத்தட்ட ஒரு தனித்த ஓநாய் போலவே இருந்தார்.

1971, ஜுலை 2 இல் ஜேஆர் அரசியல் நிர்ணய சபையில் ஒரு பிரேரணையை முன்வைத்தார். அது கீழ்கண்டவாறு காணப்பட்டது - “அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரம் குடியரசின் தலைவருக்கு உரித்தாக்கப்பட வேண்டும், அரசியலமைப்பின் விதிகளுக்கு ஏற்றபடி அவர் அதை நடப்பாக்குவார். குடியரசின் ஜனாதிபதி ஒரே தவணைக்கு மட்டும் ஏழு வருடங்களுக்கு 18 வயதுக்கு மேற்பட்ட பிரஜைகளின் நேரடி வாக்கு மூலம் தேர்வு செய்யப்படுவார். குடியரசின் ஜனாதிபதி அமைச்சரவைக்கு தலைமை தாங்குவார்”. ஜேஆரினது பிரேரணை அரசியல் நிர்ணய சபையில் அப்போது கொழும்பு மத்திய தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும் மற்றும் பிரதான எதிர்க்கட்சி கொறடாவுமாக இருந்த ரணசிங்க பிரேமதாஸவினால் வழிமொழியப்பட்டது.

அரசியல் நிர்ணய சபையில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமைக்கு ஆதரவாக ஜேஆர் நாவன்மை உடன் மிகத் திறமையாக வாதிட்டார். அந்தப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது. கொல்வின் ஆர் டீ சில்வா தலைமையிலான அரசாங்க தரப்பினர் ஜேஆரின் பிரேரணைக்கு எதிராக கடும் தாக்குதலை மேற்கொண்டனர். பெரும்பான்மையான ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட அதற்கு ஆதரவு தெரிவிக்க வில்லை, கட்சித் தலைவரான டட்லி சேனநாயக்க அவர்களே அந்த யோசனையை கடுமையாக எதிர்த்தார். ஜேஆர் - பிரேமதாஸ பிரேரணை அப்போதைய அரசியல் நிர்ணய சபையினால் நிராகரிக்கப்பட்டது.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் புதிய குடியரசு அரசியலமைப்பை மே 22, 1972 இல் கொண்டுவந்தது. சோல்பரி அரசியல் அமைப்பின் கீழிருந்த தேசாதிபதி முறை ஜனாதிபதிக்கு வழிவிட்டது. எனினும் அதன் விளைவாக அதிகாரம் அப்போது தேசிய அரசுப் பேரவை என அழைக்கப்பட்ட நாடாளுமன்றத்துக்கே உரித்தாக இருந்தது. வில்லியம் கோபல்லாவ பெயரளவு தலைவரான ஜனாதிபதியாக இருந்த அதேவேளை உண்மையான அதிகாரம் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் தக்க வைத்துக் கொள்ளப்பட்டது.

1973 இல் டட்லி சேனநாயக்கா காலமானதும் ஜேஆர் ஐ.தே.க.வின் தலைவராக அவரது இடத்தை அடைவதில் வெற்றி பெற்றார். அவர் விரைவாக தனது தலைமை பதவியை ஸ்தாபித்துக் கொண்டதுடன் கட்சியை தனது முழு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார். தனது எண்ணமான நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒரு வலிமையான நிலைப்பாடு மூலமாக நிறைவேற்றிக் கொள்வது ஜேஆருக்கு இப்போது இலகுவாக இருந்தது.

1977 ஆம் ஆண்டின் ஐ.தே.க.வின் தேர்தல் விஞ்ஞாபனத்தில், பிரதம மந்திரி முறையில் இருந்து நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு மாற்றம் செய்வது தான் முக்கிய அம்சமாக இடம்பெற்றிருந்தது. தேர்தலில் ஐ.தே.க. மொத்த 168 நாடாளுமன்ற இடங்களில் 141 இடங்களைக் கைப்பற்றி மகத்தான வெற்றி பெற்றது. ஜுலை 1977 இல் ஜேஆர் ஜெயவர்தனா பிரதம மந்திரியாக பதவியேற்றார். நிறைவேற்று ஜனாதிபதி முறை என்கிற கனிந்துவிட்ட அவரது கருத்தை நிறைவேற்றுவதற்கு அவர் விரைந்து செயற்படலானார்.

ஜேஆர் மற்றும் ஒரு சிறிய அமைச்சர் குழு மற்றும் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் முன்னணி வழக்கறிஞரான மார்க் பெர்ணாண்டோவின் துணையுடன் நிறைவேற்று ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்தும் இலக்கினை நோக்கி வேலை செய்ய ஆரம்பித்தார்கள். 1972 ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்புக்கான ஒரு திருத்தம் முதலில் வரையப்பட்டது. அமைச்சரவையில் அது விவாதிக்கப்பட்டு தேசிய நலனுக்கு அவசரம் தேவையானது என அமைச்சரவையால் ஏற்றுக்கெள்ளப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது.

அரசியலமைப்பு நீதிமன்றம் அதற்கு ஒப்புதல் வழங்கியது. பின்னர் அது தேசிய அரசுப் பேரவையில் 1977 செப்ரெம்பர் 22 இல் இரண்டாவது அரசியலமைப்பு திருத்தமாகச் சமர்ப்பிக்கப்பட்டது. நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதிக்கு மாற்றப்பட்டது. 1978, பெப்ரவரி 4 சுதந்திர தினத்தன்று ஜேஆர் ஜெயவர்தனா இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியாக பதவியேற்றார். இதற்கிடையில் 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பினை முழுமையாக புதிய ஒன்றினால் மாற்றீடு செய்யும் குறிக்கோளை நோக்கி ஜேஆர் வேலை செய்யத் தொடங்கினார். நாடாளுமன்றத் தெரிவுக் குழு 1977 நவம்பர் 3 இல் அறிவிக்கப்பட்டது. ஆரம்பத்தில் அதன் தலைவராக ஜேஆர் ஜெயவர்தனா இருந்தார் அவர் அப்போது நாடாளுமன்றத்தில் கொழும்பு மேற்கை பிரதி நிதித்துவம் செய்திருந்தார். எனினும் பெப்ரவரி 1978 இல் ஜேஆர் ஜனாதிபதியாகத் தெரிவானதும் தனது நாடாளுமன்ற அங்கத்துவ பதவியை விட்டுவிலக வேண்டி நேர்ந்தது. அந்த தேர்வுக் குழுவில் அங்கம் வகித்த ரணசிங்க பிரேமதாஸ 1978 பெப்ரவரி 23 இல் சபாநாயகரால் தலைவராக நியமிக்கப்பட்டார். பிரேமதாஸ பிரதமராகவும் நியமிக்கப்பட்டார்.

தேர்வுக்குழுவில் இடம்பெற்றிருந்த ஏனைய ஐ.தே.க. நாடாளுமன்ற அங்கத்தவர்கள், காமினி திஸாநாயக்கா, லலித் அத்துலத்முதலி, றொனி டி மெல், கே.டபிள்யு. தேவநாயகம் மற்றும் எம்.எச்.எம் நைனா மரைக்காயர் ஆகியோர். ஸ்ரீ.ல.சு.க யை சேர்ந்த நாடாளுமன்ற அங்கத்தவர்கள், சிறிமாவோ பண்டாரநாயக்கா மற்றும் மைத்திரிபால சேனநாயக்க ஆகியோர். அரசாங்கத்தில் இணைந்திராத இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானும் தெரிவுக் குழுவில் இடம் பெற்றிருந்தார். அப்போது பிரதான எதிர்க்கட்சியாக இருந்த தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி (ரி.யு.எல்.எப்) குழுவில் பங்குபற்ற மறுத்துவிட்டது.

(18ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச கூண்டில் இலங்கை

# அரசின் முயற்சியை அனுமதியோம்

## எதிர்க்கட்சித்தலைவர் தெரிவிப்பு



இலங்கையை சர்வதேசக் கூண்டில் நிறுத்தும் அரசாங்கத்தின் முயற்சியை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. யுத்தக் குற்ற விசாரணைகள் தொடர்பில் சர்வதேசத்தை திருப்திப்படுத்தவே இலங்கையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் கொள்கையானது சர்வதேச வேலைத்திட்டம் மட்டுமே. மக்களையும் நாட்டையும் அது பலப்படுத்தாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் கொள்கை சர்வதேசத்தை திருப்திப்படுத்துவதாக மட் டுமே அமைந்துள்ளது. சர்வதேச தலையீட்டை ஏற்படுத்தி அதனூடாக அரசியல் செய்யவே ஐக்கிய தேசியக் கட்சி முயற்சிக்கின்றது. ஆனால் அதற்கு நாம் ஒருபோதும் இணங்கப் போவதில்லை. எமது அரசியல் கொள்கையும் செயற்பாடுகளும் நாட்டையும் மக்களையும் பிரதானப்படுத்தியது. இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது இடம் பெற்றதாக கூறப்படும் யுத்தக் குற்றச் சாட்டுகளை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

நாட்டில் மூவின மக்களையும் பாதித்த தீவிரவாதத்தை நியாயப்படுத்தி புலிகளுக்கான போராட்டத்தை நியாயப்படுத்த இவர்கள் முயற்சிக்கின்றனர். அதை நாமும் ஏற்றுக்கொண்டால் மூவின மக்களின் நிம்மதி மீண்டும் பறிபோய் விடும். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி அமைந்தவுடன் இன்று வடக்கில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மீண்டும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. சர்வதேச புலம்பெயர் அமைப்புகளின கரம் மீண்டும் ஓங்கியுள்ளது. தடை செய்யப்பட்ட பல அமைப்புகள் மீண்டும் உயிர்பெற்றுள்ளன. இந்நிலையில் இவர்களைத் தொடர்ந்தும் ஆட்சியில் வைத்திருந்தால் நாடு மோசமான விளைவுகளை சந்திக்கும்.

அதேபோல் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்ற விசாரணைகளை சர்வதேசம் மேற்கொண்டாலும் அல்லது ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம் மேற்கொண்டாலும் இறுதி முடிவு ஒன்றாகவே அமையும். ஆகவே இலங்கையில நடைபெறவிருக்கும் உள்ளக விசாரணை இலங்கையை எந்த வகையிலும் பாதுகாக்காது. எனவே நாட்டையும் இராணுவத்தையும் பாதிக்கும் எந்தவொரு விசாரணையும் இலங்கையில் நடைபெறக்கூடாது.

மேலும் வடக்கில் பொது மக்களைப் பாதிக்கும் எந்த நடவடிக்கையும் எமது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவில்லை. மனிதாபிமான நடவடிக்கையே வடக்கில் இடம்பெற்றது. நாம் செய்த நடவடிக்கையால் இன்னும் பல காலத்துக்கு தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதில் யாருடைய தலையீடுகளுக்கும் நாம் இடம் கொடுக்கத் தேவையில்லை என்வும் குறிப்பிட்டார்.

# குருநாகல் கூட்டத்திற்கு இல்லை ஒழுங்குப்பிரச்சினை

## சுதந்திரக்கட்சி அறிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு ஆதரவு தெரிவித்து குருநாகலையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட கட்சி உறுப்பினர்கள் குறித்து ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்பட மாட்டாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கும் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஆரம்பித்துள்ளதனால் ஒழுக்காற்றுப் பிரச்சினை எழவில்லை யென அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் நடைபெற்ற கூட்டங்களுக்கு ஸ்ரீ.ல.சு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு செல்லக் கூடாது எனத் தடை விதித்திருந்தது. மீறிச் சென்றவர்களுக்கு ஒழுக்காற்றுப் பிரச்சினை எழுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிக்கப்படும்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வந்தால் அதைத் தோற்கடிப்போம். நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை பலம் எம்மிடம் உள்ளது என வெளிவிவகார பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம் பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டு வருவதில் சிலர் மும்முரமாக உள்ளனர். ஆனால் அதுதொடர்பில் நாம் கவலை அடைய மாட்டோம்.

பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தாலும் அதை நாம் தோற்கடிப்போம். மகிந்த ஆதரவு கூட்டணியின் இந்தச் செயற்பாடுகள் தேசிய அரசாங்கத்திற்கு எதிரானது மட்டுமல்ல ஜனநாயகத்திற்கும் எதிரானதொன்றாகும். அதேபோல் இந்தச் செயற்பாடுகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றன. எனவே இதை நாம் கவனத்தில் கொள்ள மாட்டோம். மேலும் அரசாங்கத்திற்கு எதிராக இவர்கள் செயற்பட்டாலும் எமது அரசாங்கத்தை நாம் பலப்படுத்தி விட்டோம்.

அடுத்த அரசாங்கமும் எமது அரசாங்கமாக அமைவதற்கான வேலைத்திட்டங்களையும் நாம் முன்னெடுத்துள்ளோம். மக்கள் மத்தியில் நாம் பலமடைந்துள்ளோம். எனவே அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் எமது வெற்றி சாத்தியம் எனவும் அவர் தெரிவித்தார்.

# அரசியல் குழப்ப நிலைக்கு தீர்வுகாண பொதுத்தேர்தல்

## வலியுறுத்தும் பீரிஸ்



நாட்டில் நிலவி வரும் அரசியல் குழப்ப நிலைமைகளுக்கு தீர்வு காண உடனடியாக பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறைமை மாற்றப்பட்டாலும் மாற்றம் செய்யப்படாவிட்டாலும் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மை அரசாங்கமொன்றினால் நாடு நிர்வாகம் செய்யப்படுவதனை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறான தேர்தல் முறைமை அமுல்படுத்தப்பட்டாலும், எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடிக்கும் வல்லமை காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு வழங்கி வரும் ஆதரவினை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உடனடியாக இரத்துச் செய்ய வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் பாரிய பின்னடைவை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். புதிய அரசாங்கத்தின் 100 நாள் திட்டம் தோல்வியடைந்துள்ளமை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை மூலம் நிரூபணமாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# புதிய கட்சியில் இணையுமாறு கோத்தாவை அழைக்கவில்லை

## என்கிறது பொதுபலசேனா



தாம் ஆரம்பிக்கவுள்ள புதிய கட்சியில், இணைந்து கொள்ளுமாறு, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவுக்கு அதிகாரபூர்வமான அழைப்பு விடுக்கப்படவில்லை என பொது பலசேனா அமைப்புத் தெரிவித்துள்ளது.

சிங்கள கடும்போக்குவாத பொது பலசேனா அமைப்பு, தாம் புதிய அரசியல் அமைப்பு ஒன்றை ஆரம்பித்து தேர்தலில் போட்டியிடவுள்ளதாகவும், சிங்கள பௌத்தர்களுக்குத் தலைமை தாங்கும், தேசியத் தலைவர் ஒருவரை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும், அறிவித்திருந்தது.

இதையடுத்து, கோத்தாபய ராஜபக்ஷவை புதிய கட்சியில் இணைந்து கொள்ளுமாறு பொது பலசேனா அழைப்பு விடுத்துள்ளதாக செய்திகள் வெளியாகின.

இதனை நிராகரித்துள்ள, பொது பலசேனாவின் நிறைவேற்று அதிகாரி, டிலந்த விதானகே, ஊடகங்களில் வெளியானது போன்று, எமது கட்சியில் இணைந்து கொள்ளுமாறு, கோத்தாபய ராஜபக்சவுக்கு அழைப்பு விடுக்கவில்லை.

இது தொர்டர்பாக கோத்தாபய ராஜபக்ஷவும் எம்முடன் பேச்சு நடத்தவில்லை.

ஊடகங்களில் வெளியான இந்த பொய்யான தகவல்கள், கோத்தாபய ராஜபக்ஷவினதும், எமது அரசியல் அமைப்பினதும் அரசியல் எதிர்பார்ப்புகளுக்கு எதிரான சூழ்ச்சியாகும்.

இதுபற்றிய பொய்யான செய்திகளை வெளியிட்ட ஊடகங்களுக்கு எதிராக, சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என்றும் தெரிவித்துள்ளார்.

# உள்ளூராட்சி மன்றங்கள் குறித்து நாளையதினம் தீர்மானிக்கப்படும்

## அமைச்சர் கரு தெரிவிப்பு



உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் நாளை புதன்கிழமை தீர்மானிக்கப்பட உள்ளதாக உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பௌத்த சாசன அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பதவிக் காலம் முடிவடைந்த 234 உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் இதுவரையில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் நாளை புதன்கிழமை அமைசசரவை கூடி ஆராயவுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைநதது. அரசாங்கம் உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலத்தை ஒரு மாதத்திற்கு நீடித்திருந்தது.

பதவிக் காலம் பூர்த்தியான தன் பின்னர் தேர்தல் நடாத்துவதா அல்லது செயலாளர்களிடம் அதிகாரத்தை ஒப்படைப்பதா என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தொகுதிவாரி அடிப்படையில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு தொகுதிவாரி அடிப்படையில் நடாத்த வேண்டுமாயின் மூன்று நான்கு மாத கால அவகாசம் தேவைப்படும்.

தொகுதி நிர்ணய அறிக்கையை தேர்தல் ஆணையாளருக்கு அனுப்புதல், வர்த்தகமானியில் அறிவித்தல், நாடாளுமன்றில் சமர்ப்பித்தல், மக்களின் கருத்துக்களை கேட்டறிதல் போன்ற பணிகளுக்கு கால அவகாசம் தேவைப்படுகின்றது.


இந்த விடயங்கள் குறித்து ஆராய்ந்து அமைச்சரவை தேர்தல் நடாத்துவது குறித்து தீர்மானிக்கும் என அமைச்சர் கரு ஜயசூரிய கொழும்பு ஊடகமொன றுக்குத் தெரிவித்துள்ளார்.

# நிதிநெருக்கடியில் அரசு

மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் கடும் நிதிநெருக்கடியைப் எதிர்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்க முடியாத நிலையில் அரசாங்கம் உள்ளதாகவும் கவலை வெளியிட்டுள்ளார்.


கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்துள்ள அவர் திறைசேரியின் நிலை காரணமாகவே அரசாங்கம் இந்த நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். முன்னைய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களில் வெளிப்படைத்தன்மை இல்லாததே இதற்கு காரணம்,போதிய நிதி இல்லாததால் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவது கூட கடினமாகவுள்ளது.அரசாங்கம் அரச ஊழியர்கள் அனைவருக்கும் சம்பளம் வழங்கப்படவில்லை, சிலருக்கு வேலை கூட இல்லை.

நல்லாட்சி அரசாங்கத்திற்கு எதிராக சிலர் எதிர்புரட்சியை ஆரம்பித்துள்ளனர் என முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மானிப்பாய் பொலிஸார் சமுதாய காவல்துறையினருடன் இணைந்து வெசாக் தினத்தை நடத்தினர். பொறுப்பாதிகாரியின் ஆர்.ஏ.டி.றொகான் ஆலோசனைக் கிணங்க நடைபெற்ற நிகழ்வுக்கு உப பொலிஸ் பரிசோதகர் பாலசூரிய மற்றும் பொதுசுகாதார பரிசோதகர் ஆகியோர் கலந்துகொண்டனர். (54)

# மைத்திரி அரசுடன் நல்லுறவு
# கூட்டமைப்பின் நிலைப்பாடு இது



(வவுனியா)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசுடன் நல்லுறவை கடைப்பிடிப்பதே கூட்டமைப்பின் தற்போதைய நிலைப்பாடாக உள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

வடமாகாணசபைக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்ட நடராஜாவின் வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடமாகாணசபை கடந்த காலங்களில் இயங்க முடியாமல் இருந்தமைக்கு காரணம், முன்னைய அரசு மற்றும் ஆளுநர் உட்பட பிரதம செயலாளருமாக இருந்தனர்.

ஆனால் தற்போது ஆளுநர் உட்பட பிரதம செயலாளர் மாற்றப்பட்டு விட்டனர். இதன் காரணமாக தற்போது நான் உட்பட வடமாகாணசபை உறுப்பினர்களும் அமைச்சர்களும் இனி மேடை சரியில்லை என கூற முடியாது. ஆகவே மிகு திக்காலங்களை நாம் முடிந்த வரை மக்களுக்கு சேவை செய்ய வேண்டும்.

தமிழரசுக்கட்சியின் தலைவருக்கும் நான் பல தடவைகள் கூறியிருக்கின்றேன். மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ள வேண்டும். மாகாணசபை என்பது எமது இனப்பிரச்சினைக்கான ஒரேயொரு உத்தியோக பூர்வமான பதிவு.

ஆனால் அதைச் செய்வதற்கு மத்திய அரசு இணங்கா விட்டாலும் கூட மக்களின் தேவைகளை இனங்கண்டு செய்யவேண்டிய சட்ட ரீதியான தார்ப்பரியங்கள் எங்களது மாகாணசபைக்கு எவ்வளவோ உள்ளது. அதை இல்லை என்று சொல்ல முடியாது. எதற்கு எடுத்தாலும் காரணம் காட்டி நிற்க முடியாது.

இந்திய அரசால் எங்களுக்கு வழங்கப்பட்ட 5,000 வீடுகளில் விகிதாசாரத்தின் படி பார்த்தால் எங்களுடைய தமிழ் மக்களை விட ஏனைய இனத்தவர்களுக்கு அதிகமாகவே சென்றுள்ளது.

நல்லிணக்க அரசு நல்லதொரு மாற்றம் என்பது உண்மையாக இருக்கலாம். ஜனநாயக ரீதியாக துணிந்து நாம் கதைக்கக்கூடிய நிலையை, இந்த அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது என்பது உண்மையாக இருந்தாலும் 19ஆவது திருத்த சட்டத்தில் எங்களைப் பற்றி எதுவுமே சொல்லப்படவில்லை என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிகப் பெரிய கவலையாகும்.

எழுத்து மூலமாக இல்லாவிட்டாலும் வாய் மூலமாகவேனும் ஜனாதிபதியோ, பிரதமரோ அல்லது தற்போதுள்ள தேசிய அரசாங்கமாவது ஒரு வசனம் கூட எமக்கு திருப்திப்படுத்துவதற்காக கூட சொல்லவில்லை.

இந்நிலையில் சிறிதுகாலத்துக்கு இந்த அரசை விட்டுப் பிடிக்கலாம் என்ற அன்புக்கட்டளைகளோ அல்லது கட்டளைகளோ தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைமைகளால் எமக்கு வந்து கொண்டிருக்கின்றது.

ஆனால் ஒன்றை நாம் புரிந்து கொள்ளவேண்டும். குற்றவாளியாக காணப்பட்ட சரத்பொன் சேகாவுக்கு ஒரேநாளில் பீல்ட் மார்சல் பட்டம் வழங்கமுடியுமானால், குற்றவாளியாக காணப்பட்ட பிரதம நீதியரசர் ஒரே இரவில் மீண்டும் பிரதம நீதியரசர் ஆக முடியுமானால், காணாமற் போனோர் தொடர்பிலோ ஒட்டுமொத்த காணிகளை விடுவிப்பது தொடர்பாகவோ நல்லதொரு சமிக்ஞையை புதிய அரசு காட்டவில்லை என்பதே எமது கவலை என அவர் மேலும் தெரிவித்தார்.

# வெளிச்சவீடு அமைக்க கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகர கரையோர மக்களின் நலன்கருதி வெளிச்சவீடொன்றினை அமைத்துத்தருமாறு முல்லைத்தீவு நகர அபிவிருத்திக் குழு முல்லைத்தீவு மாவட்ட செயலர் திருமதி.றூபவதி கேதீஸ்வரனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

1990 இற்குப் பிறகு இவ் வெளிச்ச வீடு செயலிழந்து விட்டது.

முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் ஆழ்கடல் தொழில் செய்வதில் வெளிச்சவீடு இல்லாமை பெரும் இடராகவுள்ள நிலையில் வெளிச்சவீடொன்றினை அமைத்துத்தருமாறு நகரஅபிவிருத்திக் குழு தனது வேண்டுகோளை விடுத்துள்ளது. (160)

# நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் சமூக நலன்விரும்பிகள் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா மற்றும் பிராந்திய பொலிஸ் பொறுப்பதிகாரி எ.எம்.ஜவர் ஆகியோரின் தலைமையில் அண்மையில் சமூக நலன் விரும்பிகள் கலந்துரையாடல் ஒன்று நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்றது. இக் கலந்துரையாடலின் போது நெல்லியடிப் பகுதியில் அண்மைக் காலமாக இடம் பெற்று வரும் கொலை, கொள்ளை, விபத்துக்கள் தொடர்பான குற்றச்செயல்களை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அதன் போது கடந்த மூன்று மாதங்களுக்கு முன் சட்ட ஒழுங்கற்ற நடவடிக்கைகள் இப் பகுதியில் அதிகம் இடம்பெற்று வந்தது. இவற்றையெல்லாம் தற்போது முடிவுக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க முயற்சிப்பதாக தெரிவித்தனர்.

பொதுவாக இப்பகுதியில் இடம்பெறும் குற்றச் செயல்களை பொலிஸாரிடம் முறையிடுவதற்கு பொது மக்கள் தயக்கம் காட்டி வருவதாகவும் இவ்வாறான நிலைமைகளிலிருந்து பொது மக்கள் மீள வேண்டுமெனவும் இக்கலந் துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (18)



கிளி/இராமகிருஷ்ண வித்தியாலய மாணவர்களுக்கு லண்டன் ஜெயந்தன் ஜானகி குடும்பத்தின் செல்வப்புதல்வன் ஜெயராயனின் 2 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு ஓய்வு நிலை அதிபர் க.இராஜேந்திரத்தால் கற்றல் உபகரணம அண்மையில் வழங்கப்பட்டது. (90)

**மேடம்**
பாகுபாடு காட்ட முயன்ற வேளை பிள்ளைகள் மத்தியில் ரகளை ஏற்படல்.

**ரிஷபம்**
உள்ளொன்று வைத்துப்புறமொன்று பேசும் நண்பர்களுடன் உறவுகலக்காதிருங்கள்.

**மிதுனம்**
அடகுநகை ஏலம் போகும் செய்தி கேட்டு அளவிலாதுக்கமடைதல்.

**கடகம்**
ஏற்பு ஊசி போடுவதில் அலட்சியம் இருந்ததால் ஆபத்துச் சூழல்.

**சிம்மம்**
பேதம் காரணமாக திருமணப் பேச்சு முறிவடைதல்.

**மீனம்**
பிதாவின் கருணையால் சொதத்தின் ஒருபகுதியை அனுபவிக்கும் யோகம் பிறக்கும்.

## முரசின் இன்றைய பலன்

(12.05.2015 செவ்வாய்க்கிழமை)

மன்மத வருஷம் சித்திரை மாதம் 29 ஆம் திகதி.
சித்த யோகம். நவமி - திதி.
அவிட்ட நட்சத்திரம் மு.ப.07.59 வரை. பின் சதயம்.
இராகுகாலம் 02.54-04.24 வரை சுபநேரம் 10.24-11.54 வரை.



ஜோதிர் விந்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**கன்னி**
புதிய கற்கை நெறிகளைப் பயில ஆயத்தமாதல்.

**கும்பம்**
எதிர்பார்த்த இடத்திலிருந்து கோரிய உதவி கிடைத்தல்.

**மகரம்**
கணக்கு வழக்குகளில் சிறு சிக்கல் ஏற்பட்டுப் பின் சரிப்பட்டு வரல்.

**தனுசு**
நாவைக்காக்காமையினால் எதிரிகள் முளைத்து பிரச்சினை ஏற்படல்.

**விருச்சிகம்**
மனதை ஒருமுகப்படுத்தும்யோகக கலை, பிராணாயாமம் போன்றவற்றைப் பயில எண்ணமிடல்.

**துலாம்**
நோய் நீங்க உணவுக்கட்டுப்பாட்டினைக் கடைப்பிடிக்க திடசங்கற்பம் பூணுதல்.

# டெஸ்ட், ஒருநாள், ரி20 ஆட்டங்கள்

# இலங்கை வருகிறது பாகிஸ்தான்அணி

ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் இலங்கையில் 3 டெஸ்ட் போட்டிகள், 5 ஒருநாள் போட்டிகள் மற்றும் இரண்டு ரி-20 போட்டிகள் கொண்ட தொடரில் பாகிஸ்தான் அணி விளையாடவுள்ளதை இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உறுதிப்படுத்தியுள்ளது.

டெஸ்ட் போட்டிகள் விளையாடுவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மைதான ஒழுங்குகளில் மாத்திரம் சிறிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் விளையாடத் திட்டமிடப்பட்டிருந்த டெஸ்ட் போட்டிகள் வேறு மைதானங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. ஜூன் மாதம் 17ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள முதலாவது டெஸ்ட் போட்டி காலியிலும், இரண்டாவது போட்டி கொழும்பு சரவணமுத்து மைதானத்திலும், மூன்றாவது போட்டி பல்லேகலயிலும் நடைபெறவுள்ளன.

ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் ஜூலை 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தப் போட்டிகள் காலநிலை சீர்கேட்டினால் பாதிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பில் மேலதிக நாட்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ரி20 போட்டிகள் ஜூலை 30 மற்றும் ஒகஸ்ட் முதலாம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இந்தத் தொடருக்கு முன்னதாக, இலங்கை வரும் பாகிஸ்தான் அணி 3 நாட்கள் கொண்ட பயிற்சிப்போட்டியொன்றில் கொழும்பு கோல்ட்ஸ் மைதானத்தில் விளையாடவுள்ளது.

# நடுவருடன் முரண்பாடு டி கொக்குக்கு அபராதம்



ராயப்பூரில் நடைபெற்ற போட்டியின் போது, நடுவரின் முடிவை ஏற்க மறுத்த டில்லி அணி வீரர் குவின்டன் டி கொக்குக்கு அவரது ஆட்டக் கட்டணத்தில் 50 சதவீதம் அபராதமாக விதிக்கப்படுகிறது.

டி கொக் ஐ.பி.எல். நடத்தை விதிகளை மீறியதால் அவருக்கு இந்த அபராதம் விதிக்கப்படுகிறது. இதனை அவர் ஒப்புக்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கடந்த சனிக்கிழமை இரவு டெல்லி மற்றும் ஹைதராபாத் அணிகள் ராய்ப்பூரில் மோதின.

இதில் டி கொக் 50 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இருப்பினும் அந்த அணி கடைசியில் ஹைதராபாத்திடம் தோல்வியைத் தழுவியது.

நடப்பு ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் நடுவரின் முடிவுக்கு முரணாக செயற்பட்டதாக டில்லி டேர்டெவில்ஸ் வீரர் குவின்டன் டி கொக்குக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஐபிஎல் அமைப்பு நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

# முதல்நிலை வீரராவதே மத்தியூஸின் கனவு



இலங்கை அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ், சிறந்த வீரருக்கான விஸ்டன் இந்தியா விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதினை விஸ்டன் இந்தியா அமைப்பு வழங்கி வருகிறது.

கடந்த ஆண்டு சிறப்பாக செயற்பட்ட சகலதுறை ஆட்டக்காரர், இலங்கை அணித்தலைவர் மத்யூஸ் இந்த விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தவிர, இந்திய வீரர் ரஹானே, ரிஸி தவான், இந்திய மகளிர் அணித்தலைவி மிதாலி ராஜ், பாகிஸ்தான் வீரர் உமர் அக்மல், வங்கதேச அணியின் இளம் வீரர் மொமினுல் ஹக் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து அஞ்சலோ மத்தியூஸ் கூறுகையில், நான் பொதுவாக சூழ்நிலைக்கு ஏற்றவாறு விளையாடுவேன். நான் மேற்கொண்ட பயிற்சியில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. இது ஒவ்வொரு இனிங்ஸிலும் எனக்கு கைகொடுக்கிறது.

உலகின் சகலதுறை வீரருக்கான தரவரிசைப் பட்டியலில் முதல் இடம் பிடிக்க வேண்டும் என்பது கனவாக இருக்கிறது. இதற்காக கடந்த வருடம் சில முயற்சிகளை மேற்கொண்டேன் என்று தெரிவித்துள்ளார்.

# இந்தியாவுடன் கிரிக்கெட் தொடர் தயார் நிலையில் பாகிஸ்தான்



இந்தியாவுடனான கிரிக்கெட் தொடரை நடத்துவதற்கு தயாராக இருப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் சஹாரியார் கான் தெரிவித்துள்ளார்.

2008ஆம் ஆண்டு மும்பை குண்டு வெடிப்புக்குப் பின்னர் அரசியல் காரணங்களால் இரு நாடுகளிடையிலான கிரிக்கெட் உறவு பாதிக்கப்பட்டது.

சுமார் 5 ஆண்டுகளுக்குப் பிறகு 2012 இல் இந்தியாவில் இரு அணிகளும் 3 ஒருநாள் மற்றும் இரண்டு ரி20 போட்டிகள் கொண்ட குறுகிய தொடரில் பங்கேற்றது. அதன் பிறகு ஐசிசி ஒருங்கிணைத்த போட்டிகளிலேயே இருநாட்டு அணிகளும் விளையாடின.

இந்நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் சஹாரியார் கான், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பிசிசிஐ) தலைவர் ஜக்மோகன் டால்மியாவை கொல்கத்தாவில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பு குறித்து சஹாரியார் கான் கருத்து வெளியிடுகையில்,

இந்தியா-பாகிஸ்தான் தொடரை மீண்டும் தொடங்கவுள்ளோம். இது இருநாட்டு கிரிக்கெட் அணிகளிடையே மறுமலர்ச்சியை உண்டாக்கும். ஏற்கனவே திட்டமிட்டப்படி மூன்று டெஸ்ட், 5 ஒரு நாள் ஆட்டங்கள், இரண்டு டி20 ஆட்டங்கள் கொண்ட தொடர் டிசம்பரில் தொடங்கும். இதற்கான ஆயத்தங்கள் மும்முரமாக நடக்கின்றன. எல்லா தடைகளையும் மீறி இது நடக்கும் என்று தெரிவித்துள்ளார்.

பிசிசிஐ தலைவர் ஜக்மோகன் டால்மியா இது தொடர்பாக கூறுகையில், இந்தத் தொடரை மீண்டும் நடாத்துவதற்கு நம்பிக்கையுடன் உள்ளோம். சில விடயங்கள் மட்டுமே தடையாக உள்ளன.

பொது ஆதரவு இல்லாமல் எங்களால் இதில் முன்னோக்கிச் செல்ல இயலாது. அரசு மற்றும் உள்துறை அமைச்சகத்தின் ஆதரவு இல்லாமல் எங்களால் எதையும் செய்ய முடியாது. இந்த நிமிடத்தில் எந்தத் தடையும் இல்லை என்று கூறியுள்ளார்.

**ஐ.பி.எல்**

**இன்றைய ஆட்டம்**

IPL

டில்லி எதிர் சென்னை

இடம்-ராய்ப்பூர்

நேரம்- இரவு 8 மணி

# டிவில்லியர்ஸின் எழுச்சி டுவிட்டரில் பதிவுகள்



பெங்களூர் அணியின் துடுப்பாட்ட வீரர் டிவில்லியர்ஸின் அதிரடி ஆட்டம் பற்றி முன்னணி வீரர்கள் டுவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மும்பை அணிக்கு எதிராக நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பெங்களூர் அணியின் அதிரடி ஆட்டக்காரர் டிவில்லியர்ஸ் சதம் விளாசினார். இவர் 59 பந்துகளில் 133 ஓட்டங்களுடன் (19 பவுண்டரி, 4 சிக்சர்கள் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இவரது அதிரடியால் டுவிட்டர் வலைத்தளம் நிரம்பி வழிந்தது. பலரும் டிவில்லியர்ஸ் பற்றி தங்கள் கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.

**டேவிட் வோர்னர்--** என்னா அடி. நான் முன்பே கூறியது போல் தரமான கிரிக்கெட்டை விளையாடுகிறார்.

**ஜிம்மி நிசாம்--** பந்துவீச்சாளர்கள் டிவில்லியர்ஸ்க்கு பந்து வீச பயப்படுகின்றனர்.

**ஜெயவர்த்தன--** பிரிந்து மேய்ந்து விட்டார். இதான் கிளாஸ்.

**இர்பான் பதான்--** நான் ஒரு பந்துவீச்சாளராக டிவில்லியர்ஸ் மேல் வழக்குத் தொடுக்கப் போகிறேன். அனைத்து பந்துவீச்சாளரும் எனக்கு ஆதரவு தர வேண்டும்.

# மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் சம்பியனானார் முர்ரே



மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் போட்டி ஸ்பெயினில் உள்ள மட்ரிட் நகரில் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் இரவு ஆண்கள் ஒற்றையருக்கு இறுதிப் போட்டி நடைபெற்றது.

இதில் களிமண் தரையில் ஜாம்பவானாக திகழும் நடால், பிரிட்டனின் அண்டி முர்ரேவுடன் மோதினார்.

இதில் யாரும் எதிர்பார்க்காத வகையில் முர்ரே 6-3, 6-2 என எளிதில் நடாலை வீழத்தி சம்பியன் பட்டம் வென்றார்.

7 முறை களிமண் தரையில் நடாலுடன் மோதியுள்ள முர்ரேவுக்கு முதல் வெற்றி இதுவாகும். மேலும், 27-வயதாகும் முர்ரே களிமண் தரையில் சம்பியன் பட்டத்தை வெல்வதும் இதுவே முதல் முறையாகும்.

4 முறை மட்ரிட் ஓப்பன் பட்டத்தை வென்ற நடால், ஐந்தாவது முறையாக கைப்பற்றி சாதனை படைக்க துடித்த அவரது எண்ணம் வீணானது.

கடந்த சில மாதங்களாக நடாலின் ஆட்டத்தில் வேகம் குறைந்து வருவது குறிப்பிடத்தக்கது

# ரி-20 தெரிவுப் போட்டியில் டிறிபேக் தாரகை வெற்றி

சாவகச்சேரி டிறிபேக் தாரகை மற்றும் சுழிபுரம் விக்றோரியன்ஸ அணிகளுக்கிடையிலான ரி20 போட்டிகளுக்கான தெரிவு போட்டியில் டிறிபேக் தாரகை அணி 38 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது .

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய டிறிபேக் தாரகை அணி 22 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாறிய வேளை தர்ஷன், லக்ஷனின் நிதானமான துடுப்பாட்டமும் புஷாந்தன், கோபி ஆகியோரின் அதிரடி ஆட்டமும் கைகொடுக்க 20 ஓவர் முடிவில் 150 ஓட்டங்களை பெற்று கொண்டது. துடுப்பாட் டத்தில் புஷாந்தன் 43 ஓட்டங்களையும் கோபி 27 ஓட்டங்களையும் லக்ஷன் 23 தர்ஷன் 17ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவச்சில் பிரதீஷன், பிரணவன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர் .பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் விக்ரோறியன்ஸ் அணி மார்க் சிங்கின் சுழல் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 112 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது .பந்துவீச்சில் மார்க்சிங் 5 விக் கெட்டுக்களையும் பிரவீன், நிலன ஆகியோர் 2 விக்கெட்டுக்களையும் கைப் பற்றினர்.

இப் போட்டி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. 2 ஆவது தெரிவுப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது . (11)


# மரதன் போட்டி முடிவுகள்

கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நடாத்திய மரதன் ஓட்டப் போட்டி யில் வெற்றி பெற்றோர் விபரம்.

முதலாமிடம்-அ.பாஸ்கர், இரண்டாமிடம்-க.நிலக்சன், மூன்றாமிடம்-பா.டக்சாஜன் ஆகி யோர் பெற்றுக்கொண்டனர்.

இம் மரதன் ஓட்டப் போட்டி நேற்று முன்தினம் காலை நடைபெற்றது. (105)

# பிரதேச செயலக கபடிப் போட்டி பருத்தித்துறை,தெல்லிப்பளை வெற்றி



யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கபடிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் பெண்கள் பிரிவில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியும் வெற்றி பெற்றுள்ளன.

பிரதேச செயலகங்களுக் கிடையிலான ஆண்களுக்கான கபடிப் போட்டியின் இறுதிப் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் வேலணைப் பிரதேச செயலக அணியும் மோதின இதில் ஆட்டநேர முடிவில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி 58:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

பெண்களுக்கான கபடிப் போட்டியின் இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் தெல்லிப் பளை பிரதேச செயலக அணியும் மோதின.

இதில் இரு அணிகளுமே மாறிமாறிப் புள்ளிகள் பெற்ற வண்ணம் இருந்தன. இருப்பினும் ஆட்டநேர முடிவில் தெல்லிப் பளை பிரதேச செயல அணி 31:27 என்ற புள்ளிகள் அடிப் படையில் வெற்றி பெற்றது.

மேற்படி போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (93)




# லண்டனில் சங்காவுக்கு அவமானம்



பிரித்தானியாவுக்குச் சென்ற இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்காரவுக்கு கசப்பான அனுபவம் கிடைத்ததாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

கடந்த 15 வருடங்களாக லண்டனுக்கு சென்ற போதும் இந்தமுறையே இவ்வாறான நிலை ஏற்பட்டதாக குமார் சங்கக்கார குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை குடிவரவு அதிகாரி ஒருவர் தன்னை மரியாதை குறைவான விதத்தில் நடாத்தியதாக சங்கக்கார தெரிவித்துள்ளார்.

குடிவரவு அதிகாரியின் நடவடிக்கை மிகுந்த அசௌகரியத்தையும் அதிருப்தியையும் வேதனையையும் ஏற்படுத்தியதாகத் தெரிவித்துள் ளார். இந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

அதிஷ்டவசமாக ஏனைய அனைத்து குடிவரவு அதிகாரிகளும் மிகுந்த கனிவாக நடந்து கொண்டார்கள் என குறிப் பிட்டுள்ளார்.


சர்வதேச பயணிகளிடம் நிறத்தையோ மதத்தையோ அவர்களது புகழையோ பார்க்கக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நல்ல எண்ணத்துடன் நாட்டுக்கு வருவோர் நல்ல விதமாக நடாத்தப்பட வேண்டியது அவசியமானது என குமார் சங்கக்கார டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

குமார் சங்கக்கார இங்கிலாந்தின் பிராந்திய அணிகளில் ஒன்றான சர்ரே பிராந்திய அணிககாக ஒப்பந்தம் செய்யப்பட்டு, போட்டிகளில் விளையாடி வருகின்றார் என்பது குறிப்பிடத் தக்கது.

# விறுவிறுப்பிற்கு பஞ்சமில்லாத கொக்குவில் கே.சி.சி. கூடைப்பந்து சுற்று

(யாழ்ப்பாணம்)



கொக்குவில் மத்திய சன சமூக நிலையம் நடாத்தி வரும் ஆண்களுக்கான கூடைப்பந் தாட்டச் சுற்றுப் போட்டியில் 4 அணிகள் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

இதில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியும் யாழ்.பல்கலைக்கழக அணியும் மோதிய போட்டி மிக விறுவிறுப்பாக நடைபெற்றது இரு அணிகளுமே மாறி மாறிப் புள்ளிகள் பெற்ற வண்ணம் இருந்தன.

ஆட்டநேர முடிவில் ஜொலிஸ்ரார் அணி 64:54 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுள்ளது.

மற்றைய இரு அணிகள் மோதிய போட்டியில் கொக்குவில் மத்திய விளையாட்டுக் கழக அணியும் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் யாழ்.சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி போட்டி ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தியது. இருப்பினும் கொக்குவில் மத்திய விளையாட்டுக்கழக அணி தொடர்ந்தும் போராடி வந்தது.

இருப்பினும் ஆட்டநேர முடிவில் யாழ்.சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி 89:59 என்ற புள்ளிகள் பெற்று வெற்றியைத் தனதாக்கிக்கொண்டது.

பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணியும் வட்டர் பிளேய் விளையாட்டுக்கழக அணியும் மோதிய மற்றுமொரு போட்டியில் பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணியின் ஆதிக்கம் மேலோங்கி இருந்தது.

வட்டர்பிளேய் விளையாட்டுக் கழக அணி புள்ளிகள் பெறத் தடுமாறிய போதும் பமிலியன்ஸை எதிர்த்துப் போராடி வந்தது ஆட்டநேர முடிவில் பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 53:35 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

கொக்குவில் மத்திய விளையாட்டுக்கழக அணியும் உடுவில் விளையாட்டுக்கழக அணியும் மோதிய மற்றுமொரு போட்டி நடைபெற்றது. இதில் இரு அணிகளுமே ஒன்றுக் கொன்று சளைத்தவை இல்லை என மோதின.

இருப்பினும் ஆட்டநேர முடிவில் கொக்குவில் மத்திய விளையாட்டுக்கழக அணி 41:37 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மேற்படி போட்டிகள் கடந்த வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. (93)

# கால்பந்து இறுதியாட்டம் நவஜீவன்ஸ் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட கால்பந்தாட்ட இறுதிப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வெற்றி பெற்றுள்ளது.

இறுதிப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியும் கர்வெட்டி டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணியும் மோதின.

ஆட்டநேர முடிவில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டு கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மேற்படி போட்டி கொலின்ஸ விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. (93)





யாழ்.அராலி வீதியில் அமைந்துள்ள அல்அஸ்ஹார் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி கடந்த வாரம் யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது விருந்தினர் கொடியேற்றுவதையும் விநோத உடைப் போட்டியில் கலந்துகொண்ட மாணவர்களையும் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (105)

# தமிழ் மக்களுக்கு எரிச்சலை ஊட்டியிருக்கும் அரசியல்

**- புருஜோத்தமன் தங்கமயில் கட்டுரையிலிருந்து.**

ஜனாதிபதித் தேர்தலின் பின் நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தையும் அதனூடு கிடைத்த சிறிய ஜனநாயக இடைவெளியையும் பல தரப்புக்களும் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள ஆரம்பித்து விட்டன.

ஆனால், வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் அரசியல் தலைமை முன்னோக்கிப் பயணிப்பதற்குப் பதிலாக, மீண்டும் மீண்டும் சிக்கலான களத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றதோ என்று அஞ்ச வேண்டியிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய நிலைப்பாடு என்ன, எதிர்காலத் திட்டங்கள் என்ன, மேற்குலகின் ஆதரவு பெற்ற மைத்திரி அரசோடு முட்டி மோதி இனப்பிரச்சினைக்கான தீர்வினை நோக்கி பயணிப்பதற்கான முனைப்புக்கள் என்ன? என்பது தொடர்பில் பெரும் குழப்பம் நீடிக்கின்றது.

தவிர்க்க முடியாமல் தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமது அரசியல் தலைமையாக முன்மொழிந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு இது எரிச்சலை ஊட்டியிருக்கின்றது.

எதிர்கால நலன்களை கருத்திற் கொண்டு தெளிவான திட்டங்களை வகுத்து பெரும் பாய்ச்சல் நிகழ்த்த வேண்டிய கால கட்டத்தில் தமிழர் அரசியல் இருக்கின்றது. ஆனால், அப்படியான புரிதல்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படுத்தவில்லை. மாறாக, உள்ளக முரண்பாடுகள் மற்றும் அதிகாரப் போட்டிகளின் சிக்கல்களை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருங்கிணைக்கப்பட்ட காலம் தொட்டு, அதற்குள் அதிகாரப் போட்டி இருப்பது உண்மைதான். ஆனால், அந்தப் போட்டியின் அளவு விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் நாளுக்கு நாள் அதிகரித்து வந்திருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய நீட்சி என்பது, தமிழ் மக்களின் வாக்குகளுக்காக மட்டுமே என்கிற நிலையை அடைந்துவிட்டது. கொள்கை, கோட்பாடுகள் என்கிற எந்தவொரு புள்ளியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் பெருமளவுக்கு இணைந்து கொள்ளவில்லை.

தமிழ்த் தேசியம் எனும் புள்ளியை தமது இணக்கத்துக்கான இடமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் காட்டிக் கொண்டாலும் உண்மை வேறு மாதிரியானது.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான காலம், தமிழர் அரசியலில் கத்திமுனைப் பயணத்தை ஒத்தது. எந்தவொரு தருணத்திலும் கவனத்தை சிதறவிட முடியாதது.

கொஞ்சம் அசைந்தாலும் பலமான காயங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டி வரும். ஆனால். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் பலர் பெரும் தூக்கத்துக்கு தயாராகிவிட்டார்கள். அவர்களின் தூக்கம், தமிழ் மக்களின் தலைவிதியை இன்னும் இன்னும் மோசமாக எழுதிவிடும் வாய்ப்புள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்டவர்கள் அதீத மென்போக்குள்ள தமிழ்த் தலைமைகளாக தங்களை தென்னிலங்கையிடம் வெளிப்படுத்தி வருகின்றனர்.

சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் உள்ளிட்ட தமிழரசுக் கட்சி சாராத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், தங்களை கடும்போக்குள்ள தமிழ்த் தலைமைகள் போல காட்டிக் கொண்டாலும் மென்போக்குள்ள தலைமைகளாகவே இருக்கின்றனர்.

இங்கு, தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா எந்த இடத்தில் இருக்கின்றார் என்பதை தெரிவு செய்வதில் பெரும் சிக்கல் இருக்கின்றது. ஏனெனில், அவர், கொழும்பில் ஒருநிலையையும் யாழ்ப்பாணத்தில் இன்னொரு நிலையையும் எடுக்கின்றார்.

ஆனால், வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அதீத மென்போக்குள்ள தமிழ்த் தலைமை எனும் நிலையிலிருந்து கடும்போக்கு தமிழ்த் தலைமை எனும் நிலையை நோக்கி பயணிக்கின்றார். ஆம், அப்படித்தான் கொள்ள வேண்டியிருக்கின்றது.

வட மாகாண சபைத் தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனால், அதிகமான அழுத்தங்களுக்கு மத்தியில் சி.வி.விக்னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாளராக முன்மொழியப்பட்ட போது இருந்த நிலைமை தற்போது இல்லை.

இரா.சம்பந்தனுக்கும் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையிலான இடைவெளி இப்பொது பெருமளவு அதிகரித்து விட்டது. அது, வெளிப்படையாகவே பல இடங்களிலும் வெளிப்பட்டிருக்கின்றது.

அதுவும் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முரண்பாடுகளை இன்னும் மோசமாக்கி விட்டிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒட்டுமொத்த அதிகாரமும் தன்னுள்ளேயே இருக்க வேண்டும் என்று இரா.சம்பந்தன் கருதுகின்றார். ஆனால், அதனை விரும்பாத குழுவினர், சி.வி.விக்னேஸ்வரனுக்குப் பின்னால் இருந்து உந்துதல்களை வழங்குகின்றனர். அந்த உந்துதல்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவி குறித்த கனவை சி.வி. விக்னேஸ்வரனுக்குள்ளும் வளர்த்து விட்டிருக்கின்றது.

மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியதில் தமிழ் மக்களுக்கு கணிசமான பங்குண்டு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சில வேளை, மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்காமல் விட்டிருந்தாலும் தமிழ் மக்கள் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வாக்களித்திருப்பார்கள்.

அது, இயல்பாகவே மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவானதாக மாறியிருக்கும். அப்படிப்பட்ட நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு செய்தியைப் புரிந்து கொள்ள வேண்டும். தமக்குத் தேவையான அரசியல் முடிவுகளை எடுக்கும் அளவுக்கு தமிழ் மக்கள் தயாராகிவிட்டார்கள்.

அவ்வாறான நிலையில் தமிழ் மக்களின் மனங்களையும் எதிர்பார்ப்புக்களையும் புரிந்து கொண்டு செயலாற்றுவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நீட்சிக்கு உதவும். அதுதான். தமிழர் அரசியலுக்கு தற்போதைக்கு அவசியமானது.



# பாடகியின் புத்திசாலித்தனம்!



பிரபல பொப் பாடகியும் நடிகையுமான ரெய்லர் ஸ்விப்ட், சமீபத்தில் தனது பெயரில் இரண்டு புதிய முகவரிகளை வாங்கியிருக்கிறார். அந்த முகவரிகளின் இறுதிப் பகுதியை தெரிந்துகொண்டால் கொஞ்சம் அதிர்ச்சியாக இருக்கும். டொட் போர்ன் மற்றும் டொட் சக்ஸ் என முடியும் முகவரிகள்தான் அவை. போர்ன் என்பது ஆபாச உள்ளடக்கத்தை குறிக்கக்கூடியது. டொட் சக்ஸ"ம் அதே ரகம்தான். எதற்கு இந்த முகவரிகள்? இவற்றை ஏன் பாடகி வாங்க வேண்டும்?

இணைய முகவரிகள் என்றாலே டொட் கொமும், டொட் நெட், டொட் ஓர்க் போன்று முடியும் வகையில் இருந்ததெல்லாம் ஒரு காலம். இந்த முகவரிகளை நிர்வகிக்கும் ஐகொன் அமைப்பு, இணைய வளர்ச்சிக்கு ஏற்ப புதிய டொமைன்களை அறிமுகம் செய்துகொண்டே இருக்கிறது. அந்த வரிசையில், புதிதாக நூற்றுக்கணக்கில் முகவரிகள் அறிமுகமாக இருக்கின்றன. நகரங்களின் பெயரில் முடியும் முகவரிகள் எல்லாம் அறிமுகமாகிக் கொண்டிருக்கின்றன. அந்த வரிசையில்தான், டொட் போர்ன் மற்றும் டொட் சக்ஸ்.

முகவரியை பார்த்தாலே உள்ளடக்கத்தை தெரிந்து கொண்டு பாதுகாப்பாக இருக்கலாம் என்று இந்த முகவரிகளுக்கான தேவை பற்றி ஐகொன் அமைப்பு விளக்கம் அளித்துள்ளது. அது சரி, பாடகி ஸ்விப்ட் ஏன் இவற்றை வாங்க வேண்டும்? என்ன இருந்தாலும், ரெய்லர் ஸ்விப்ட் டொட் போர்ன் என படிப்பது நன்றாகவா இருக்கிறது?

நல்ல கேள்விதான். ஸ்விப்ட் இந்த முகவரியை வாங்கிய காரணம், அவரது முன்னெச்சரிக்கைதான். ஒருவேளை வேறு யாரேனும் இணைய கில்லாடிகள் ஸ்விப்டின் பிரபலத்தை பயன்படுத்திக் கொள்வதற்காக இந்த முகவரியை பதிவு செய்து, அதில் ஆபாச தகவல்களைப் போட்டு, இணைய போக்குவரத்தை ஈர்த்து சம்பாதிக்க முனையலாம் அல்லவா? அப்படி எதுவும் நடக்காமல் இருக்கத்தான், ஸ்விப்ட் தானே முதலில் அந்த முகவரிகளை வாங்கி முடக்கிவிட்டார்.

இதேபோல பிரபலமானவர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் பெயரிலான முகவரிகள் தவறான நோக்கில் பதிவு செய்யப்படுவதை தவிர்க்க, ஐகொன் அமைப்பு இவை பொதுச்சந்தையில் அறிமுகமாகும் முன்னரே, இவற்றை பிரபலங்கள் வாங்கிக்கொள்ள அனுமதி அளித்துள்ளது. அதைத்தான் ஸ்விப்ட் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். மைக்ரோசொ.'.ப்ட் நிறுவனமும் டொட் ஓ.'.பீஸ் முகவரியை தனது பெயருடன் இணைத்து வாங்கி வைத்திருக்கிறது. ஜூலை மாதம் முதல் இந்தப் புதிய முகவரிகள் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு வருகின்றன.

இணைய முகவரி விஷயத்தில் இத்தகைய முன்னெச்சரிக்கை அவசியம் என்பதை நிச்சயம் ரெட் க்ரூஸ் ஒப்புக்கொள்வார். க்ரூஸ், அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் போட்டியில் முதலில் களமிறங்கியிருப்பவர். ஆனால், அவரது பெயரிலான டொட் கொம் முகவரி அவரது வசம் இல்லை. tedcruz.com எனும் அந்த முகவரி, வேறு ஒருவரால் பதிவு செய்யப்பட்டிருப்பதோடு, அந்தத் தளத்தில் பராக் ஒபாமா ஆதரவு கருத்துகள் இடம் பெறச் செய்யப்பட்டுள்ளது. இதனால், ரெட் க்ரூஸ் குழு டொட் ஓர்க் முகவரியைப் பயன்படுத்துகிறது.

தேர்தல் பிரசாரத்தில் இணையம் முக்கிய ஆயுதமாக இருக்கும் நிலையில், ஒரு வேட்பாளர் பெயரிலான இணைய முகவரி இப்படி இருந்தால் எப்படி இருக்கும்? ரெட் க்ரூஸ் இணைய முகவரி: http://www.tedcruz.com/

# அறிவோம் மூலிகைகள்

**துளசியின் வேறு பெயர்கள்:**

துளசிக்கு அரி, துழாய், துளவி, துன்பம், குல்லை, வனம், விருந்தம், மாலலங்கம் என வேறு பெயர்கள் உண்டு. துளசியில் சிறுதுளசி, பெருந்துளசி, செந்துளசி, சிவதுளசி, கல்துளசி என்னும் கிருஷ்ண துளசி, நிலத்துளசி, கற்பூரத் துளசி, நாய்த்துளசி எனவும் பல வகைகள் உண்டு.

**நாயுருவியீன் நன்மைகள்:**

- ❖ நாயுருவியின் இலைச்சாற்றை தேமல், படைக்கு தடவி வந்தால் விரைவில் குணமாகும். விஷப்பூச்சிகளின் கடிக்கும் மருந்தாகிறது.
- ❖ இலையை உப்புடன் கசக்கி தேய்த்து சாறுவிட தேள்கடி விஷம் இறங்கும்.
- ❖ வேரின் பட்டை மற்றும் சாறு கருச்சிதைவுக்குப் பின் ஏற்படும் குருதிப் போக்கினை நிறுத்தும்.
- ❖ முழுத் தாவரத்தின் கசாயம் சிறுநீர் போக்கினைத் தூண்டுவதாகும்.
- ❖ சிறுநீரக நோய்களுக்கு மருந்தாகிறது.



# நீரிழிவும் தோலும்

எஸ்.சுதாகரன்
தாதிய உத்தியோகத்தர்
யாழ். போதனா வைத்தியசாலை

நீரிழிவால் பாதிக்கப்பட்ட பலருக்கு உடல், உள ரீதியாக பல்வேறு பாதிப்புகளும் சருமநோய் பாதிப்புகளும் பொதுவாகப் காணப்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. நீரிழிவில் நரம்பு மண்டலம் பாதிப்படைவதால் தோற் பகுதி உணர்வுதிறன் குறைவு ஏற்பட்டு தோலில் அடிக்கடி புண்கள் மற்றும் கிருமித் தொற்றுக்கள் ஏற்படுவதால் சருமம் பாதிப்படைகின்றது.

குருதியில் வெல்ல மட்டத்தை அதிகரிக்காது கட்டுப்படுத்துவதன் மூலம், குருதியிலும் தோற் பகுதியிலும் காணப்படுகின்ற பக்றீரியாக்கள், பங்கசுகள், பூஞ்சணக் கிருமிகளின் ஊடாகப் போசணையைக் கட்டுப்படுத்தலாம். இதனால் அவற்றின் வளர்ச்சியையும் பெருக்கத்தையும் குறைக்கலாம். அத்துடன் குருதியில் வெண் குருதி அணுக்களின் பேராடும் திறனிலும் பாதிப்பு ஏற்படுவதை குறைத்து வலுவான நிலையில் வைத்திருக்கலாம்.

நீரிழிவில் வெல்ல மட்ட அதிகரிப்பில் எமது தோற்பகுதியில் வியர்வையிலும் குளுக்கோஸ் மற்றும் Acetone (அசரோன்) மணம் போன்றனவும். எமது தோலில் காணப்படுகின்ற கிருமிகளின் வளர்ச்சிக்கு உதவுகின்றன.


குருதியில் சரியான அளவில் வெல்ல மட்டத்தைக் கட்டுப்படுத்தாதபோது எமது உடலானது மேலதிகமாக இருக்கும் குளுக் கோசை வெளியேற்றுவதற்குச் சிறுநீரை அதி- கமாக வெளியேற்றுகிறது. இதன் இறுதி விளைவாக எமது தோல் ஈரப்பசை குறைந்து உலர்வுத்தன்மை அடைகிறது. இந்த நிலையைத் தடுப்பதற்கு நாம் போதியளவு நீராகாரம் எடுத்தல் வேண்டும். குருதியில் வெல்ல மட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.


பொதுவாகச் சலரோக நோயாளிகளில் படர் தாமரை பூஞ்சணத் தொற்றுக்கள், தலைப்படர் தாமரை உடல் படர்தாமரை மற்றும் ஆண், பெண் பிறப்பு உறுப்புக்களைச் சுற்றியும் தொடை, இடுப்பு பகுதிகளில் சொறி, சிவந்த நிலை பூஞ்சணத் தொற்றுக்கள், நகப்படர் தாமரை, நகச்சொத்தை. நகச்சுற்று, வறண்ட சருமம், இதனால் தோலில் வெடிப்புக்கள் கால்விரல்களுக்கு இடையில் புண்கள் மற்றும் அண்டும் பகுதிகளில் புண்கள், சிறுவர்களில் வாய்ப்புண்கள், பருமன் அதிகம் உள்ளவர்களின் தோல் மடிப்புக்கள் தடித்துத் கறுத்து விடுதல் தோல் பகுதியில் கொப்பளங்கள், வீக்கங்கள், கட்டிகள் மற்றும் தோலின் ஆழமான பகுதிகளில் கட்டிகள், மேலும் இன்சுலின் ஊசி போடும் இடங்களில் நிறமாற்றங்கள் போன்ற பல்வேறு தோல் பிரச்சினைகள் நீரிழிவு நோயாளி களில் காணப்படுகின்றன. எனவே இவற்றைக் குறைப்பதற்கு சில ஆலோசனைகள்:

1. உங்கள் சருமத்தை எப்போதும் சுத்தமாக வைத்திருங்கள்.

2. உங்களுக்கு ஏதாவது சரும நோய்த்தொற்று ஏற்படின் ஆரம்பத்திலேயே சரும வைத்திய நிபுணரை அணுகிச் சிகிச்சை பெறுங்கள்.

3. உங்கள் பாதங்களை தினமும் பரிசோதியுங்கள், கால் பாதங்களில்



வெடிப்புக்கள், காயப்புகள், சொறி காயங்கள், வெட்டுக்கள், தடிப்புக்கள் பாதப்பகுதி சிவந்து அல்லது நிற மாற்றங்கள், வீக்கங்கள், பாதம் அதிக சூடாக குளிராக இருத்தல், பாதங்களில் உணர்ச்சிக் குறைவு போன்றவற்றைக் கவனித்தல் வைத்திய ஆலோசனை பெற்றுச் சரியான பாதுகாப்பான காலணிகளை அணியுங்கள்.

4. குருதியில் வெல்ல மட்டத்தைச் சீரான அளவில் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு முயலுங்கள், இதற்கு தகுந்த உணவுக் கட்டுப்பாடு முறைகள், உடற்பயிற்சி, நீரிழிவு மருந்துகளுடன் எமது உடலின் காயங்கள் தொற்றுக்கள், மனப் பாதிப்புக்கள் உட்பட ஏனைய நோய் நிலைகளுக்கும் மருத்துவ சிகிச்சையும் ஆலோசனையும் பெறுங்கள்.

5. போதியளவு நீராகாரம் அருந்துதல் மது அருந்துதலைக் கட்டுப்படுத்துதல் அல்லது தவிர்த்தல், புகைப்பிடித்தலை தவிர்த்தல் அதிக கலோரி கூடிய கொழுப்புள்ள உணவுகளைத் தவிர்த்தல்.

6. நீராடிய பின்பு அல்லது உடலைக் கழு விய பின்பு சுத்தமான உலர்ந்த மென்மையான துண்டினால் உடலை நன்றாகத் துடைத்துக் கொள்ளுங்கள், கிருமிகள், காளான் பூஞ்சணங்களின் வளர்ச்சிக்கு சாத்தியமான இடங்களான தோல் மடிப்புக்கள் கால் விரல் இடுக்குகள், இடுப்பு பகுதி, பிறப்பு உறுப்புக்கள், அக்குள் போன்ற வற்றை ஈரப்பசை இன்றி உலர்த்திக் கொள்ளுங்கள். பின்பு தோல்ப் பகுதியில் வெடிப்புக்கள் ஏற்படாமல் இருப்பதற்கு எண்ணெய் அல்லது லோசன் கலந்த கிறீம் ஒன்றை உடலில் தடவுங்கள். எனினும் கால் விரல்களுக்கு இடையில் பூச வேண்டாம்.

7. குளித்த பின்பு அல்லது கால்களைக் கழுவிய பின்பு நகங்கள் இலகுவாக இருக்கும் போது முறையான நகவெட்டியை உபயோகித்து மிகவும் பாதுகாப்பாக விரல் களுக்குக் காயங்கள் ஏற்படாமல் நகங்களை வெட்டவும் உங்களுக்கு முடியாதவிடத்து அடுத்தவரின் உதவியை நாடவும்.

8. வியர்வையை உறிஞ்சும் தூய பருத்தியி லான சுத்தமான உள்ளாடைகள், கீழாடைகள், காலுறைகள் போன்றவற்றைத் தினமும் அணி யுங்கள். இதனால் காற்றோட்டம் ஏற்பட்டு உடலைப் பாதுகாக்கும், நைலோன் வகையிலான காலுறைகள், உள்ளாடைகள் அணிவதைத் தவிருங்கள். காலுறை இன்றிச் சப்பாத்து அணிவந்தத் தவிருங்கள். 9. வெப்பம் காரண- மாக கொப்பளங்கள் உடலில் ஏற்படுவதைத் தவிருங்கள். உதாரணம் அதிக சூடான நீரில் குளித்தல், சூடான நிலத்தில் வெறும் காலுடன் நடத்தல், சூடான சைலன்சர் மேல் கால் வைத்தல் போன்ற வெப்பமான பொருட்களை நேரடியாகத் தொடுவதைத் தவிருங்கள்.

10. உங்கள் தோலில், உடலில் ஏற்படும் காயங் களைக் கவனமாகப் பராமரிக்கவும் தூய துணிகளைக் காயங்களுக்கு வைத்துக் கட்டவும். நீரிழிவு நோயா ளிகள் காயங்களையும், புண்களையும் கவனமாகப் பராமரிப்பதன் மூலம் தசைத் திசுக்கள், குருதிக் குழாய்கள் தொற்றுக்களைத் தவிர்ப்பதால் உடலில் இதர பாகங்களுக்கும் தொற்றுப் பரவுவதைத் தவிர்க்கலாம். அத்துடன் தொற்றினால் ஏற்படும் அங்க இழப்புக்களையும் தவிர்க்கலாம்.


ஓரே இடத்தில் இன்சுலின் போடுவதைத் தவிருங்கள். இன்சுலின் ஊசி போடும் இடத்தில் தடிப்பு, அரிப்பு, குழிகள், நிறமாற்றம், புண்ணாதல் போன்றன ஏற்படின் வைத்திய சிகிச்சையும் ஆலோசனையையும் பெறவும்.

(நன்றி: Jaffna Diabetic Centre)

---

# துன்பங்களே அதிகம்!

"புதிய வார்ப்புகள்" திரைப்படத்தின் மூலம் தமிழில் அறிமுகமான வர் நடிகை ரதி அக்னிஹோத்ரி. ரஜினியின் "முரட்டுக் காளை", "கழுகு". கமலுடன் "உல்லாசப் பறவைகள்" படத்தில் நடித்தவர். ஹிந்தி "ஏக் துஜே கேலியே"வில் நடித்துப் புகழ் பெற்ற அவர், மும்பையைச் சேர்ந்த தொழில் அதிபர் அனில் விர்வானியை 30 ஆண்டுகளுக்கு முன்பு மணந்து கொண்டார். சமீபத்தில் கணவர் தன்னை அடித்துச் சித்திரவதை செய்வதாக மும்பை பொலிஸ் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்.



"எனக்கு திருமணமாவதற்கு முன்பே என்னுடைய தந்தை இறந்துவிட்டார். 80 வயதான என்னுடைய தாய் புனேயில் வசிக்கிறார். அனில் விர்வானியை திருமணம் செய்து கொண்ட இந்த 30 ஆண்டுகால இல்லற வாழ்க்கையில் நான் அனுபவித்த மகிழ்ச்சியைவிட துன்பங்களே அதிகம். பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டல்லவா?

மேலும் தாமதப்படுத்தக் கூடாது என்ற எண்ணம் உள்ளுக்குள் இருந்தாலும் அதை எப்படி எதிர்கொள்வது என்ற தயக்கம் இருந்தது. கடைசி யில் துணிந்து பொலிஸ் ஸ்டேஷனுக்குச் சென்று புகார் கொடுத்துவிட்டு வெளியில் வந்தபோது ஏராளமான பத்திரிகையாளர்கள் விஷயத்தைக் கேள்விப்பட்டு வாசலில் காத்திருந்தது ஆச்சரியமாக இருந்தது. எனக்கு அந்தரங்கச் செயலாளர்களோ பத்திரிகை தொடர்பாளர்களோ இல்லை. நான் தனிமையாகவே வந்து என்னுடைய பலத்தை நம்பி மீடி யாக்களுக்குச் சொல்லாமல் பொலிஸ் ஸ்டேஷனில் புகார் கொடுக்க வந்தேன்.

என்னுடைய தாயாருக்கு மூளையில் ஏற்பட்ட பக்கவாத தாக்குதலால் வாழ்க்கையின் கடைசி நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறார். என்னுடைய மூத்த சகோதரியோ கடந்த 39 ஆண்டுகளாக போலந்து நாட்டில் வசித்து வருகிறார். இங்கு எனக்கு எந்தவிதமான ஆதரவும் இல்லை. என்னுடைய வீட்டை மட்டுமன்றி, என்னுடைய தாயா ரையும் அவரது வீட்டையும் கவனித்துக் கொள்ள வேண்டும். பொலிஸில் புகார் கொடுத்த பின்னர் மீண்டும் வீட்டிற்குச் செல்ல அச்சமாக இருந்தது. திருமணமாகிவிட்டால் என்னை அவரிடம் ஒப்படைத்து விட்டதாக அர்த்தமா? திரும்பவும் என்னுடைய வாழ்க்கை எனக்குக் கிடைக்காதா? என்ற சிந்தனையுடன் துணிந்து வீட்டிற்குத் திரும்பினேன்.

திருமணத்திற்குப் பின்னர் நடந்த விஷயங்களை நினைத்துப் பார்த்தேன். எந்தெந்த வகையில் அனுசரித்துச் சென்றேன் என்பதை நினைத்தபோது எனக்கே வேதனை யாக இருந்தது. மன ரீதியில், உடல் ரீதியில், பணத் தேவை காரணமாகவும் துன்புறுத்தப்பட்டேன். நான் வாழ வேண்டும். இப்போது என்னுடைய மகன் தனுஜ்தான் எனக்கு முக்கியம். அவன் எப்போதுமே எனக்கு நல்ல மகனாக இருக்கிறான்.

எனக்கும் 54 வயதாகிவிட்டது. முன்னைப்போல் என்னைத் தற்காத்துக் கொள்ளும் சக்தி இல்லை. அதனால்தான் பொலிஸில் புகார் செய்யும் முடிவை எடுத்தேன். திருமணமான புதிதில் என்னுடைய கணவரை மிகவும் நேசித்தேன். கடந்த பல ஆண்டுகளாக ஒரே வீட்டில் வெவ்வேறு திசைகளில் வாழ்ந்து வருகிறோம்.


அவர் மீது புகார் கொடுத்துவிட்டு வந்தாலும் ஒரே வீட்டில்தான் தற்போது வாழ்ந்து வருகிறோம். எந்தவிதப் பேச்சுவார்த்தையும் இல்லை.

குடும்ப வன்கொடுமை என்று புகார் கொடுத்தால் அதற்கான ஆதாரங்களை நிச்சயம் கொடுத்தாக வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் அதை நான் தவறாகப் பயன்படுத்தவில்லை. பத்து வயதிலேயே சாதனை புரியத் தொடங்கிய நான் 23 வயதில் திருமணம் செய்து கொண்டேன். கடந்த 30 ஆண்டுகளில் எனக்குக் கிடைக்காத தைரியமும் தன்னம்பிக்கையும் இப்போது தான் கிடைத்திருக்கிறது. இந்த உலகமே என்மீது அன்பு செலுத்தும்போது, என்மீது நானே ஏன் அன்பு காட்டக் கூடாது?



எதிர்காலத்தில் என்னைப் போன்று துன்பப்படும் பெண்களுக்கு முன்மாதிரியாக இருப்பதில் எனக்கு மகிழ்ச்சிதான். ஓர் இருண்ட குகைக்குள் இருந்தாலும் மற்றொரு முனையில் வெளிச்சம் கிடைக்குமென்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது" என்று கூறியிருக்கிறார் நடிகை ரதி அக்னிஹோத்ரி.

# சிலந்தியிடம் பாடம் கற்ற அரசன்



## சிறுவர் முரசு



போரில் தோல்வி அடைந்த அரசன் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடி ஒளிந் தான். அரசன் மிகவும் வீரத்துடன் போரிட்டாலும் அவனின் படை மிகவும் சிறியதாக இருந்த தினால் அவனால் வெல்ல முடிய வில்லை. எதிரியிடம் மாபெரும் படை இருந்ததினால் வெற்றி பெற்றான். தோல்வியுற்ற அரசனை கொலை செய்யுமாறு அவனை வென்ற அரசன் கட்டளை பிறப்பித்தான். அதனால் அவன காட்டிற்கு ஓடிச் சென்று அங்கு இருந்த ஒரு குகையில் ஒளிந்து கொண்டான்.

தோல்வி கண்ட அரசன் மிகவும் மன வருத்தம் கொண்டான். மனச்சோர்வினால் துணிவு இழந்தான். ஒருநாள் சோம்பலுடன் அரசன் குகையில் படுத்திருந்தான். அந்தக் குகையினுள் ஒரு சிலந்தி வாழ்ந்து வந்தது. அந்தச் சிறிய சிலந்தியின் செயல் அவன் கவனத்தைக் கவர்ந்தது. குகையின் ஒரு பகுதியினுள் ஒரு வலை யைப் பின்னக் கடுமையாக முயற்சி செய்து கொண்டிருந்தது. சுவரின் மீது ஊர்ந்து செல் லும் போது வலையினில் பின்னிய நூல் அறுந்து சிலந்தி கீழே விழுந்து விட்டது.


இவ்வாறு பலமுறை நடந்தது. ஆனாலும், அது தன் முயற்சியைக் கை விடாமல் மறுபடியும் மறுபடியும் முயன்றது. கடைசியில் வெற்றிகரமாக வலையைப் பின்னி முடித்தது. அரசன் "இச் சிறு சிலந்தியே பலமுறை தோல்வியடைந்தும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. நான் ஏன் விட வேண்டும்?

நானோ அரசன். நான் மறுபடியும் முயற்சி செய்ய வேண்டும்" என்று எண்ணினான் மறுபடியும் தன் எதிரியுடன் போர புரிய தீர்மானித்தான். அரசன் தான் வசித்த காட்டிற்கு வெளியே சென்று தன் நம்பிக் கையான ஆட்களைச் சந்தித்தான். தன் நாட்டில் உள்ள வீரர்களை ஒன்று சேர்த்து பலம் மிகுந்த ஒரு படையை உருவாக்கினான். தன் எதிரிகளுடன் தீவிரமாகப் போர் புரிந்தான். கடைசியில் போரில் வெற்றியும் பெற்றான். அதனால் தன் அரசைத் திரும்பப் பெற்றான். தனக்கு அறிவுரை போதித்த அந்த சிலந்தியை அவன் என்றுமே மறக்கவில்லை.

### மகிழ்ச்சியாக இருக்க 5 வழி முறைகள்




## சிறார்களே வர்ணம் தீட்டலாம் வாங்க ......



## விஞ்ஞானி ஏ.பி.ஜே அப்துல்கலாம்




1931 ஆம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் 15 ஆம நாள் ஜைனுலாப்தீனுக்கும், ஆஷியம்மாவுக்கும் மகனாக இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில், பாம்பன தீவில் அமைந்துள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கும் ஒரு சிறிய நகராட்சியான இராமேஸ்வரத்தில் பிறந்தார். இவர் ஒரு இஸ்லாமிய குடும் பத்தைச் சேர்ந்தவர்.

இவர் இராமேஸ்வரத்திலுள்ள தொடக்கப் பள்ளியில் தனது பள்ளிப்படிப்பை தொடங்கினார். ஆனால் இவருடைய குடும்பம் ஏழ்மையில் இருந்ததால், இளம் வயதிலேயே இவர் தன்னுடைய குடும்பத்திற்காக வேலைக்குச் சென்றார். பள்ளி நேரம் போக மற்ற நேரங்களில் இவர் செய்தித்தாள்கள் விநியோகம் செய்தார். இவருடைய பள்ளிப்பருவத்தில் இவர் ஒரு சராசரி மாணவனாகவே வளர்ந்தார். தன்னுடைய பள்ளிப் படிப்பை முடித்தபிறகு, திருச்சிராப்பள்ளியிலுள்ள "செயின்ட் ஜோசப் கல்லூரியில்" இயற்பியல் பயின்று 1954ஆம் ஆண்டு, இயற்பியலில் இளங்கலை பட்டம் பெற்றார். ஆனால், இயற்பியல் துறையில் ஆர்வம் இல்லை என உணர்ந்த இவர், 1955 ஆம் ஆண்டு தன்னுடைய "விண் வெளி பொறியியல் படிப்பை" சென்னையிலுள்ள எம்.ஐ.டி - யில் தொடங்கினார். பின்னர் அதே கல்லூரியில் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

1960 ஆம் ஆண்டு வானூர்தி அபிவிருத்தி அமைத்தல் பிரிவில் (DRDO) விஞ்ஞானியாக தன்னுடைய ஆராய்ச்சி வாழ்க்கையைத் தொடங்கிய அப்துல் கலாம், ஒரு சிறிய ஹெலி கொப்டரை இந்திய இராணுவத்திற்காக வடிவமைத்துக் கொடுத்தார். பின்னர், இந்திய விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில (ISRO) தனது ஆராய்ச்சிப் பணிகளைத் தொடர்ந்த அவர், துணைக் கோள் ஏவுகணைக் குழுவில் (SLV) செயற்கைக்கோள் ஏவுதலில் முக்கிய பங்காற்றினார். 1980 ஆம் ஆண்டு SLV - III ரொக்கெட்டைப் பயன்படுத்தி ரோகினி - I என்ற துணைக் கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவச்செய்தார். இது அவருக்கு மட்டுமல்லாமல், இந்தியாவிற்கே ஒரு சாதனையாக அமைந்தது இத்தகைய வியக்கதக்க செயலைப் பாராட்டி மத்திய அரசு இவருக்கு 1981 ஆம் ஆண்டு இந்தியாவின் மிகப் பெரிய விருதான "பத்ம பூஷன்" விருது வழங்கி கௌரவித்தது. 1963 ஆம் ஆண்டு முதல் 1983 ஆம ஆண்டு வரை, இந்திய விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில் பல பணிகளை சிறப்பாகச் செய்த இவர், 1999 ஆம ஆண்டு "பொக்ரான் அணு ஆயுத சோதனையில்" முக்கிய பங காற்றியுள்ளார். இந்தியாவை அணு ஆயுத வல்லரசாக மாற்றிய ஏ.பி.ஜே அப்துலகலாம், இது வரை ஐந்து ஏவுகணை திட்டங்களில் பணிபுரிந்துள்ளார். அவர், அனைவராலும் இந்திய இராணுவ ரொக்கெட் படைப்பின் பிதாவாக போற்றப்படுகிறார்.

## நித்தமும் இனிக்கிறது



அறியா பருவம் ஆறு வயது எனக்கு
அம்மா ஆரிராரோ பாட
அமைதியா மடியில் நான் தூங்க!
வானில் வலம் வரும் நிலாவை
பார்த்து நிலா நிலா ஓடிவா என்று
அடம்பிடித்த வயது.
செல்லமாய் நான் அழ அன்பு வார்த்தையில்
குட்டிக் கதை சொல்லி தலை கோதிவிட்டு
தாவி அணைத்து
நெற்றியில் கொடுத்த முத்தம்
நித்தமும் இனிக்கிறது அம்மா
உன்னை நினைக்கும் போது.

கை.சிவனுகா
யா / சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

# ஆயுர்வேத பட்டதாரிகளுக்கு வேலை வழங்க நடவடிக்கை

## – அமைச்சர் ராஜித தெரிவிப்பு

உள்நாட்டு ஆயுர்வேதத் துறையை வலுப்படுத்தும் நோக்கில் அனைத்து ஆயுர்வேதபட்டதாரிகளுக்கும் வேலை வாய்ப்பு வழங்க சுகாதாரம் மற்றும் உள்நாட்டு மருத்துவத்துறை அமைச்சர் வைத்தியர் ராஜித சேனாரத்ன தீர்மானித்துள்ளார்.

மருத்துவ குணங்கள் மிக்க உணவுப் பொருட்களை மக்கள் மததியில் பிரபல்யப்படுத்தும் வேலைத திட்டத்தின் கீழ் இலைக்கஞ்சி வழங்கும் வாகனத்தை தெரிவு செயயப்பட்டவர்களுக்கு வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இந்நிகழ்வின் போது இலைக் கஞ்சி விற்பனை செய்யும் 12 வண்டிகள் உட்பட ஆயுர்வேத பாதுகாப்பு மத்திய நிலையத்திற்கென மருந்துப்பொருட்களை அரைக்கும் இயந்திரம், எண்ணை வடிக்கும் இயந்திரம் என்பனவும் வழங்கிவைக்கப்பட்டன.

இத்திட்டமானது மைத்திரிபால சிறிசேனவின் 100 நாள் வேலைத்திட்டத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்தார். அத்துடன் இலைக்கஞ்சி பானமானது கோப்பி,தேனீரை விட மிகவும் ஆரோக்கியமான பானமாக உள்ளமையால் இதனை மக்கள் மத்தியில் பழக்கத்திற்கு கொண்டு வருதல் அவசியமாகும். எனவும் தெரிவித்தார்.

எமது நாட்டில் பெருந்தொகையான ஆயுர் வேதப பட்டதாரிகள் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் அமைச்சரவைக்கு அறிக்கையொன்றையும் சமர்ப்பித்துள்ளேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மாணவர்களின் நன்மை கருதி காஞ்சிபுரத்தில் பேருந்து சேவை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பரந்தன் காஞ்சிபுரம் கிராமத்திற்கு பேருந்து சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக்கிராம மாணவர்கள் பரந்தன் இந்து மகாவித்தியாலயம் மற்றும் ஏனைய நகர பாடசாலைகளுக்கு நடந்தே செல்ல வேண்டிய கஷ்டமான சூழலை நெடுங்காலமாக அனுப வித்து வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த 07ஆம் திகதி இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவையொன்று தனது பணியினை இக்கிராமத்திற்கு ஆரம்பித்துள்ளது பரந்தன் இந்து மகா வித்தியாலயத்திலிருந்து பூநகரிப் பக்கமாக நான்கு கிலோமீற்றர் தூரத்திலமைந்துள்ள காஞ்சிபுரம் கிராமத்தில் 300 வரையான குடும்பங்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டு வந்த நிலையில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள அரச பேருந்துச் சேவைகாரணமாக பரந்தன் நகரத்துடன் காஞ்சிபுரம் மக்கள் போக்குவரத்து செய்யக்கூடிய இலகுவான வழியேற்பட்டுள்ளது.

இப்பேருந்துச்சேவை தொடக்க நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, கரைச்சி பிரதேசசபையின் உப தவிசாளர் நகுலேஸ்வரன், உறுப்பினர்கள் குமாரசிங்கம் சுகந்தன், பரந்தன் இந்து மகா வித்தியாலய முதல்வர் அம்பிகைபாகன், மாணவி பிரியதர்சினி இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி சாலை முகாமையாளர் மற்றும் அதிகாரிகள், பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். (160)

# பட்டித்தோட்டம் முதியோர் இல்லத்தில் சிரமதானம்

உலக செஞ்சிலுவைதினத்தினை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் ஏற்பாட்டில் மாபெரும் சிரமதான நிகழ்வு மன்னார் பட்டித் தோட்டம் முதியோர் இல்லத்தில் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் 50 இற்கும் மேற்பட்டதொண்டர்கள் முசலி,நானாட்டான் மற்றும் மன்னார் பிரிவிலிருந்து பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. மேலும் இந்நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் மன்னார் கிளையின் தலைவர் ஜே.ஜே. கெனடி, மன்னார் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் ,செயலாளர் கு.ரகுசங்கர்,ஆளுநர் சபை அங்கத்தவர்களான வைத்திய கலாநிதி செ. லோகநாதன் அன்ரனிமார்க் கிளைநிறைவேற்று அதிகாரி குகன் மற்றும் பலஊழியர்களும் கலந்துகொண்டனர்.



நேபாளத்தில் நிலநடுக்கத்தில் மரணித்த மக்களுக்கான ஆத்ம சாந்தி கோமமும், தீப மோட்ச பூசையும் வவுனியா புளியடி பிள்ளையார் கோவிலில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது... (90)

# பதிவிறக்கப் பெட்டகம்

தமிழ் இலக்கிய உலகின் எழுத்தாளனென்றால் கம்பீரமும், அறச்சீற்றமும் கொண்டவன் என்ற அடையாளத்தை உண்டாக்கியவர் ஜெயகாந்தன். சமூகத்தின் மீதும், மனிதத்தின் மீதும் நம்பிக்கையை விதைத்த அவரின் உரத்த குரல் ஒரு தலைமுறையையே உலுக்கியது.

காலங்காலமாய் சமூகத்தில் வைத்திருந்த சம்பிரதாயமான அசட்டுத் தனங்களை ,போகிற போக்கில் இவையெல்லாம் எதுவுமில்லை, வாழ்க்கை எல்லாவற்றிற்கும் பதில் கூறும் என்று உடைத்தார். பெண்களின் மேன்மையை "பெண் என்பவள் அவளே சில வேளைகளில் எண்ணி மயங்குவது போல் தனிப்பிறவியல்ல, சமூகத்தின் அங்கமே" என்றார்.

தனிமனித சுதந்திரம் பற்றி ஐம்பதாண்டுகளுக்கு முன்பே உரத்துப்பேசினார். ஏனென்றால் அக்காலகட்டத்தில் மனிதர்கள் சமூகத்தில், சாதியில். குழுக்களில் கட்டுப்பட்டே இருந்தனர். சமூகத்தின் பார்வையில் தனிமனித ஒழுக்கங்களும், கட்டுப்பாடுகளும் எத்தனை அபத்தமான கோணத்தில் நோக்கப் படுகின்றன என ஓங்கித் தலையிலடித்துக் கூறினார்.

– மோனிகா மாறன்

எழுத்தாளர்களுக்குச் சமூகத்தில் மதிப்பை பெற்றுத் தந்தவர் ஜெயகாந்தன். அவரைப் பார்த்தால் மிகவும் கர்வம் கொண்டவர் போல் தோன்றும். ஆனால் குழந்தை மனதுக்குச் சொந்தக்காரர். எனக்கு அவரை நண்பராக 45 ஆண்டுகளுக்கும் மேலாகத் தெரியும். மதுரையில் கம்யூனிஸ்ட் தலைவர் ஜீவானந்தம் காலமான பின்னர் பெரிய மாநாடு நடந்தது. அதில் கவியரங்கம் போல் கதையரங்கம் நடந்தது. அதற்கு ஜெயகாந்தன் தான் தலைமை தாங்கினார். கதை வாசித்த பின் அவர் தனக்கு ஒதுக்கப்பட்ட அறைக்குச் செல்லாமல் நாங்கள் தங்கி இருந்த சாதாரண அறைக்கு வந்து மூன்று நாள்கள் தங்கினார். அவ்வளவு எளிமை நிறைந்தவர்.

இலக்கிய உலகில் அவரது படைப்புகள் ஒரு கல்மழை பெய்தது போல் இருந்தன. ஒரு கட்டத்துக்கு பின் அவர் எழுத்துவதையே நிறுத்தி விட்டார். இலக்கிய உலகில்,தான் வந்த நோக்கம் நிறைவேறி விட்டது போல் அவர் எழுதுவதை நிறுத்தி விட்டார்.

– கி.ராஜநாராயணன்

கூடத்தின் நடுவே, அக்கிராசனர் போல் கட்டிலில் அவர் சம்மணமிட்டு, தலைமுடி விரிந்து பிடரியில் தொங்க. மீசையை முறுக்கியபடி, ஒரு சிம்மம் போல் அமர்ந்திருக்க, நாங்கள் கட்டிலைச் சுற்றி அமர்ந்திருப்போம். திரையுலக நண்பர்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள் அதில் அடக்கம். பாரதியை தனது குருவாகக் கொண்ட அவரது பேச்சில், பாரதியின் கவிதை வரிகள் உணர்ச்சி பொங்க, வெள்ளமாய்க் கொட்டும். கர்நாடக சங்கீதத்தில் அவருக்கு நல்ல பயிற்சி இருந்ததால், "தாயே யசோதா உந்தன் ஆயர் குலத்துதித்த....' போன்ற பாடல்களை இடையிடையே அவர் பாடும் போது, கேட்கச் சிலிர்ப்பாக இருக்கும். "கள்ளால் மயங்குவது போலே, கண்மூடி வாய் திறந்தே கேட்டிருப்போம்' என்கிற பாரதியின் வரிகளைத்தான், அவரது பேச்சிலும் பாட்டிலும் கிறங்கி நின்ற எங்கள் நிலைக்குச் சொல்ல முடியும். ஒரு மேதையின் சந்நிதானத்தில் நிற்கிற ஒருவித பரவசத்தை நான் அப்போது அனுபவித்தேன்.

திடீரென்று எழுந்து திறந்தவெளிக்கு வந்து, அவரது "ஆலமரம் ஆலமரம், பாலூத்தும் ஆலமரம்...' என்கிற அற்புதமான பாடலைத் தனி ராகத்தில் பாடுவார். நம்மை அதைப் பாடச் செய்வார். உடனே காட்சி மாறும். அவரது "ஒருமனிதன். ஒரு வீடு ஒரு உலகம்' நாவலில் ஹென்றி பாடுவதாக வரும். "சோப்பெங்கப்பா..... சோப்பெங்கப்பா..... சொல்லி விட்டு. குனிந்து நிமிர்ந்து சோப்பெங்கப்பா..... சோப்பெங்கப்பா......' என்று சுற்றிச் சுற்றி வந்து நடனமிடுவார். அது முன்பே பரிச்சயமான மற்றவர்களும் உடன் அப்படியே பாடி ஆடியபடி, சுற்றி வருவர். தீராத விளையாட்டுப் பிள்ளையாய் அப்போது அவர் தோன்றுவார்.

பிறகு உள்ளே சபை மறுபடியும் கூடும். கேள்வி நேரம் தொடங்கும். பலரும் பல்வித வினாக்களைத் தொடுப்பர். அவரும் அவருக்கே உரித்தான சமத்காரத்துடன் பதில் அளிப்பார். அப்போது அங்கிருந்த கல்லூரி மாணவர்களில் ஒருவர், "ஐயா, உங்களது சிறுகதைத் தலைப்புக்களைத் திருடி. தம் படங்களுக்கு – உதாரணமாக "புதிய வார்ப்புகள் போன்று பெயரிடுகிறார்களே.... என்று இழுத்தார். அதற்கு ஜே.கே சற்று அதட்டலாக, "ஏம்பா அந்தக் கதையை நீ எழுதினியா" என்று கேட்டார். மாணவர் மிரட்சியுடன் "இல்லை" என்றார். "கதையை எழுதின நானே கவலைப்படலே, உனக்கென்ன? நல்ல விஷயங்கள் எங்கிருந்தாலும் எவரும் எடுத்தாளுவர். போ" என்றார். அதுதான் ஜெயகாந்தன்.

– வே. சபாநாயகம்

# வடக்கு,கிழக்கு,மலையகப் பகுதிகளில் சிறுவர்களுக்கு போசாக்கு குறைபாடு

## சிறுவர் பாதுகாப்பு அமைப்பு தகவல்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் உள்ள சிறுவர்கள் போசாக்கு குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாக, சிறுவர் பாதுகாப்பு அமைப்பு (Save the Children) உலகளாவிய அறிக்கையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சிறுவர்கள் மற்றும் தாய்மாரின் வாழ்க்கைத் தரத்தை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வை உள்ளடக்கிய அறிக்கை ஒன்றை, ஐ.நா அமைப்பான சிறுவர் பாதுகாப்பு (Save the Children) அமைப்பு கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ளது.

போசாக்கு குறைபாட்டினால், அம்பாறை, திருகோணமலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் உள்ள சிறுவர்கள் வளர்ச்சிக் குறைவை எதிர்நோக்கியுள்ளதாக, சிறுவர் பாதுகாப்பு அமைப்பின் இலங்கைப் பணிப்பாளர் வில்லியம் லிஞ்ச் தெரிவித்துள்ளார்.

தாய்மார் மற்றும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் நிலை தொடர்பாக 179 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், இந்த ஆண்டு இலங்கை 91ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு ஆண்டுக்கு முன்னர், இலங்கை 89ஆவது இடத்தில் இருந்தது. இது கவலை தரும் நிலை என்றில்லாவிட்டாலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில், சுகாதாரம் மற்றும் போசாக்கு சமத்துவமின்மை நிலவுகிறது என்றும், வில்லியம் லிஞ்ச் தெரிவித்துள்ளார்.



நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைக்கப்படாதமையால், பருவ மழை காரணமாக, வடக்கு கிழக்கில் போருக்குப் பிந்திய சூழல் கவலைக்குரியதாக உள்ளது.

வடக்கிலுள்ள மக்களின் போசாக்கு நிலையை முன்னேற்ற நீண்டகாலத் திட்டம் செயற்படுத்தப்படாமை முக்கியமான மற்றொரு கவலைக்குரிய விடயமாக உள்ளது.

நுவரெலியாவிலும் கூட வளர்ச்சிக் குறைபாடு முக்கிய பிரச்சினையாக இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

## தினமுரசுக்கு வந்த கடிதம்

# திருமண வாழ்வில் விசித்திரம்

ஒவ்வொரு மனிதர்களினதும் வாழ்வில் திருமணங்கள் இன்றியமையாத ஒன்றாகும். இத்திருமண வாழ்வு என்பது நிச்சயிக்கப்பட்ட திருமணமாகவோ அல்லது காதல் திருமணமாகவோ அமையலாம்.



எதுஎவ்வாறு இருந்தாலும் சட்டரீதியாக எழுத்து எழுதப்பட்டு திருமணமே எமது நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருமணமாகும். அதுவே எமது பிள்ளைகளுக்கு தாய் தந்தை என்ற அங்கீகாரத்தை வழங்கக் கூடிய திருமணமாகும்.

ஆனால் இன்றைய சமூகம் அவ்வாறு வாழ விரும்பாதது ஏன்? இவ்வாறான சட்டரீதியான திருமண வாழ்வை பிள்ளைகள் மட்டுமன்றி பெரியவர்களாகவுள்ள பொற்றோரும் மீறியே வாழ்கின்றனர். இந்த வாழ்வு எமது தமிழ் கலாசார வாழ்வை சீரழிப்பதுடன் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வை சீரழிக்கும் ஒன்றாகவே காணப்படுகின்றது.

முன்னொரு காலத்தில் நீதி நியாயம் என்பது சட்டதிட்டங்களுக்கு அமைவாக ஒழுங்கான முறையிலேயே நடந்தது. ஒரு ஆண் இன்னொரு பெண்ணுடன் தொடர்பு வைத்துள்ளார் என்பதனை அறிந்தாலோ அல்லது. பொலிஸில் புகார் செய்தாலோ அவர்களுக்கு 3 முறைகளில் தண்டனை வழங்கப்படும் அதையும் மீறி தவறாக நடக்கும் பட்சத்தில் நான்காவது முறையாக பலபேர் முன்னிலையில் மரண தண்டனை வழங்கப்படும் இதனைப்பார்த்த ஆண்களோ பெண்களோ தவறான உறவுகளை வைத்திருக்க முன்வரமாட்டர்கள் என்பதற்காகவே இந்த தண்டனை வழங்கப்படுவது வழக்கம்.

ஆனால் கடந்த 6 வருடங்களுக்கு எமது நாட்டிலுள்ள அநேகமானவர்கள் தமது வாழ்க்கையை தவறாகவே வாழ்ந்து வருகின்றனர் இவ்வாறு வாழ்பவர்களில் பலர் நீதிமன்றங்களுக்குச் சென்றே தமது வாழ்க்வைக் கழித்து வருகின்றனர்.

இவர்களுக்கு விதிக்கப் படும் தண்டனை 10,000 ரூபா, 5000 ரூபா இவ்வாறு பணத்தை செலுத தினால் தப்புச் செய்யலாம் என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் தோன்றியுள்ளது.

இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் அவ்வாறுநிறுத்தப் படாவிட்டால் யாழ். குடாநாட்டில் தண்ணீர்வற்றினாலும் இங்குள்ள பெண்களின் கண்களில் தண்ணீர் வற்றாது ஓடிக்கொண்டிருக்கும். அதுமட்டுமின்றி பிள்ளைகளது எதிர்கால வாழ்க்கையும் கேள்விக்குறியாக மாறிவிடும்.

எனவே சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் உடனடியாக செயற்பட்டு இவ்வாறான குற்றங்களை தடுத்து எமது இளம் சந்ததியினரின் ஒழுங்குக்கான முறையில் வாழ வழி வகுக்க வேண்டும்.

நலன்விரும்பி
யாழ். மாவட்டம்

---

# இலஞ்சம் பெற்ற பொலிஸார் கைது



லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பொலிஸ் அதிகாரி ஒருவர் இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பலாங்கொட - லுனுவல பிரதேசத்தில் குறித்த பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

வல்லப்பட்டை கொண்டு சென்ற ஒருவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்காது அவரிடம் 2000 ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

---

# மதுபான வடிப்பாலைக்கு 2 கோடி ரூபா அபராதம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ஒருவருடன் தொடர்புடையதாக கூறப்படும் மதுபான வடிப்பாலை உரிமையாளருக்கு கலால் திணைக் களம் 2 கோடியே 10 இலட்சம் ரூபாய் தண்டம் விதித்துள்ளது.

அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி, 68 ஆயிரம் மதுபான போத்தல்களை தெமட்டக்கொடையில் உள்ள களஞ்சிய சாலைக்கு மாற்றினார் என்று குற்றஞ்சாட்டியே அவருக்கு எதிராக அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வடிப்பாலையின் உரிமையாளர் பெயரளவில் இருப்பதாகவும் உண்மையான உரிமையாளர் குருநாகல் மாவட்ட முன்னாள் அமைச்சர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று, எட்டு நாட்களுக்கு பின்னர் இந்த மதுபானங்கள் தெமட்டகொடை களஞ்சியசாலைக்கு கொண்டு வர்ப்பட்டு களஞ்சியப்படுத்தப் பட்டுள்ளன.

இந்த களஞ்சியசாலையில் இருந்த போத்தல்கள் கலால் திணைக்களத்தினால் கைப்பற்றப்பபட்டுள்ளன. இந்த வடிப்பாலையில் ஏழு அல்லது எட்டு வகையான மதுபானங்கள் தயாரிக்கப்படுவதாக கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

---

# பட்டதாரி ஆசிரியர் கைது

(கொழும்பு)

பாடசாலை அதிபரின் கையொப்பம் ம்ற்றும் உத்தியோகபூர்வ இலட்சினை என்பனவற்றை போலியாக தயாரித்து அவற்றைப் பயன்படுத்தி வேதனத்தை பெற்றுக்கொண்ட பட்டதாரி ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி பொலிஸார் குறித்த பட்டதாரி ஆசிரியரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலி மாவட்ட செயலாளர் காரியாலயத்திலிருந்து தேசிய பாடசாலையொன்றுக்கு மாற்றப்பட்ட நிலையில் அவர் அங்கு ஆசிரியர் தொழிலில் ஈடுபடாமல் வேதனத்தைபெற்று வந்துள்ளார்.

பின்னர் பாடசாலை அதிபருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் குறித்த பட்டதாரி ஆசிரியர் தொழிலுக்கு சமுகமளிக்காமல் போலியான ஆவணங்கள் மூலம் வேதனம் பெற்று வந்தமை தெரியவந்துள்ளது.

---

# அனர்த்தங்களில் போது இடம்பெயர்ந்தோரை மீள குடியமர்த்த நடவடிக்கை

(வவுனியா)

அனர்த்தம் காரணமாக வவுனியா மாவட்டத்தில் இடம்பெயர்ந்த 970 பேரை மீள் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 25 வருடங்களுக்கு முன்பதாக தமது சொந்த இடங்களில இருந்து இடம்பெயர்ந்த 284 குடும்பங்களைச் சேர்ந்த இவர்கள் இதுவரை பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் நலன்புரி நிலையங்களில் வசித்துவந்தனர்.

சொந்த கிராமங்களில் மீண்டும் குடியேறுவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ள இவர்களை சின்னடம்பன் மற்றும் சிதம்பரபுரம் ஆகிய பகுதிகளில் மீள்குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக வவுனியா மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

யுத்தம் காரணமாக வவுனியா மாவட்டத்தில் இடம்பெயர்ந்த சுமார் 40 ஆயிரம் பேர் ஏற்கனவே மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

எஞ்சிய 970 பேரும் இன்னும் மூன்று மாதங்களுக்குள் மீள் குடியேற்றப்படுவார்கள் என வவுனியா மாவட்ட செயலகம் குறிப்பிட்டுள்ளது.

---

# சிகிரியாவின் பளிங்கு சுவரை பாதுகாப்பதற்கு நடவடிக்கை

சிகிரியா குன்றில் உள்ள பளிங்கு சுவரை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக அதி நவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட கட்டமைப்பு ஒன்று பொருத்தப்படவுள்ளதாக, தொல்பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கான ஆய்வுப் பணிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன.

இதற்கு முன்னர் அங்கு கண்ணாடி சுவர் ஒன்றை உருவாக்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டிருந்தது.



எனினும் இதனால் பளிங்கு சுவருக்கு இயற்கையான காற்று கிடைக்கக்கூடிய வாய்ப்பு இல்லாமல் போவதால், அது பாதிப்புக்கு உள்ளாகும் வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இந்த நிலையில் குறித்த சுவரை தொடும் வகையில் யாரும் நெருங்கும் போது எச்சரிக்கை மணி ஒலிக்கும் வகையிலான சென்சார் முறையிலான கருவிகளை பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த பளிங்குச் சுவரில் எழுதியமைக்காக அண்மையில் மட்டக்களப்பைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு 2 வருட சிறை தண்டனை விதித்து, பின்னர் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை வீதம் 8.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் இந்த அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

இதன்படி இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை 12.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.


சீனாவில் இருந்தே அதிக எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

அவர்களின் வருகை 80 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



இதற்கு அடுத்தபடியாக இந்தியாவில் இருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

(08) பின்வரும் படங்களுடன் தொடர்புடைய சொல்லை தெரிவு செய்க

35. 
1) அங்குசம் 2) வண்டி 3) லாடன்

36. 
1) ஞாபகசக்தி 2) வேகமாக ஓடுதல் 3) கூரிய பார்வை

**(09) பின்வரும் வினாக்களின் தடித்த எழுத்தில் காணப்படும் சொற்களின் பொருளைத் தரும் விடையை தெரிந்து அதன் கீழ் கீறிடுக**

37. பெரியோர் கூறும் புத்திமதிகளை நாம் ஒரு போதும் உதாசீனம் செய்யக்கூடாது
1) அறிவுரை, அலட்சியம் 2) அனுபவம், தீமை 3) அறிவு, அசுத்தம்

38. பழமை வாய்ந்த கட்டடங்கள் இடிபாடு அடைந்துள்ளன
1) புதுமை, சண்டை 2) புராதனம், உறுதி 3) தொன்மை, சிதைவு

39. அண்மையில் உள்ள துறைமுகத்தில் மாலுமு கப்பலை நங்கூரமிட்டார்
1) பக்கத்தில், பாகன் 2) தொலைவில், சாரதி 3) அருகில், மீகாமன்

**(10) 40 தொடக்கம் 43 வரையான வினாக்களில் புள்ளிக்கோட்டுக்குரிய சொல்லின் கீழ் கோடிடுக**

40. சிங்கம் கர்ச்சிக்கும் என்பது போல நரி ................................
1) குரைக்கும் 2) உறுமும் 3) ஊளையிடும்

41. கடலுக்கு மீன்கள் போல ஆகாயத்துக்கு ................................
1) சூரியன் 2) பறவைகள் 3) விண்மீன்கள்

42. யானையின் ஆண் களிறு போல நண்டின் ஆண் ................................
1) கடுவன் 2) அலவன் 3) ஓரி

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (01) 1. ன், று | 2. த் | 3. ளை, வோ | 4. க | 5. வு, னி |
| (02) 6. மலர்ந்தன | 7. ஓடின | 8. விளையாடினார்கள் | 9. விழுந்தன | |
| 10. படித்தார்கள் | 11. கரைந்தன | 12. ஆடின | 13. பார்த்தார்கள் | |
| (03) 14. நாய் | 15. படித்தார்கள் 16. குளித்தேன் | | 17. விழுந்தது | 18. நின்றது |
| (04) 19. கூட்டில் | 20. புற்றிலிருந்த பாம்பு | | 21. காகம் | 22. கிளிகள் |
| 23. பருந்து | 24. பறவைகள் கொத்தியதால் | | | |
| 25. பறவை குஞ்சுகளைத் தூக்கிச் செல்வது | | 26. ஒற்றுமையாக வாழ வேண்டும் | | |
| (05) 27. யுத்தம் | 28. வடிவான | 29. சந்தோஷம் | 30. ஆகாயம் | 31. மலர்கள் |
| 32. பள்ளிக்கூடம் | (06) 33. பகல் | 34. இன்பம் | 35. சிறிய | 36. பூமி |
| 37. சிரித்தான் | (07) 38. மாமரம் | 39. பாடசாலை | 40. சாப்பாடு | |
| 41. புத்தகம் | 42. ஆசிரியர் | (08) 43 - 47 வரை விரும்பிய வசனம் எழுதுக | | |
| (09) 48. பகலவன் | 49. கரும்பு | 50. தம்பி | 51. வலி | 52. புரியாது |
| 53. பிரி | 54. காது | 55. யாது? | (10) 55 - 64 வரை உங்கள் | |
| சுயபிரக்கோவையை எழுதுக | | (11). 65. இருட்டு, வெளிச்சம் | | |
| 66. சந்தோஷம், துக்கம் | 67. அண்மையில், தூரத்தில் | | 68. நகைத்தல், அழுகை | |
| 69. பணக்காரன், ஏழை | (12) 70. காகம் | 71. நாய் | 72. நத்தை | |
| 73. வண்ணாத்திப்பூச்சி | 74. மீன்கள் | 75. முயல் | 76. குதிரை | 77. யானை |
| (13) 78. வனம் | 79. சாப்பாடு | 80. அண்மையில் | 81. விரைவாக | |
| (14) 82 - 84 வரை உறுப்பமைய எழுதுக | | | | |

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**









# கல்வி முரசு




எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க


**(01) முதலில் தரப்பட்டுள்ள உருவை ஒத்த விடையை தெரிந்து கோடிடுக**

01. 

02. 

**(02) ஒரே கூட்டத்தை சேர்ந்த பொருட்கள் இடம்பெறும் விடையை தெரிவு செய்க**

03. 1)  2)  3) 

04. 1)  2)  3) 

**(03) பாடலின் உதவியுடன் 5ஆம், 6ஆம் வினாக்களுக்கு விடை தருக**

ஆதவனும் கீழ்த்திசையில் தோன்றிவிட்டான்
ஆகா இவ்வுலகமெல்லாம் அழகின்சோதி
சீதமிகும் சோலையிலே தென்றல் வீசும்
செம் மலர்கள் முகந்திறந்தே தேனைச்சிந்தும்

05. பாடலில் கூறப்படும் வேளை யாது?
1) இரவுவேளை 2) மாலைவேளை 3) காலைவேளை

06. இவ்வுலகமெல்லாம் அழகின் சோதி தோன்றக் காரணம் யாது?
1) ஆதவனின் இரவு 2) வீசும் தென்றல் காற்று 3) தேன் சிந்தும் மலர்கள்

**(04) எதிர்க்கருத்தை தரும் சோடிச் சொல்லை தெரிவு செய்க**

07. 1) இம்மை - வெம்மை 2) ஞாபகம் - மறதி 3) அண்மை - அருகில்

08. 1) தட்பம் - குளிர் 2) வைகறை - அதிகாலை 3) ஐக்கியம் - பிளவு




09. மார்ச் மாதம் 1ஆம் திகதி புதன் கிழமை எனின் மார்ச் மாதம் இறுதி நாள் என்ன கிழமை?
1) வெள்ளிக்கிழமை 2) சனிக்கிழமை 3) புதன்கிழமை

10. அடர்ந்த காட்டில் எப்பொழுதும் இருப்பவை
1) மரங்கள், மிருகங்கள் 2) விதிகள், மின்கம்பங்கள் 3) நீர்நிலை, இலைச்சருகுகள்

11. வரிசை ஒன்றில் மஞ்சள், பச்சை, சிவப்பு நிறக் கொடிகள் மாறி மாறி கட்டப்பட்டுள்ளன முதலாவது கொடி மஞ்சள் நிறம் எனின் 39ஆவது கொடி என்ன நிறம்?
1) மஞ்சள் 2) சிவப்பு 3) பச்சை

12. சரியான கருத்து இடம்பெறும் விடையை தெரிவு செய்க
1) சூரிய குடும்பத்தில் மிகப்பெரிய கோள் வெள்ளி ஆகும்
2) சந்திரன் பூமியை சுற்றி வலம் வருகிறது
3) கோள்களை சூரியன் நீள் வட்டப்பாதையில் சுற்றி வலம் வருகிறது

13. உருளை ஒன்றை செய்வதற்கு பொருத்தமான தளவடிவங்கள் எவை?

1)  2)  3) 

14. சமுத்திரம் ஒன்றில் எப்பொழுதும் காணக்கூடியவற்றை உள்ளடக்கிய விடை எது
1) மீனவர், கரை, கப்பல்
2) நீர், மீன், உப்புச்சுவை
3) படகு, பயணிகள், நீர்

15. தரப்பட்ட உருக்களுடன் தொடர்புடைய செயல்கள் முறையே இடம்பெறும் விடையை தெரிவு செய்க
1) நிறுத்தல், வெட்டுதல்
2) நிதி, அறுவடை
3) அளத்தல், குத்துதல்

16. வசதி என்பதை BVK எனவும் விரதம் என்பதை TRAM எனவும் ஆங்கில எழுத்துக்களை பயன்படுத்தி எழுதப்பட்டது எனின் திரவம் என்பதை எவ்வாறு எழுதலாம்
1) KVTR 2) KVBR 3) KRBM

17. அபினனின் அப்பாவும், தரனின் அப்பாவும் சகோதரர்கள் இதன்படி அபினனும், தரனும்
1) சகோதரர்கள் 2) மைத்துனர்கள் 3) மாமா, மருமகன்


18. முயற்சி செய்தால் வெற்றி பெறலாம் இது
1) எப்பொழுதும் உண்மை
2) பெரும்பாலும் உண்மை
3) ஒரு போதும் உண்மையாகாது

**(05) 19ஆம், 20ஆம் வினாக்களுக்கு பொருத்தமான சொல்லை தெரிவு செய்க**

19. பசு - நிரை என்பது போல ஆடு
1) மந்தை 2) கூட்டம் 3) பந்தி

20. குதிரை - கனைக்கும் என்பது போல எருமை - ...............
1) எக்காளமிடும் 2) முக்காரமிடும் 3) கத்தும்

21. கட்டடத்தில் இல்லாத வடிவம் எது?



1)  2)  3) 

22. பின்வரும் ஆண்டுகளில் லீப் வருடம் அல்லாத ஆண்டு எது?
1) 2014
2) 2012
3) 2016




23. எழுத்துப் பிழையற்ற வாக்கியத்தை தெரிவு செய்க
1) கண்ணன் காய்ச்சல் காரணமாக சமுகமளிக்கவில்லை
2) தொழிலாளர்கள் வேளை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்
3) சூழலை சுத்தமாக வைத்திருந்து டெங்கு நோயிலிருந்து பாதுகாப்பு பெறுவோம்

24. | தாமரை பூத்து சிரிக்கும் இலைபோல நீர் முத்துப்போன்று பளபளக்கும் |

முத்துப்போன்று பளபளப்பது எது?
1) இலை 2) தாமரைப்பூ 3) நீர்


25. ரவி மாம்பழத்தையும் அன்னாசிப்பழத்தையும் விரும்புகின்ற போதிலும் வாழைப்பழத்தை விரும்பவில்லை குமரன் வாழைப்பழத்தையும், மாம்பழத்தையும் விரும்புகின்ற போதிலும் அன்னாசிப்பழத்தை விரும்பவில்லை மோகன் வாழைப்பழத்தையும், மாம்பழத்தையும் விரும்புகின்ற போதிலும் பலாப்பழத்தை விரும்பவில்லை மூவரும் விரும்பும் பழம் எது?
1) அன்னாசி 2) மாம்பழம் 3) வாழைப்பழம்

26. 

உருவில் உள்ள சதுரமுகிக்குற்றிகளின் எண்ணிக்கை யாது?
1) 9
2) 8
3) 7

27. 96 முட்டைகளில் 1/4பங்கு எத்தனை முட்டைகள்?
1) 36 2) 24 3) 64

**(06) 28ஆம், 29ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக**




28. விளையாட்டுக்காக பயன்படுத்தப்படும் உபகரணங்களை குறிக்கும் விடை?
1) B,D,F 2) B,E,F
3) D,C,F

29. வயல் வேலைகளின் போது பயன்படுத்தப்படும் உபகரணங்களை குறிக்கும் விடை?
1) A,D,F 2) C,B,E
3) A,C,E

**(07) கீழ்வரும் எண் வரிசையை அவதானித்து விடை தருக**

| 9, 4, 1, 8, 6, 5, 3, 2, 6, 9, 5, 8, 1, 6, 7 |

30. இவ் எண் வரிசையில் இரட்டை எண்ணை அடுத்துவரும் ஒற்றை எண்கள் எத்தனை உள்ளன?
1) 4 2) 5 3) 7

31. இவ் எண்வரிசையில் உள்ள இரட்டை எண்களின் கூட்டுத்தொகை யாது?
1) 38 2) 34 3) 40

32. மரக்கிளை ஒன்றில் உள்ள காகங்களினது கால்களினதும், சொண்டுகளினதும் மொத்த எண்ணிக்கை 36 எனின் மரக்கிளையில் உள்ள காகங்கள் எத்தனை?
1) 9 2) 12 3) 18

33. மே மாதம் 1ஆம் திகதி செவ்வாய்க்கிழமை எனின் மே மாதம் 23ஆம் திகதி என்ன கிழமை?
1) திங்கட்கிழமை 2) வியாழக்கிழமை 3) புதன்கிழமை

34. டிசம்பர் மாதம் ஒன்றில் உள்ள திங்கட்கிழமைகளின் அதிகூடிய எண்ணிக்கை யாது?
1) 4
2) 5
3) 3

# முதற் கலைத்தேர்வு கற்கைநெறிக்கு 5 வருடங்களாக விண்ணப்பம் கோரவில்லை

## மாணவர்கள் விசனம்

பல்கலைக்கழகங்களில் முதற் கலைத்தேர்வு கற்கை நெறியைத் தொடர்வதற்கு கடந்த 5 வருடங் களுக்கு மேலாக விண்ணப்பங்கள் கோரப்படாமையால் வெளிவாரி மாணவர்களாக பதிவு செய்து உயர் கல்வியை கற்பதற்கான சந்தர்ப்பம் இல்லாது செய்யப்பட்டுள்ளதாகவும் இதனால் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டு வருவதாகவும் சம்பந்தப்பட்ட மாணவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் உயர் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இலங்கையிலுள்ள பல்கலைக கழகங்களில் தமிழ் மொழியில் வெளிவாரியாக உயர்கல்வியை தொடர பேராதனை பல்கலைக் கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், யாழ். பல்கலைக்கழகம் ஆகியவற்றிலேயே சந்தர்ப்பங்கள் உள்ளன.

இருப்பினும் இங்கு வெளிவாரியாக உயர்கல்வி கற்பதற்கு கடந்த 5 வருடங்களாக விண்ணப்பங்கள் கோரப்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்து பல்கலைக்கழகங்களில் வினவினால தமக்கு இதுவரை சுற்றறிக்கை வரவில்லையென தெரிவிக்கின்றனர்.

தற்போதைய ஜனாதிபதி தனது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் உயர்கல்வி தொடர்பாக கல்வி பொதுத்தராதர உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடையும் சகலருக்கும் உயர் டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்பு வரை கல்வி பயில சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுப்பேன் என வாக்குறுதி வழங்கியிருந்தார்.

அதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. தவிரவும் புதிய அரசாங்கம் பதவியேற்றபின் வெளிவாரி மாணவர்களுக்கு கட்டணங்களை குறைப்பதாக தெரிவித்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். எனினும் அதுவும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. விண்ணப்பங்களும் கடந்த ஐந்து வருடங்களாக கோரப்படவுமில்லை.

எனவே அனைவருடைய எதிர பார்ப்புகளுக்கு ஏற்ப உயர்கல்வியை தொடர்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி தருமாறு உயர்கல்வி அமைச்சிடம் பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுக கின்றனர்.

# அரசியல்வாதிகளில் 169 பேரை ஊழல் குற்றச்சாட்டில் கைதுசெய்ய நடவடிக்கை

கடந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்த முக்கிய அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் 169 பேருக்கு எதிராக ஊழல் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப் பட்டுள்ளன.

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவிடம் இந்தக் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப் பட்டுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுக்களில் 31 பேருக்கு எதிராக நீதிமன்றிற்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுக்கு அமைய பொலிஸ் நிதிக் குற்றவியல் பிரிவிற்கு மேலதிகமாக பொலிஸ் உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின் றனர்.

இந்த நிலையில் எதிர் காலத்தில் மேலும் பலர் கைது செய்யப்படலாம்.

இதேவேளை, நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவை மூடி விட சிலர் அழுத்தம் கொடுத்து வருவதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் தங்களுக்கு எதிரான விசாரணைகளை தடுத்து நிறுத்த இவ்வாறு முயற்சிக்கின்றனர்.

தற்போது நிலவி வரும் சூழ்நிலையை கருத்திற்கொண்டு நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு விஸ்தரிக்கப்பட வேண்டும்.

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவிற்கு மட்டுமன்றி கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவு, இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு உள்ளிட்ட பிரிவுகளுக்கும் அதிகளவில் முறைப்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக நிதி அமைச்சர் சிங்கள பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.


## வாழ்க வளமுடன்

பெயர் : வி.கனிஸ்மன்
முகவரி: இல.45, மவுண்கார்மேல் வீதி, குருநகர்.



அகவை 10 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................
முகவரி :- ........................................
பிறந்த ஆண்டு :- ........................................

........................................
பெற்றோர் கையொப்பம்


# பருத்தித்துறை இளைஞர் தமிழ் நாட்டில் கைது



தமிழ்நாடு மீனவரின் படகை கடத்திக் கொண்டு, இலங்கைக்கு தப்பிச் செல்ல முயன்ற வடமராட்சி இளைஞர் ஒருவர், தமிழ்நாடு மீனவர்களால் நடுக்கடலில் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

வினோத்குமார் என்ற பருத்தித்துறையைச் சேர்ந்த, 26 வயதுடைய, இந்த இளைஞர் கடந்த ஏப்ரல் 26 ஆம் திகதி சட்ட விரோதமாக படகு மூலம் தமிழ்நாட்டுக்கு வந்திருந்தார்.

வேளாங்கன்னி பகுதியில் தங்கியிருந்த அவர், உள்ளூரில் உள்ள சிவானந்தம் என்பவருடன பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு. அவரது படகில், மீன்பிடிக்கச் சென்று வந்தார்.


இந்த நிலையில், அவர், நேற்று முன்தினம் சிவானந்தத்தின் படகை எடுத்துக்கொண்டு பருத்தித்துறைக்குத் தப்பிச் செல்ல முயன்ற போது நடுவழியில், அவரது படகின் டீசல் தீர்ந்து போன நிலையில், தமிழ்நாடு மீனவர்களின் உதவியைக் கோரியுள்ளார்.

அவர்கள் டீசல் கொடுத்து உதவியபோதே, அது உள்ளூர் படகு என்பதையும், அது இலங்கையை நோக்கி செல்வதையும் கண்டறிந்தனர்.

உடனடியாக அவரை மடக்கிப் பிடித்ததுடன், தமிழ்நாடு பொலிஸாருக்கும் தகவல் அளித்தனர்.

இதன் அடிப்படையில், வினோத் குமார் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்.

# திருத்தாண்டகம் தந்த திருநாவுக்கரசு நாயனார் குருபூசை இன்று



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானுடைய திருவருள் பெற்றுத் தேவாரம் பாடிய மூவருள் திருநாவுக்கரசு நாயனாரும் ஒருவர். அவர் இறையருளால் செய்த அற்புதங்கள் பலவாகும். நல்ல கருத்தாழமும் சொல்லழகும் மிக்க திருத்தாண்டகப் பாடல்கள் இவருக்குப் பெருமை சேர்ப்பனவாம்.

கல்லையே தோணியாக மிதக்கச் செய்த திருநாவுக்கரசு நாயனாருடைய குருபூசைத்தினம் இன்றாகும். இவரது தேவாரங்கள் நாலாம் ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாக வகுக்கப்பெற்றுள்ளன. இவர் இந்தியாவிலேயுள்ள திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூலரிலே வேளாளர் குலத்திலே புகழனாருக்கும் மாதினியாருக்கும் புத்திரராக அவதாரஞ் செய்தார்.

இவருக்கு 'மருணீக்கியார்' என்று பெயரிட்டு அன்போடு வளர்த்து வந்தனர். இவர் சமண சமயத்திலே சேர்ந்து தருமசேனராகப் பிரகாசித்தார். இது தமக்கையாராகிய திலகவதியாருக்குப் பிடிக்கவில்லை. இவரை எப்படியாவது சைவசமயத்துக்கு மாற்றித் தரவேண்டுமென்று சிவபெருமானிடம் முறையிட்டார்.

சிவபெருமான் சூலை நோயைக் கொடுத்து இவரை ஆட்கொண்டார். சூலைநோயின் கொடுமை தாங்காமல் தமக்கையாரிடம் வந்து விபூதி வாங்கி அணிந்து 'கூற்றாயினவாறு' என்று தொடங்கிப் பதிகம் பாடினார். நல்ல முறையிலே தேவாரம் பாடியமையால் இவர் திருநாவுக்கரசர் எனப்பட்டார்.

இவர் சமண சமயத்தை விட்டுச் சைவத்துக்கு மாறியபடியால் ஆத்திரமடைந்த பொல்லாத சமணர்கள் இவரைச் சுண்ணாம்பு அறையிலே பூட்டி வைத்தனர். 'மாசில் வீணையும்' என்று தேவாரம் பாடித் தப்பித்துக் கொண்டார். நஞ்சு கலந்த பாற்சோறு கொடுத்தனர். பட்டத்து யானையை ஏவி விட்டனர். நாயனார் உயிரோடிருப்பதைக் கண்டு கல்லோடு கட்டிக் கடலில் விட்டனர்.

உடனே அவர் 'சொற்றுணை வேதியன்' என்று தேவாரம் பாடவே கல் தோணியாக மிதந்தது. எம்பெருமானுடைய திருவருளுக்குப் பாத்திரமாகி அவனருளாலே அற்புதங்கள் பல செய்த அப்பரடிகள் ஸ்தல யாத்திரையை மேற்கொண்டு பல ஊர்களுக்கும் சென்று ஆண்டவனை வணங்கி வந்தார்.

இவருடைய வாழ்க்கையில் பல்வேறு துன்பங்களும் துயரங்களும் வந்தன. அவையனைத்தையும் திருவருள் வசத்தால் வென்று தேவாரம் பாடித் திருத்தொண்டுகள் செய்துகொண்டு வாழ்ந்து வரலாயினார்.

அப்பர் பெருமானுக்கு தாண்டக வேந்தர், வாகீசர், உழவாரப்படையாளி, சொற்கோ என்று பலபெயர்கள் உண்டு. இவர் பாடியருளிய 'திருவங்க மாலை' என்ற பதிகம் மூலம் மனித உறுப்புகளுக்கு வேலை கொடுக்கின்றார். 'தலையே நீ வணங்காய், கண்கள் காண்மின்களோ, செவிகாள் கேண்மின்களோ, மூக்கே நீ முகராய், வாயே வாழ்த்து கண்டாய், கைகாள் கூப்பித் தொழீர், கால்களாற் பயனென்' என்று மிகவும் சிறப்பாகப் பாடியிருக்கின்றார்.

ஆகவே, சைவ மக்களாகிய நாம் நாவுக்கரசர் பெருமானின் குருபூசையைக் கொண்டாடினால் மட்டும் போதாது. அவர் வாழ்ந்து காட்டிய நேர்வழியில் எமது வாழ்க்கையையும் அமைத்துக்கொள்ள வேண்டும்.

சித்திரை மாதச் சதய நட்சத்திர நாளில் இவர் இறைபதம் அடைந்தார். அவர் பாடியருளிய அருமையான பொருள் பொதிந்த நல்ல தேவாரத் திருப்பதிகங்களை பண்ணுடன் ஓதி நற்பயன் பெற்று மனிதப் பிறவி எடுத்ததன் பயனைப் பெற்றுய்வோமாக.

*கலாபூஷணம்*
*இராசையா ஸ்ரீதரன்*

# பிலிப்பைன்ஸில் புயல் தாக்கம் மூவாயிரம் பேர் வெளியேற்றம்



பிலிப்பைன்ஸ் நாட்டில் நோயுல என்ற புயல் அச்சுறுத்தி வந்தது. அந்தப் புயல் நேற்றுமுன்தினம் கரையை கடந்தது. அப்போது மணிக்கு 220 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசியது.

இதனால் மரங்கள், மின் கம்பங்கள் வேருடன் சாய்ந்தன. வீட்டின் கூரைகள் காற்றில் பறந்தன. பலத்த மழையும் கொட்டியதால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. வெள்ளத்தில் பயிர்கள் மூழ்கி சேதம் அடைந்தன.

அபார்ரி நகரில் ஒரு வீட்டில் மின்சாரம் தாக்கி 70 வயது முதியவரும், அவரது 45 வயது மகனும் பலியாகினர்.

இச பெல்லா, கஹாயன் பகுதிகளில் கடற்கரையோரம் வசித்த மூவாயிரம் பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 4 கடும் புயல்கள் தாக்கியுள்ளன. இதனால் அங்கு கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்பெயினில் விமான விபத்து இராணுவத்தினர் நால்வர் பலி



ஸ்பெயின் இராணுவத்தின் விமானமொன்று விழுந்து விபத்துக்குள்ளாகியதில் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

சரக்குகள் மற்றும் இயந்திரங்களை ஏற்றிச் செல்லக் கூடியவாறு இந்த புதிய ரக விமானம் தயாரிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் சோதனை ஓட்டம் மேற்கொள்ளபபட்டது,

குறித்த விமானம் சான் பாப்லோ விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட நிலையில், 6 பேர் பயணம் செய்தனர். விமானம் செவில்லே Seville என்ற இடத்தில் பயணித்த போது திடீரென தரையில் விழுந்து விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்தின் போது 4 பேர் சம்பவ இடத்திலே உயிரிழந்ததுடன், இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

விமானத்தில் இயந்திரக் கோளாறு ஏற்பட்ட தன் காரணத்தினால் அதனை அவசரமாக தரையிறக்க விமானி முற்பட்ட போது மின் கோபுரத்தில் மோதி தீப்பிடித்துள்ளது. இதுகுறித்த மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# படகுகளில் சென்ற 600 அகதிகள் மீட்பு



பர்மாவில் இருந்து இந்தோனேஷியாவை நோக்கி அகதிகளாகச் சென்ற 600 இற்கும் மேற்பட்டவர்கள் அசாஹ் கடல் பகுதியில் மீட்கப்பட்டனர் இந்தோனேசியாவின் வடக்கு அசாஹ் மாகாணதின் கடற்பகுதியில் இரண்டு படகில் அதிகளவிலானோர் தத்தளிப்பதாக மீட்புக்கு குழுவினருக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்று மீனவர்கள் உதவியுடன் கடலில் தத்தளித்தவர்களை மீட்புக்குழுவினர் மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்டவர்கள், அனைவரும் ரோகிங்க்யா சமூகத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. படகில் எரிபொருள் தீர்ந்ததனாலே நடுக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்ததாக மீட்புக்குழு செய்தி தொடர்பாளர் முஹகமது ஆரிப் முத்தாகின் தெரிவித்துள்ளார்.

மீட்கப்பட்டவர்களில் 50 பேரின் உடல் நிலை மோசமாகக் காணப்பட்டதனால் வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இவர்களில் சிலர் கடந்த 7 நாட்களுக்கு முன்னர் தாய்லாந்தை கடக்கும்போது இறந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் 25 ஆயிரம் ரோகிங்க்யா மற்றும் பங்காளதேச மக்கள் சட்டவிரோத படகு மூலம் இவ்வாறு பயணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சட்டவிரோதமாக வருவோரில் 300 இற்கும் மேற்பட்டோர் இதே கால நிலையினால் உயிரிழந்துள்ளனர் என ஐ.நா. மீட்புக்கு குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுமிகளை சந்தையில் விற்கும் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள்



பெண்கள் மற்றும் சிறுமிகளை கடத்திச் செல்லும் ஐ.எஸ் ஐ.எஸ். தீவிரவாதிகள், அவர்களை நிர்வாணப்படுத்தி சந்தைகளில் விற்பனை செய்து வரும் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

ஈராக் மற்றும் சிரியாவில் சில பகுதிகளை கைப்பற்றிய ஐ.எஸ் ஐ.எஸ். தீவிரவாதிகள் தனி நாடு அமைத்துள்ளனர்.

சிறுமிகளை ஆடு, மாடுகள் போன்று கப்பல்களில் அடைத்து தோகுக் மற்றும் மொசூல் நகருக்கு கொண்டு சென்று, அங்குள்ள "செக்ஸ்" சந்தையில் அவர்களை நிர்வாணப்படுத்தி நிற்க வைத்து விலைபேசி விற்கிறார்கள். விலைக்கு வாங்கப்படும் சிறுமிகள் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மஞ்றும் அந்த இயக்க தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு பாலியல் சித்திரவதைக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

ஒரு பெண் 20 பேரை கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வைக்கப்படுவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

திருமணம் நடைபெறும் ஒவ்வொரு முறையும் அந்த பெண்ணின் கற்பு நிலையை சரி செய்வதற்காக அறுவை சிகிச்சைகள் நடாத்தப்படுவதாகவும் தெரியவந்துள்ளது. ஐ.நா. சபையின் சிறப்பு செயலாளர் ஷைனாப் பங்குரா கடந்த ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை ஈராக், சிரியா, துருக்கி, லெபனான், ஜோர்டான் உள்ளிட்ட நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

அப்போது ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிர வாதத்தில் இணைந்து அங்கு "செக்ஸ்" அடிமைகளாகி பின் மீண்டு வந்த சிறுமிகளை சந்தித்துப் பேசியபோது, அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் இச்செய்தியை அவர் பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ளார்.

## அணு உலையில் தீ விபத்து

அமெரிக்க அணுமின் நிலையத்தின் டிரான்ஸ்பார்மரில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா நியூயோர்க் நகருக்கு வடக்கே 65 கிலோ மீற்றர் தொலைவில், புச்சனான் என்ற இடத்திலுள்ள இந்தி யன் பொயிண்ட் அணுமின் நிலையத்திலே இவ்வாறு தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

25 நிமிடங்களுக்கு பின்னர் தீ முழுமையாக அணைக்கப்பட்ட நிலையில், குறித்த பகுதியில் நீண்ட நேரம் புகை சூழ்ந்திருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு இந்த அணுமின் நிலையம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அணுசக்திப் பிரிவின் செய்தி தொடர்பாளர் கூறியுள்ளார். தீ விபத்துக்குள்ளான அணு உலை பாதுகாப்பாக உள்ளதாகவும் பொதுமக்களுக்கோ, அணுமின்நிலையத்தின் ஊழியர்களுக்கோ எந்த ஆபத்தும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் செய்த முறைப்பாட்டின் பேரில் அதிகளவிலான பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தீ விபத்து இடம்பெற்ற அணு மின்நிலையத்தின் 3 ஆவது பிரிவு அணு உலை உடனடியாக மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜே.ஆர் 1978....

*(5 ஆம் பக்கத் தொடர்ச்சி....)*

மே 1978 இல் ஸ்ரீ.ல.சு.க வின் இரண்டு பிரநிதிகளும் நாடாளுமன்ற தெரிவுக் குழுவிலிருந்து விலகினார்கள். 1977 தேர்தலில் இடதுசாரிக் கட்சிகள் யாவும் துடைத்தழிக்கப் பட்டதால் ட்ரொஸ்க்கிகளோ அல்லது கம்யுனிஸ்ட்களோ குழுவில் இடம்பெறவில்லை.

ஏற்கனவே இரண்டாவது திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி முறை இந்த புதிய வரைபு அரசியலமைப்பினூடாக நெறிப்படுத்தப்பட்டு அதனுடன் இணைக்கப்பட்டது. நிறைவேற்று ஜனாதிபதி இப்போது நாட்டின் தலைவரும் மற்றும் அரசாங்கத்தின் தலைவருமாக ஆகியுள்ளார். தொகுதி வாரியான தேர்தல் அமைப்பு முறையும் புதிய முறையான விகிதாசார பிரதிநிதித்துவமாக மாற்றப்பட்டது. இலங்கை ஒரு ஜனநாயக சோசலிச குடியரசாக மாற்றம் பெற்றது. 1978 செப்ரெம்பர் 7 இல் முறையாக பிரகடனப்படுத்தப்பட்ட புதிய அரசியலமைப்பு இப்போது பிரதானமாக ஜேஆர் அரசியலமைப்பு என்று அழைக்கப்பட்டது.

ஜனாதிபதி முறை நிறுவப்பட்டதின் பின்னர் பேராசிரியர் அல்பிரட் ஜெயரட்ணம் வில்சன் அதைத் தனது நூலான 'ஆசியாவில் கோசலிச முறை: இலங்கை அரசியலமைப்பு' என்பதில் ஆய்வு செய்தார். அதில் அவர் அவதானித்திருப்பது ஜெயவர்தனா எதன் பின்னால் சென்றிருக்கிறார் என்றால் உள்ளிருந்தோ அல்லது வெளியிலிருந்தோ அழுத்தங்கள் எதனாலும் எளிதில் அசைத்து விட முடியாத நிலையான நிறைவேற்று அதிகாரத்தின் பின்னால். முடிவில் இதன் விளைவு ஒரு ஜனாதிபதிக்கு சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பல வழிகளில் எதையும் செய்யக்கூடியதாக் பிரெஞ் ஜனாதிபதியை விட மிகவும் கூடிய அதிகாரத்தை கொடுத்துள்ளது. என்று.

பேராசிரியர் வில்சனின் அந்த விசேடமான கேள்விக்கு ஜெயவர்தனா பதிலளிக்கையில் ஜனாதிபதியினைச் சுற்றி இருப்பதற்காக ஆலோசகர்களை நியமிப்பது எனக்கு மிகவும் தயக்கமாக இருந்தது என்று நான் சொல்லியாக வேண்டும். அதற்கான காரணம் ஜனாதிபதியானவர் பிரதமர் மற்றும் அமைச்சரவை அமைச்சர்களையே தனது ஆலோசகர்களாக கொண்டிருக்க வேண்டும் என நான் விரும்புகிறேன் ஏனென்றால் நாடாளுமன்ற அங்கத்தவர்கள் என்கிற வகையில் அவர்கள் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள் என்றார்.

இருந்தபோதிலும் ஜெயவர்தனாவின் கருத்துக்கு முரணாக யதார்த்தத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு பின்னர் இலங்கையில் ஆட்சியானது முற்றிலும் மாற்றம் அடைந்தது என்றே சொல்ல வேண்டும். நிறைவேற்று ஜனாதிபதி முறை மதிப்புக் குறைந்த சட்டசபையை விட மேலாகவும் அதேபோல சுயாதீனமாகவும் இயங்கியது.

ஜேஆர். ஐ.தே.க. வின் ஆறில் ஐந்து நாடாளுமன்ற பலத்தின் மூலமாக நாடாளுமன்றத்தை முடக்கியதுடன் 1982 சர்வசன வாக்கெடுப்பு மூலமாக அதன் பதவிக் காலத்தை மேலும் நீட்டிப்புச் செய்தார். அரசியலமைப்பு சட்டங்கள் மூலமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்க தரப்பிலிருந்து எதிர் தரப்புக்கு கட்சி மாறுவதை தடுத்தார், எதிர்க்கட்சியில் இருந்து அரசாங்க தரப்புக்கு மாறுவதை அரசியலமைப்பில் மாற்றம் செய்தது மூலம் ஜேஆர் ஊக்குவித்தார். எஸ்.தொண்டமானைத் தவிர தனது அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து ஜேஆர். ராஜினாமா கடிதங்களை பெற்றிருந்தார்.

இதன்படி முதலாவது இலங்கை நிறைவேற்று ஜனாதிபதி ஜூனியஸ் ரிச்சட் ஜெயவர்தனா நடைமுறையில் ஒரு அரசியலமைப்பு சர்வாதிகாரியாக திகழ்ந்தார்.

# கல்விசாரா ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வியியற் கல்லூரி மற்றும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆகியவற்றிற்கு கடந்த ஆண்டு மார்கழி மாதம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் ஊடாக வழங்கப்பட்ட கல்விசாரா ஊழியர்களுக்கான அமைய அடிப்படையிலான நியமனங்கள் இலங்கை கல்விசாரா ஊழியர்களது தொழிற்சங்கத்தின் முயற்சியால் நிரந்தர நியமனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கை தொழிற்சங்க பொதுச்செயலாளர் விஜயசேகரா தலைமையிலான குழுவினர் இந்த கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைகள் மற்றும் அவர்கள் எதிர் கொள்ளும் அசௌகரியங்களை கவனத்திற் கொள்ளப்பட்டதன் அடிப்படையில் வடமாகாண கல்விசாரா ஊழியர் தொழிற் சங்கத்தின் செயலாளர் ஜெயராம் (ரமணன்) முயற்சியால் கடந்த மாதம் 6 ஆம் திகதி இவர்களது நிரந்தர நியமனத்திற்கான நேர்முகத்தெரிவு கொழும்பில் நடைபெற்றது.

அதனடிப்படையில் கடந்த மாதம் 10 திகதியிலிருந்து கல்வியியற் கல்லூரி மற்றும் ஆசிரியர் கலாசாலை ஆகியவற்றில் அமைய அடிப்படையில் தொழில் புரிந்துவந்த ஊழியர்கள் அனைவரும் நிரந்தர நியமனம் பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிதி மோசடி பிரிவுக்கு எதிராக கோத்தா மனு

தன்னைக் கைது செய்ய எடுக்கப்படும் முயற்சிகளைத் தடுக்கக் கோரி முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உயர்நீதிமன்றில் நேற்று மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார். தன்னுடைய அடிப்படை மனித உரிமை மீறப்படுவதாகக் குறிப்பிட்டே அவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். தன்னைக் கைது செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை தடுத்து தடை உத்தரவு பிறப்பிக்குமாறும் அவர் தனது மனுவில் கோரியுள்ளார். மனுவின் பிரதிவாதிகளாக ஜனாதிபதியின் செயலாளர், பொலிஸ்மா அதிபர், பொலிஸ் நிதி மோசடி பிரிவின் பிரதி பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட அறுவர் பெயரிடப்பட்டுள்ளனர்.

# எரிபொருள் விலை அதிகரிக்காது

## சம்பிக்க உறுதி

(கொழும்பு)

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட மாட்டாதென மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மேலும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொய்ப் பிரசாரங்களை முன்வைத்து பொது மக்கள் மற்றும் சந்தையில் அச்சத்தை ஏற்படுத்த சிலர் முயற்சித்து வருவதால் பொறுப்புடன் இந்தத் தகவலை வழங்குவதாக அமைச்சர் கூறியுள்ளார்.

மின்சக்தி அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மைத்திரி ஆட்சியில் வழங்கிய எரிபொருள் நிவாரணத்தை மீளப் பெறப்போவதில்லை என பாட்டளி சம்பிக்க ரணவக்க கூறினார்.

நட்டம் ஏற்பட்டுள்ளதால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை விற்பனை செய்யவுள்ளதாக வெளியான தகவல் பொய் என்றும் கடந்த 3 மாதங்களில் 17 பில்லியன் இலாபம் ஈட்டியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஊழலில் நிறைந்தது என்று சொல்லப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் கடந்த மூன்று மாதங்களாக நேர்மையான நிர்வாகம் நடைபெறுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# வடக்கில் கடும் காற்று எச்சரிக்கை

(முல்லைத்தீவு)

கிளிநொச்சி, முல்லைத்தீவு கடலில் நேற்றிரவு கடும் காற்று வீசும் என்பதினால் கடற்றொழிலாளர்கள் ஒருவரையும் தொழிலுக்குச் செல்லவேண்டாமென முல்லைத்தீவு மாவட்டச் செயலக இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவித்திருந்தது.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் கீழுள்ள 26 கடற்றொழிலாளர் சங்கங்களூடாக கடற்றொழிலாளர்களுக்கு இத்தகவல் அறிவிக்கப்பட்டிருந்தது. 70 தொடக்கம் 80 கிலோ மீற்றர் வேகத்தில் இக்காற்று வீசும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. (160)

## வடக்கில்...

அறிக்கை ஒன்றை, ஐ.நா. அமைப்பான சிறுவர் பாதுகாப்பு அமைப்பு கடந்த 5 ஆம் திகதி வெளியிட்டுள்ளது.

போசாக்கு குறைபாட்டினால் அம்பாறை, திருகோணமலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் உள்ள சிறுவர்கள் வளர்ச்சிக் குறைவை எதிர்நோக்கியுள்ளதாக, சிறுவர் பாதுகாப்பு அமைப்பின் பணிப்பாளர் வில்லியம் லிஞ்ச் தெரிவித்துள்ளார்.

தாய்மார் மற்றும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் நிலை தொடர்பாக 179 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், இந்த ஆண்டு இலங்கை 91 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு ஆண்டுக்கு முன்னர் இலங்கை 89 ஆவது இடத்தில் இருந்தது. இது கவலை தரும் நிலை என்றில்லா விட்டாலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில், சுகாதாரம் மற்றும் போசாக்கு சமத்துவமின்மை நிலவுகிறது என்றும் வில்லியம் லிஞ்ச் தெரிவித்துள்ளார்.

நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைக்கப்படாதமையால், பருவமழை காரணமாக, வடக்கு கிழக்கில் போருக்குப் பிந்திய சூழல் கவலைக்குரியதாக உள்ளது.

வடக்கிலுள்ள மக்களின் போசாக்கு நிலையை முன்னேற்ற நீண்டகாலத் திட்டம் செயற்படுத்தப்படாமை முக்கியமான மற்றொரு க்வலைக்குரிய விடயமாக உள்ளது.

நுவரெலியாவிலும் கூட வளர்ச்சிக் குறைபாடு முக்கிய பிரச்சினையாக இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சஜின் வாஸ்...

வந்தார். கோட்டே நீதவான் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட சஜின் வாஸ் குணவர்த்தனவை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தேர்தல்...

சமர்ப்பிப்பது தொடர்பிலும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இந்த உத்தேச சட்டத்தில் ஏதேனும் மாற்றங்கள் இருந்தால் இன்று நண்பகலுக்கு முன்னதாக ஜனாதிபதி செயலகத்திற்கு முன்வைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டதன் பின்னர் மற்றுமொரு சுற்று பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## வலி. வடக்கில்...

இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுவிக்கப்பட்ட வலி.கிழக்கு, வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவுகளில் தொடர்ச்சியாக குண்டுகள், வெடிபொருட்கள் என்பன மீட்கப்பட்டு வருகின்றன. பெரும்பாலான குண்டுகள் கிணற்றிலிருந்தே மீட்கப்படுகின்றன. இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இராணுவத்தினரின் கண்ணி வெடி அகற்றும் பிரிவு மற்றும் ஹலோ ட்ரஸ்ட் என்பன இந்தப் பகுதிகளில் ஏற்கனவே சோதனை செய்துள்ளன. இருப்பினும் இவ்வாறு மீட்கப்படுவதனால் அந்தப் பகுதிகளிலிலுள்ள கிணறுகளை மீளவும் சோதனை செய்வதற்கு அவர்கள் இணங்கியுள்ளனர்.

இராணுவத்தினரின் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரைப் பயன்படுத்தி விரைவில் கிணறுகளில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று அரச அதிபர் கூறியுள்ளார்.

## ஜெயா விடுதலை...

சசிகலா, இளவரசி மற்றும் சுதாகரன் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

18 ஆண்டுகளாக இடம்பெற்று வந்த சொத்துகுவிப்பு வழக்கில் இருந்து ஜெயலலிதா விடுதலை செய்யப்பட்ட மகிழ்ச்சியை அ.தி.மு.க. தொண்டர்கள் கொண்டாடி வருகின்றனர்.

இந்தநிலையில் ஜெயலலிதா மீண்டும் தமிழக முதலமைச்சராகவுள்ளார் என தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி இந்த வழக்கை விசாரணை செய்த கர்நாடக சிறப்பு நீதிமன்றம் ஜெயலலிதா குற்றவாளி என தீர்ப்பு வழங்கி நான்கு வருட சிறைத்தண்டனையும் 100 கோடி ரூபா அபராதமும் விதித்தமை குறிப்பிடத்தக்கது.

பாரதீய ஜனதா கட்சியின் தலைவராக இருந்த சுப்பிரமணிய சுவாமியினால் கடந்த 1996 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் திகதி அன்றைய தமிழக ஆளுநர் சென்னா ரெட்டியின் அனுமதியுடன் தாக்கல் செய்யப்பட்டது ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கு.

1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நான்காம் திகதி வரை முதன் முறையாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பொறுப்பேற்றிருந்தார்.

இக்கால கட்டத்தில் இவர் தன் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்தார் எனத் தெரிவிக்கப்பட்டு சொத்துக்குவிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துகொண்ட சென்னை அமர்வு நீதிமன்ற நீதிபதி ராமமூர்த்தி இந்த விடய்ம் குறித்து தமிழக ஊழல் மற்றும் கண்காணிப்புத் துறையின் விசாரணைக்கு உத்தரவிட்டார்.

இந்த நிலையில் விசாரணைகளை மேற்கொண்ட ஊழல் மற்றும் கண்காணிப்பு துறை ஜெயலலிதாவின் சொத்து 66.65 கோடி ரூபா என மதிப்பிட்டது.

இதேபோல் போயஸ் கார்டனிலுள்ள ஜெயலலிதாவின் வீட்டை சோதனையிட்டபோது, 800 கிலோ வெள்ளி, 28 கிலோ தங்கம், 750 சோடி காலணிகள், 10 ஆயிரத்து 500 புடவைகள், 91 கைக்கடிகாரங்கள் என பல பொருட்களை கைப்பற்றப்பட்டு ரிசர்வ் வங்கியின் காப்பகத்தில் வைக்கப்பட்டது.

1997 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஊழல் தடுப்பு சட்டத்தில் இந்த வழக்கு தொடரப்பட்டது. இந்த நிலையில் 2000 ஆம் ஆண்டு வழக்கு ஆரம்பிக்கப்பட்டு 250 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

எனினும் 2002 ஆம் ஆண்டு மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, 76 சாட்சிகள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டன. இதில் 46 பேர் பிறழ் சாட்சிகளாக மாறினர்.

இந்த விசாரணை இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது திராவிட முன்னேற்றகழக பொதுச்செயலாளர் அன்பழகன் இந்த வழக்கை வேறு மாநிலத்திற்கு மாற்றுமாறு உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார்.

இந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு கர்நாடக மாநில பெங்களூர் நீதிம்ன்றிற்கு வழக்கு மாற்றப்பட்டு 2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி புதிய நீதிபதி, புதிய சட்டத்தரணிகளின் கீழ் கர்நாடகாவில் இவ்வழக்கு விசாரணைகள் ஆரம்பமாகின.

இந்த நிலையில் 2005 ஆம் ஆண்டு அரச சட்டத்தரணியாக ஆச்சார்யா தெரிவாகியதுடன், மீண்டும் வழக்கை ஆரம்பிக்க முற்பட்டபோது நீதிமன்றில் ஆஜராகாமல் ஜெயலலிதா வீட்டில் இருந்தே கேள்விகளுக்கு பதிலளிக்க நீதிமன்றில் அனுமதி பெற்றிருந்தார்.

2013 ஆம் ஆண்டு மீண்டும் அரச சட்டத்தரணியாக பவானிசிங் நியமிக்கப்பட்ட அதேவேளை, புதிய நீதிபதியாக ஜோன் மைக்கல் குன்ஹா நியமிக்கப்பட்டார்.

2014 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் மைக்கல் குன்ஹா ஜெயலலிதா குற்றவாளி எனவும் ஜெயலலிதாவிற்கு 100 கோடி ரூபா அபராதமும், சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகிய மூவருக்கும் தலா 10 கோடி ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

தான் குற்றவாளி என வழங்கப்பட்ட தீர்ப்பை நிறுத்தி வைக்க வேண்டும் எனவும் பிணை வழங்க வேண்டும் எனவும், குன்ஹா வழங்கிய தீர்ப்பை இரத்து செய்யக் கோரியும் ஜெயலலிதாவின் சட்டத்தரணி கர்நாடாக உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துகொண்ட உயர் நீதிமன்ற நீதிபதி அதற்கு மறுப்பு வெளியிட்டதை தொடர்ந்து ஜெயலலிதா தரப்பினர் உயர் நீதிமன்றத்தை நாடினர்.

இந்த நிலையில் ஒக்ரோபர் 17 ஆம் திகதி ஜெயலலிதாவிற்கு பிணை வழங்கியதை தொடர்ந்து 21 நாட்கள் சிறையிலிருந்த ஜெயலலிதா விடுதலை செய்யப்பட்டார்.

இதேவேளை டிசம்பர் 18 ஆம் திகதிக்கு முன்னர் மேன் முறையீட்டு ஆவணங்கள் அனைத்தையும் கர்நாடக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட வேண்டும் என்பன உள்ளிட்ட நிபந்தனைகளோடு பிணை வழங்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக ஜெயலலிதா தரப்பு கர்நாடக உயர்நீதிமன்றத்தில் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 17 ஆம் திகதி அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்தது. அதையடுத்து உச்சநீதிமன்றம் நான்கு பேருக்கும் நான்கு மாதத்துக்கு பிணை வழங்கியிருந்தது.

இதேவேளை பவானிசிங் தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ள முடியாது என திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் விசாரணைக்கு எடுத்து கொண்ட நீதிபதி அவரின் வாதம் செல்லாது என தீர்ப்பளித்தார்.

இதனைத் தொடர்ந்து கர்நாடக அரசின் சார்பில் சட்டத்தரணி ஆச்சார்யா தனது வாதத்தை எழுத்து மூலமாக தெரிவித்தார்.

இதையடுத்து யார் இந்த வழக்கில் புதிய நீதிபதியாக வருவார்கள் என தமிழகமே எதிர்பார்த்துக்கொண்டிருந்த நிலையில், கர்நாடக உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி வஹேலா, கர்நாடக உயர்நீதிமன்றத்தின் சிறப்பு அமர்வு நீதிபதியாக சி.ஆர். குமாரசாமியை அறிவித்தார்.

நேர்மையான அமைதியான மனிதர், இதுவரை எந்த ஒரு ஊழல் குற்றச்சாட்டுக்கும் ஆளாகாதவர். மிகுந்த பரபரப்பாக செயல்படாதவராக இருந்தாலும், ஆவணங்களையும், சாட்சிகளையும் அடிப்படையாக வைத்தே இவருடைய தீர்ப்பு இருக்கும் என நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அ.தி.மு.க. தொண்டர்களின் எதிர்பார்ப்பை அடுத்து நேற்று கர்நாடக உயர் நீதிமன்றத்தில் ஜெயலலிதா உட்பட நான்கு பேரின் வழக்கு விசாரணை நிராகரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாணவன் மீது தாக்குதல்

நாரந்தனையில் இளைஞர் குழு ஒன்றின் தாக்குதலுக்கு இலக்காகி பாடசாலை மாணவன் ஒருவன் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாரந்தனை கணேசா வித்தியாசாலையில் சாதாரண தரத்தில் கல்வி கற்ற நாரந்தனை வடக்கு நாரந்தனையைச் சேர்ந்த சச்சிதானந்தம் சஜீவன் (வயது - 17) என்ற மாணவனே படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் தனியார் கல்வி நிலையத்திற்கு சென்று திரும்பிய மாணவன் மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தடிகள், இரும்புக் கம்பிகளால் இவ்வாறு மோசமான முறையில் தாக்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் மேற்கொண்ட குழு குறித்த மாணவனை தாக்குதலின் பின்னர் தூக்கி எறிய முற்பட்டபோது அயலவர் கூக்குரலிடவே அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது. எனினும் தாக்குதல் மேற்கொண்டவர்கள் தமக்கு தெரியும் என மாணவன் விசாரணையின் போது தெரிவித்துள்ளார். (இ)

## நீச்சல் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கம்பகா மாவட்ட கிளையினால் யாழ்ப்பாணத்தில் நீச்சல் பயிற்சி எதிர்வரும் 18ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை நடாத்தப்படவுள்ளது.

பிரதேச செயலக ரீதியாக இயங்கும் கிளைகள் தலா 5 பேர் வீதம் இந்தப் பயிற்சிக்கு அனுப்பிவைக்குமாறும், இந்தப் பெயர் விபரங்களை நாளைய தினத்திற்கு முன் அறியத் தருமாறும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட கிளைத் தலைவர் பாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (08)

# மடத்தில் தங்கியிருந்த முதியவர் மரணம்



(நெல்லியடி)

செல்வச்சந்நிதி ஆலய மடத்தில் தங்கியிருந்த முதியவர் ஒருவர் நேற்று மரணமடைந்துள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஆலய மடத்திற்கு வந்து தங்கியிருந்த முதியவரே உயிரிழந்துள்ளதாகவும் இவரது சடலம் அடையாளம் காண்பதற்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் வல்வெட்டித்துறை பொலிஸார் அறிவித்துள்ளனர். (18)

# உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்படுவது நிச்சயம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சர் ராஜித சேனாரத்ன பேருவளையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தார்.

மார்ச் மாதம் 30 ஆம் திகதியுடன் நிறைவடையவிருந்த உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிக்காலத்தை 15 ஆம் திகதி வரை நீடித்தோம். எனினும் அவர்களின் நிர்வாக நடவடிக்கைகளில் எந்த மாற்றமும் காணப்படவில்லை. எனவே, அவற்றை கலைப்பதைத் தவிர வேறு வழியில்லை.

மேலும் நாம் கொடுக்கும் சலுகைகளை இவர்கள் இயலாமையாக கருதுகின்றனர் எனினும் அவ்வாறு இல்லை. மனிதாபிமானத்திற்காகவே இவற்றை செய்கின்றோம். பண்டாரநாயக்கவையும் இவ்வாறு தான் எண்ணினார்கள் குண்டர்கள் சாயலுடைய தலைவர்களே எமது நாட்டு மக்களுக்கு தேவை ஆனால் எமது ஜனாதிபதி அனைவருக்கும் செவிசாய்த்து அகிம்சையாக செயற்படுகின்றார். அவருக்கும் முதுகெலும்பு இல்லை என கூறுகின்றனர். அவர் மிகவும் சிறந்த வகையில் அரச நிர்வாகத்தை முன்னெடுத்து வருகின்றார் என இதன் போது அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.



யாழ். புறநகர் பகுதியான மொம்மைவெளி வீதியில் நேற்று மாலை நடைபெற்ற விபத்தின்போது தடம்புரண்ட நிலையில் வாகனம் ஒன்றைக் காணலாம். (படம் : 25, க)

# மக்களுக்கு துரோகமிழைப்பவர்கள் யார்? மக்கள் சரியாக அடையாளம் காணவேண்டும்

## சந்திரகுமார் எம்.பி. கோரிக்கை



(பரந்தன்)

தமிழ்த் தேசியவாதிகள் என்றும் தமிழ் உணர்வாளர்கள் என்று தம்மை இனம்காட்டிக் கொண்டிருப்பவர்களே தமிழ் மக்களுக்கு துரோகமிழைத்துக் கொண்டிருக்கின்றனர் அவ்வாறானவர்களின் செயற்பாடுகளால் இன்று பல ஏழைக் குடும்பங்கள் முன்னேற முடியாது தவித்துக்கொண்டிருக்கின்றன. என நாடாளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார். நேற்று கிளிநொச்சி பெரிய பரந்தனில் மக்களுடன் கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்.

பெரிய பரந்தனில் பல ஏழை மக்கள் இருப்பிடத்திற்காய் ஏங்கிக் கொண்டிருக்கும் நிலைமையினை நாம் பார்க்கின்றோம் கடந்த பல தசாப்பதங்களுக்கு முன்னர் காடுகளை வெட்டி அவற்றை வயல் நிலங்களாக்கி பயிர் செய்ததோடு அங்கேயே குடியிருந்து வந்த மக்கள் இன்று இருப்பிடமின்றி தவிக்கும் நிலை உருவாகியுள்ளது அவர்கள் குடியிருக்கும் நிலங்கள் எப்போதும் பறிபோகும் என்ற அச்சத்தை அம்மக்களின் மனங்களில் சிலர் விதைத்துள்ளனர். கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக வாழ்ந்துவரும் ஏழை மக்களை அவர்களின் இருப்பிடங்களில் இருந்து வெளியேற்றுவதற்கு அந்தக்காணிகளின் உரிமையாளர்கள் எனக்கருதிக்கொள்வோர் முயற்சிக்கின்றனர் அதற்கு சட்டத்தரணிகளும் கல்வி மான்களும் பக்கதுணையாக செயற்படுகின்றனர்

செல்வந்தர்களின் நலனைப் பாதுகாப்பதனூடாக வருமானத்தை ஈட்டுவதிலேயே அவர்கள் குறியாக இருக்கின்றனர் அவ்வாறானவர்களும் ஏழைகளின் பக்கம் திரும்பிப்பார்த்திருந்தால் இன்று கண்ணீரில் வாடும் பல ஆயிரக்கணக்கான மக்களின் துயரங்களுக்கு தீர்வு கிட்டியிருக்கும். இந்நிலையில் கடந்த மூன்றுவருடங்களாக நாம் தனித்து மேற்கொண்டு வந்த முயற்சியின் பயனாக கண்டாவளை நாதன்திட்ட மக்களின் காணிப்பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதற்கான வாய்ப்பினை உருவாக்கியுள்ளோம் அதனால் அந்த மக்கள் எதிர்கொண்டுவரும் துயரங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என நாம் எதிர்கார்க்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் 5.00 மணிக்கு பெரிய பரந்தன் பகுதிக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் அங்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் தேவைகளையும் கேட்டறிந்தார். இதன்போது அங்கு வருகைதந்திருந்த மக்கள் தாம் எதிர்கொண்டுவரும் காணிப்பிணக்கு உட்பட பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுத்தர வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரிடம் கேட்டுக்கொண்டதோடு ஏழைகளின் பக்கம் திரும்பிப் பார்க்காகாத அரசியலை தாம் ஆதரிக்கப போவதில்லை என்பதையும் திடமாக வெளிப்படுத்தினர். இக்கலந்துரையாடலின் போது வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் மனோகரன் மற்றும் கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகளும் உடனிருந்ததனர்.

# பிரதேச செயலர் இடமாற்றம்; கண்டித்து மக்கள் போராட்டம்

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலரின் இடமாற்றத்தை நிறுத்தக்கோரி செட்டி குளத்தில் நேற்று மக்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

செட்டிகுளம் பிரதேச கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் இனமத பேதமின்றி சுமார் 300 இற்கும் அதிகமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

செட்டிகுளம் பொது விளையாட்டு மைதானத்தில் இருந்து மன்னார் மதவாச்சி வீதி வழியாக செட்டிகுளம் பிரதேச செயலகம் வரை ஊர்வலமாகச் சென்ற பொது மக்கள் பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



இதன்போது "எமது பிரதேச செயலாளரின் இடமாற்றத்தை உடன் நிறுத்து", "மாற்றாதே மாற்றாதே பிரதேச செயலரை மாற்றாதீர்", "இனமத பேதமற்ற சேவையாளனை இடம்மாற்றாதீர்" போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை தாங்கியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் பிரதேச செயலாளரை மாற்றம் செய்ய வேண்டாம் எனக் கோரி ஜனாதிபதி மற்றும் வவுனியா அரசாங்க அதிபருக்கு ஒப்படைப்பதற்காக செட்டிகுளம் உதவித்திட்ட பணிப்பாளாரிடம் மகஜரொன்றினையும் ஆர்ப்பாட்டக் காரர்கள் வழங்கியிருந்தனர்.

# ஊடக சீர்திருத்தம்; தேசிய மாநாடு

(கொழும்பு)

கருத்து வெளியிடும் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் வகையிலும் எமது நாட்டின் ஊடகத்துறையினை அபிவிருத்தி செய்வதற்கான முறையினை உருவாக்கும் நோக்கிலும் வெகுசன ஊடகச் சீர்திருத்தங்கள் தொடர்பான தேசிய மாநாடு ஒன்று நாளை முதல் கொழும்பு சிறிலங்கா பவுன்டேஸன் இன்சிரியுற்றில் (Sri Lanka Foundation Institute) இடம்பெறவுள்ளது.

இம் மாநாட்டினை வெகுசன ஊடாக அமைச்சு, கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், சர்வதேச ஊடக ஒத்துழைப்பு ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

இம்மாநாட்டின் இறுதி அமர்வு மே மாதம் 14 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின் பங்களிப்புடன் இடம்பெறவுள்ளது.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மே 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.